
ஆகஸ்ட் 30 - செப்ரெம்பர் 05, 2004 32 பக்கங்கள்
August 30 - September 05, 2004 REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

(4)

# சுடர் ஒளி

සුඩර් ඔළි

வார மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா ஆட்சியைக் கவிழ்ப்பதா, விடுவதா!

## தடுமாறும் தி.மு.க.

இந்தியாவின் பிராந்தியக்கட்சிகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மத்திய அரசில் பங்காளிகளாக இருக்கின்றன. முன்னைய காலங்களில் காங்கிரஸ் கட்சி தனிக்காட்டு ராஜாவாக மத்தியில் தனித்து ஆட்சியை நடத்தியபோது, எதிரிகளானசிறு பிராந்தியக் கட்சிகள் ஆட்சிசெய்யும் மாநிலங்களை 356 ஆவது அரசமைப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி கலைப்பது வழக்கமாக இருந்தது.

இப்போது அந்த காங்கிரஸ் கட்சியே



– அப்துல் கலாம் –

பத்துக்குமேற்பட்ட பிராந்தியக் கட்சிகளின் தயவில்தான் மத்தியில் ஆட்சி நடத்துகிறது. இப்படி இருக்கும்போது தனது எதிரிகளான கட்சிகள் ஆளும் மாநிலங்களின் அரசுகளை கலைப்பது முன்போல காங்கிரஸ் கட்சிக்கு அவ்வளவு எளிதாக இராது.

இது தவிர மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் காங்கிரஸ், லல்லுப் பிரசாத் யாதவின் கட்சி ஆகியவற்றுக்கு அடுத்து அதிக எம். பிகளைக் கொண்ட கட்சியாக விளங்கும் தி.மு.க கடந்த காலங்களில் 356 ஆவது சட்டத்தை கடுமையாக எதிர்த்து வந்த கட்சி ஆகும்.

1991இல் பிரதமர் சந்திரசேகர் தனக்கு ஆதரவு தந்த ராஜீவ் காந்தியின் உத்தரவுக்குப் பணிந்து தி. மு. க அரசைக் கலைத்தார். அந்தவேதனை கருணாநிதி நெஞ்சில் இன்னும் உண்டு. இதனால் ஆழமான வெறுப்பு 356 ஆவது சட்டத்தின் மீது கருணாநிதிக்கு இருக்கிறது. 356 ஆவது சட்டத்தைக் கொண்டு ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்க கோரமாட்டேன் என கடந்த காலங்களில் அவர் பகிரங்கமாகக் கூறிவந்தார். அச்சட்டம் ஜனநாயக விரோதம் எனவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் ஜெயலலிதா அரசைக் கலைக்க இப்போது சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. ஆனால் தனது 356 ஆவது சட்ட எதிர்ப்பை தி. மு. க. கைவிட நேரிடும். முன் கூறியது போல மத்தியில் ஆளும் கூட்டணியிலுள்ள பல பிராந்தியக் கட்சிகள், 356 ஆவது சட்டம் பயன்படுத்தப்படுவதை எதிர்க்கவும் கூடும். இது தவிர 356 ஆவது சட்டமூலத்தை பயன்படுத்தி ஒரு மாநில அரசை கலைப்பதானால், அதற்கு நாடாளுமன்றின் லோக்சபா, ராஜ்யசபா ஆகிய இரு அவைகளிலும் ஒப்புதல் பெறவேண்டும். அதன் பின்பு ஜனாதிபதி அதை அங்கீகரிக்க வேண்டும்.


ஜெயலலிதா அரசை இந்த சட்டத்தை கொண்டு கலைப்பதாயின் நாடாளுமன்ற இரு அவை ஒப்புதலும் பெறுவது இயலுமாயினும், அப்துல் கலாம் முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு மத்திய அமைச்சரவைக்கு திருப்பி அனுப்பலாம். அப்துல் கலாம் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் முஸ்லிம். ஜெயலலிதா தமிழகத்தைச் சேர்ந்த ஜனாதிபதிகளுக்கு கடந்த காலங்களில் போதிய கௌரவம் கொடுத்துள்ளார்.

1992 இல் அவர் முதல்வராக இருந்த போது முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் தமிழக அரசால் முன்னாள் ஜனாதிபதிக்கு சென்னையில் குடியிருக்க வீடு வழங்கப்பட்டது. கலாமுடனும் ஜெயலலிதாவுக்கு நல்லுறவு உண்டு. ஜெயலலிதா அரசை கலைக்கும் முடிவை கலாம் அங்கீகரிக்காமல் விடக்கூடும். மேலும் மாநில அரசொன்றை கலைப்பதாயின் மாநில ஆளுநரின் பரிந்துரை அவசியம்.

தமிழக ஆளுநர் ராம் மோகன்ராவ் முன்னைய பி. ஜே. பி அரசினால் நியமிக்கப்பட்டவர். ஜெயலலிதா கடந்த காலங்களில் மாநில ஆளுநர்களுடன் முட்டி மோதியிருந்தாலும் இந்த ஆளுநருடன் அவருக்கு நல்ல உறவு உண்டு. ஆக ராம்மோகன் ராவ் ஜெயலலிதா ஆட்சியை கலைக்கும் தீர்மானத்தை மத்திய அமைச்சரவைக்கு பரிந்துரை செய்யமாட்டார்.

மேலும் இன்னோரன்ன காரணிகளால் ஜெயலலிதா என்ற பெண்மணி தனது பதவியில் 2006 வரை நீடிப்பது சாத்தியமே.

சமீபத்தில் நடந்துமுடிந்த சேலம் தி.மு.க



– கருணாநிதி –

மாநாட்டிலும் ஜெயலலிதா ஆட்சியை கலைக்கக் கோரப்போவதில்லை என கருணாநிதி கூறியுள்ளார்.

மாபெரும் மக்கள் கூட்டம் திரண்ட இந்மாநாடு தி.மு.கவுக்கு பெருகிவரும் ஆதரவைக்காட்டியது. ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் வந்தால் தி. மு. க ஆட்சியைப் பிடிப்பது நிச்சயம் என்பது தெளிவாக இந்த மக்கள் கூட்டத்திலிருந்து தெரிந்தது.

சாதாரண தி. மு. க தொண்டர்கள் ஜெயலலிதா ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என விரும்புகிறார்கள். 1991 இல் ஜெயலலிதா ராஜீவையும், சந்திரசேகரையும் தூண்டிவிட்டு தி.மு.க அரசைக் கவிழ்த்தவர் தானே! அவரது அரசை கவிழ்ப்பதில் எந்த பழி பாவமும் கிடையாது என்பது இவர்களது எண்ணம்.

கருணாநிதியோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறார். காரணம் அவருக்கோ வயதாகிறது. அவருக்கு மரணம் வரும்போது அவர் முதல்வராகவோ அல்லது மு.க. ஸ்டாலின் முதல்வராகவோ இருப்பது பெரும் கௌரவம். ஜெயலலிதா ஆட்சியைகவிழ்க்காமல் பார்த்துக்கொண்டிருந்தால் 2006 வரை இருக்க வேண்டியதுதான். ஆனால் கவிழ்ப்பதோ முன்போல இலகுவான காரியமல்ல. தனித்து தி. மு. க - காங்கிரஸ் ஆட்சி மத்தியில் நடந்தால் இன்றைக்கு எப்போதோ ஜெயலலிதா ஆட்சி கலைக்கப்பட்டிருக்கும். நடப்பதோ பல பிராந்திய கட்சிகளின் தயவிலான காங்கிரஸ் ஆட்சி.



– ஜெயலலிதா –

எனவே கருணாநிதிக்கு யதார்த்தம் புரிந்துள்ளது. அதுதான் அவரது தடுமாற்றத்துக்கு காரணம். ஜெயலலிதாவின் அதிஷ்டம் தேர்தலில் படுதோல்வியுற்றாலும் தப்பிப் பிழைக்கிறார்.

1992 இல் பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து ராஜஸ்தான், மத்தியப்பிரதேஷ், ஹிமாசல் பிரதேஷ், உத்தரபிரதேஷ் ஆகிய மாநிலங்களின் பி.ஜே.பி. அரசுகளை காங்கிரஸ் கட்சி கலைத்ததன் பின்பு இற்றைவரை 12 ஆண்டுகளாக 356ஆவது சட்டத்தைப் பயன்படுத்திஎந்தஒரு பெரிய மாநில அரசும் கலைக்கப்படவே இல்லை என்பது ஜெயலலிதாவுக்கு மேலதிக தெம்பூட்டும் விஷயமாகும்.

1999 இல் பி.ஜே.பி அரசு பீகார் மாநிலத்தில் பதவியிலிருந்த லல்லு பிரசாத்தின் மனைவி ரப்கி தேவியின் அரசை கலைக்க முடிவெடுத்தது. ஆனால், ராஜ்யசபாவில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையாக இருந்ததால் பி.ஜே.பி.யால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றமுடியாமல் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது. இது 356 ஆவது சட்டத்தால் ஆட்சியை கவிழ்ப்பது பழைய கதையாகிவிட்டதையே காட்டுகிறது.

அப்படிப்பார்க்கும் போது ஜெயலலிதா அதிஷ்டசாலிதான். ஆனால், 2001 இல் ஆட்சிக்கு வந்தவுடன் கருணாநிதி, மாறன் உள்ளிட்டத்தலைவர்களை கைது செய்தது போன்ற அட்டகாசங்களை அவர் போட்டால் ஒரு வேளை அதைச் சாட்டாக வைத்து ஆட்சியைக் கலைக்கலாம்.

யார் கண்டது, அப்படி முடிவுகளை அவர் எடுக்க மாட்டாரென, ஏனெனில் பைத்தியக்காரத்தனமான முடிவுகளை எடுப்பதில் அவர் பேர் போனவர்.

- எஸ். சுரேந்திரஜித்-

## ‘சுடர் ஒளி’ வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ.45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M.cl | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. (250-300 Col. Cms) | ரூ. 70.00 | ரூ. 110.00 |

## வாசகர் இதயம் பேசுகிறது

*வதனி, பூநகரி.*

உனக்கு எனது வந்தனங்கள் உரித்தாகட்டும். திங்கள் தோறும் உனது வரவை எதிர்பார்க்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ தாங்கி வரும் அம்சங்களில் என்னைக் கவர்ந்தவை பித்தன் பதில்கள், மருத்துவ ஆலோசனை, சமையல்குறிப்பு, கவிதை, சினிமாப்பகுதி, சிறுகதை, விளையாட்டுச் செய்திகள், சிறுவர் பகுதி. சுடர் ஒளியே உன் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

*பி.சிவராமகிருஷ்ணன், சாமிமலை*

இதயமெனும் இன்பப் பத்திரிகையே!
மதியை வளர்த்திடும் மகிழ்வித்தாரகையே!
கலை அம்சம் பல தாங்கி விலை இல்லா
மகிழ்ச்சி தருவது
நெற்றியின் சுடராய் விளங்குவது
குறைகள் பலதைத் தீர்ப்பது
ஓங்கி வாழ்க, வளர்க, உயர்க.

*ரி.எஸ்.சயந்தன், வட்டுக்கோட்டை.*

எண்திசை எங்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சுடர் ஒளியே! உன் புனிதமான பணி இனிதே தொடரட்டும். வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்கவைப்பதில் சுடர் ஒளி, சுடர் ஒளியே தான். அந்த வகையில் ஆகஸ்ட் 02 – 08 இதழில் வெளிவந்த சிறுகதைகள் இரண்டும் என் மனதை உருக்கி விட்டன. அதுவும் ‘வாடிய மொட்டு’ என்ற குறுங்கதை இன்றைய காலகட்டத்தில் பெண் பிள்ளைகளுக்கு வெளிநாட்டுமாப்பிள்ளை தேடித் திரியும் பெற்றாருக்குப் படிப்பினை ஆக அமைந்துள்ளது. படைப்பாளிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

சுடர் ஒளியே உன் பணி இனிதே தொடரட்டும்.

வாழ்க சுடர் ஒளி!
வளர்க உன் புகழ்!!
தொடர்க உன் பணி!!!

*ந.கலைவாணி, நெடுங்கேணி.*

எட்டுத்திசை எங்கும் ஓங்கி ஒலிக்கும் சுடர் ஒளியே! நீ தாங்கி வரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அருமையிலும் அருமை. அவற்றில் எனக்கு மிகவும்பிடித்தவை பித்தன் பதில்கள், கவிதைப்புனல் போன்றவை. சுடர் ஒளியே உன் சேவை மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

*எஸ்.வசந்தி, வட்டக்கச்சி.*

எனது பிரியமான சுடர் ஒளியே!

. உனது படைப்புக்கள் அனைத்தும் அற்புதம். அத்துடன் எனது அபிமான எழுத்தாளர் ச.முருகானந்தன் அவர்களின் அண்மையில் வெளிவந்த ''எண்ணங்கள் மாறலாம்'' எனும் சிறுகதை சூப்பராக இருந்த தோடு கதையின் முடிவினை வித்தியாசமாகக் கொண்டுசென்று என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டார்.





இவ்வாறான படைப்புக்களைத் தொடர்ந்தும் அவர் வாசகர்களுக்காகத் தர வேண்டுமெனக் கூறிவிடைபெறுகின்றேன்.

‘ஒளிர்க சுடர் ஒளி’

*கே.ரூபவதனி,வட்டுக்கோட்டை.*

சுடர் ஒளி வாசகர்களின் நானும் ஒருவன். சிறுவர் பகுதியில் வெளி வந்திருக்கும் சித்திரத் தொடர்கதை கண்டு என் மனம் குதூகலமடைந்தது. என் போன்ற இளம் பெண்களின் ஆவலைத் தூண்டும் விதத்தில் அமைந்திருக்கிறது. இது போன்ற இன்னும் பல நல்ல ஆக்கங்களையும் புகுத்தி எம் போன்றவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவீர்கள் என்று நம்புகிறோம். வாழ்க வளர்க.

*ஜனா, நீர்கொழும்பு.*

தங்களது பத்திரிகைகளில் அண்மைக் காலமாக முதல் பக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் ரசனைக்குரியதாக இருக்கிறது. இம்முறை ஒலிம்பிக் நிகழ்வுகளை போட்டுக் கலக்கியுள்ளீர்கள். தொடர்ந்து இவ்வாறான மாற்றங்களுடன் சுடர்ஒளி வெளிவர என் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## இருக்குமிடத்தில் இருந்தால்...?

சாத்வீகம் சொன்னவர்க்காய்
காவியுடை பூண்டாரின்று...
நாடாளும் உரிமைகோரி
நாட்டைக் காப்பதாய் பீற்றி
நயவஞ்சகம் பேசுகிறார்.

ஆசாபாசம் துறந்தவரை
ஆசானாய் கொண்டவரின்று...
ஆசையின் பிழியில் சிக்கி
ஆட்சிமேல் ஆவல் கொண்டு
அங்கொருவர் இங்கொருவராய்
அலைமோதும் அலங்கோலம்
ஊரறியும்... உலகறியும்.

போகம் வேண்டாம்
போதி நிழல் போதுமென்றாரின்
போதனைகள் பெற்றாரின்று...
போதாது 'ஏசி' என்றும்
போகங்கள் தடை
அதிகார பரவலாக்கத்திற்கென்றும்
போடுகிறார் கூக்குரல்.

மாற்றுக் குழுவாய் மற்றோர் குழுவாம்
சிரிக்கிறது சந்தி - எதுவும்
அதுவது அந்த இடத்தில்
இருந்தால்தான் தகுமென்பது
"காணவில்லை தேரரை"
"கோஷ்டி மோதலில் தேரர் பலி"
கொட்டை எழுத்துச் செய்திகளில்
புலப்படுது புடம்போட்டு.

*மா. பிரசன்னா,*
*கிரான்.*

## நன்றி

இன்னும் எத்தனை காலம் தான்
இளமையைத் தொலைத்தபடி
உனக்காகக் காத்திருப்பது?

வாழ்வில் இலட்சியங்கள் தேவை தான்
இல்லையென்று சொல்லவில்லை
இதனால் உன்னை ஊக்குவித்தேன்
படித்து முடிக்க வேண்டுமென்றாய்
பல உதவிகள் செய்து
பார்த்தபடி காத்திருந்தேன்

பயிற்சி பெறவேண்டும் என்றாள்
பயில இடம் தேடித் தந்து
பொறுத்துத் தானிருந்தேன்

வேலையொன்று வேண்டுமென்றாள்
தேடித்தான் தந்தேன்
வேளை இனி வருமென்று

இலையுதிர் காலம் தொடங்கு முன்
இணைய நினைப்பதில்
இனியென்ன தடங்கல்?

இப்போது எல்லாம் நிறைவேறி விட்டது
புதிதாகச் சொல்கிறாள்
அண்ணா நன்றியென்று.

*ச.முருகானந்தன்.*

## இயற்கையுடன்.....

காலையில் சூரியன்
நீ தூக்கம் கலைக்கிறாய்
பூவிலே பனித்துளி
உன்பூமுகத்தில் பரு
நதிகளிலே வளைவு
உன் உடலின் அசைவு
நீரினிலே நிலவு
நீ முகம் கழுவுகின்றாய்
உயிரிலே ஓசை
நீ சிரிக்கின்றாய்
காற்றிலே கீதம்
நீ பேசுகின்றாய்
நினைவினிலே கவிதை
கனவினிலே தாமரை
உன் புடவையின் மடிப்பு
சாலையிலே வாசம்
நீ வருகின்றாய்.

*ந.பிரபு,*
*யாழ்ப்பாணம்.*

## ரகசியக் காதல்

நேற்று வஞ்சி என்
நெஞ்சினுள் புகுந்து
அஞ்சுதல் நீக்கி
அஞ்சுகம் என்றவனே!
காற்றோடு கலந்து
காதல் சிட்டுக்களாய்
காதல் படித்தோம்
வான அரங்கிலே,
மாங்கல்யம் சூட்டும்
மணநாளை கூறி
மகிழ்ச்சி தந்தாய்
மங்கை எனக்கு
மணநாள் வந்தது
மகிழ்வாய் நடந்தது
எனக்கும் உனக்குமல்ல
உனக்கும் உன்
இரகசியக் காதலிக்கும்!

*கு. மகாலக்ஷ்மி,*
*மிருசுவில்.*

## எங்கள் வாழ்வு

கருகி வறண்ட இதயத்தை
உழுதுவிட்ட
தடம்புரண்ட ரயில்
இருண்டுபோன
உதயகாலத்தில்
உயிருடன் உயிருக்கு
போராடும் மனிதர்கள்
காற்றுவாங்க
காசிருந்தும் மூச்சிழுக்க
மூக்கில்லாமல்
உயிருடன் ரயர்
போட்டெரித்த
இருண்ட காலங்களும்
உயிருடன் வாழவிட்டு
மூச்சிழுக்கத் தடுக்கும்
உதயகாலங்களும்
எங்கள் வாழ்வில்
ஒன்றுதான்.

*இ. யாழவன்,*
*இல.சபரகமுவ பல்கலைக்கழகம்.*

## காதல்

நிலாப் பொழுதில்
கண்கள் மூடாமல்
லயித்திருந்தேன்
ஓ...
வானமும் நிலாவும்
காதலுடன் ...
ஆ... என்ன விந்தை
வெட்கப்பட்டு
முகிலோடு - தன்
முகத்தை மூடும்
நிலாவின் அழகு
தனி.
ஆ... என்ன ஆச்சரியம்
மின்னலுடன்
இடிசேர்ந்து
மழை சோவெனச்
சொரிகின்றது
ஓ...
ஊடல் போல
நிலா கண்ணீர்
சொரிகின்றது.

*தி. தனுஷியா,*
*சாவகச்சேரி.*

## போகின்ற போதினிலே..

அன்பே!
உனக்காக
நான் சேகரித்த
கற்பனைகள்
தீர்ந்து போய்விடுமென்று
தூங்காத இரவுகளை
துரத்திப் பிடிக்கின்றேன்.
போகும் முன்
என்
கண்ணீர்த் துளிகளை
புஷ்பங்களாக்கி
நினைவுகளை
உரமாக்கி
என் உணர்வுகளை
விதைக்கிறேன்.
மீண்டும் வருவதற்காக.

*சி.பிரகாஷ்,*
*அல்வாய்.*

## பெரு மூச்சு

உனக்குச் சொல்லியும்
புரியவில்லை — இல்லை
எனக்கு எதையுமே
சொல்லவும் தெரியவில்லை
இரு துருவங்களில் பிறந்த
நாம் சேருவது எப்படி?
பதில் சொல்லடா!

திண்டுவளர்ந்தாள்,
நல்லூர்.

## புதிர்

உன் பார்வைகளின்
ஸ்பரிசங்களால்
தொட்டாற் சுருங்கியாய்
மாறும் - என்
மனசுக்கு
இன்னும் புரியவில்லை
நீ யார் என்பது!

*நிலா,*
*கொழும்பு.*

## சிறகுகள் வெட்டப்படலாம்...

பௌர்ணமி வதனம்
அழகில் ரதி
வானத்து தாரகையாய்
வலம் வந்தாலும்
உன் சிறகுகளும்
சிதறடிக்கப்படலாம்
உணர்வுகளுக்குள்
சமாதியானால்...!
நேசங்களை நீ
நேசித்தாலும்
நேசங்களால்
மறுக்கப்படலாம்!
பரந்த பூமி
பெண்மையையுணர்வது
இன்னும் கைபிடிக்குள்!
சிந்தனை சிதறினால்
உன் சிறகுகள்
வெட்டப்படலாம்
ஒரு நாளில்...!
புரிந்து வாழ்...
நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வை
எதற்குமஞ்சாத
ஞானச் செருக்குடன்

*தர்ஷனா.*

## மீண்டும்

எட்டியெட்டி
எனைப்பார்த்து - ஏன்
அந்தப் பொல்லாத
காதலை - மீண்டும்
என்மேல்
கொட்டிவிட்டுப்
போகிறாய்!

*எம். கே. சிவானந்தம்*
*சுச்சிலம்பற்று.*

## காதல்

அன்பான
உன் பார்வை
அரவணைப்பான
உன் பேச்சு
ஆழமான
உன் வார்த்தைகள்
ஆடம்பரமில்லா
உன் வாழ்க்கை
அருமையான
உன் கவித்துளிகள்
அடக்கமான
உன் கோபம்
அன்பு கொள்ளவைக்கும்
உன் நளினம்
ஆத்மார்த்தமான
உன் முகம்
ஆணவம் இல்லாத
உன் பணிவு
இவையாவும் தான்
உன் மீது என்னைக்
காதல் கொள்ளச் செய்கிறது

*க. சதீஸ்,*
*யாழ். பல்கலைக்கழகம்*

## புரிந்து செயல்படு

வீரமும்
விவேகமும்
சீற்றமிருப்பவர்க்கில்லை
அதை உணர்ந்து
கொள்வதற்கு
இப்பாரில்
எவருமில்லை
சீற்றம் கொள்வதே
உன்தோல்விக்கு
காரணம்
புரிந்து கொண்டால்
அதுவே
வாழ்வில் வெற்றித்
தோரணம்
மானத்தையும்
மதியையும்
இழக்கச் செய்துவிடும்
சீற்றம்
இழந்தவை
பெறவேண்டுமெனின்
உன்னில் தேவை
புதுமாற்றம்
பிறமதங்களை
மதித்திடு
விதண்டாவாதங்களை
அழித்திடு
சினங்களை சிதறச்
செய்துவிடு
சிறப்பானவனாய்
வாழப்பழகிடு
புரிந்து செயல்படு
உன்னைப்பிரிந்து
சென்றவர்களெல்லாம்
உறவைப் பாடிக்
கொண்டு
உன்னை நாடி
வருவார்கள்.

*அஸ்ரியா லாபிர்,*
*கொழும்பு - 14.*

## சிக்கியவன்

சீனி ஆலையில்
சிக்கிய கரும்பு
வேடன் கண்ணியில்
சிக்கிய புறாக்குஞ்சு
கழுகின் கால் பிடியில்
சிக்கிய கோழிக் குஞ்சு
பாம்பின் வெறிப்பிடியில்
சிக்கிய தவளைக் குஞ்சு
[illegible]றி வெடியில்
சிக்கிய பொற்பாதம்
கண்ணிவெடியில்
சிக்கிய கவச வாகனம்
என் [illegible]ர்வையில்
சிக்கிய
காதல் அவள்
மறுத்துவிட்டால்
விடுபட முடியாது
போராட்டம் தான்
தீர்வு - தாடியும் கூட.

பாபு,
கல்முனை.

## திருமணம்

பெண்களுக்கு இறைவன்
கொடுத்த பெரிய தண்டனை

## காதல்

இதயத்தை கொஞ்சம் கொஞ்சமாக
கொல்லும் கொடிய விஷம்.

*ஆர்.வசந்தி,*
*வட்டக்கண்டல்.*

## உறுதி

ஏதோ ஒன்று - என்
காதலுக்கு வைக்குது வேட்டு.
காவியம் கூடக் கரையலாம்.
வானமே மண்டியிட்டாலும்
என்னை மீறி என்னடி வேட்டு?
புதைகின்ற குழியிலும்
எரிகின்ற நெருப்பிலும்
உன் பெயரே தெரியுமடி
என சாவின் பின்பும்!

விஜயன்,
வரணிச்சென்னை

## புரிந்துகொள்

இந்த ஜென்மத்தில் என்னைப்புரிந்துகொள்ளாத நீ
அடுத்த ஜென்மத்திலாவது புரிந்துகொள்வாய்
என்ற நம்பிக்கையில் மரணம் வரும் வரை
நினைத்திருப்பேன் உன்னை.

*பா.வதனா,*
*கந்தளாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண் அவளைத் தேடிவந்த உண்மையான காரணத்தைப் போட்டு உடைத்த போது, அவனைப் போலவே காந்தாவும் குழம்பிப் போனாள். அவளது மனக் கோட்டை மண்கோட்டையாய்த் தகர்ந்தது.

# உள்ளம் கொள்ளை போகுதே

காதல் விவகாரங்களில் தூது போவது என்பது கயிற்றில் நடக்கும் சர்க்கஸ்காரனின் செயற்பாட்டைப் போன்று கடினமானது என்பது இவளுக்குத் தெரியும். ஏற்கனவே அருணின் முக்கோணக் காதல் கதையில் வெறும் பார்வையாளராக அல்லாமல் தூது சென்று சிக்குப்பட்டவள், இப்போது பல்கலைக்கழகப் படிப்பு முடியும் காலத்தில் மறுபடியும் அதே சிக்கலுக்குள் தலை கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இப்போது அவளை ஒரு ஆலோசகர் போல் எண்ணி அருண் வந்திருக்கிறான். முக்கோணத்தைச் செவ்வகமாக்க இவள் நினைக்கிறாள்.

மானுடகுலத்தை இயக்குவதில் முதல் இடம் வகிப்பது காதல்தான் என்பது காந்தாவுக்கும் தெரியும். பண்டைய இதிகாசங்கள், ஐம்பெரும் காப்பியங்கள் தொட்டு, இன்றைய நவீன கலை இலக்கியங்கள் வரை — ஏன் சினிமா, தொலைக்காட்சி கூட இந்த மூன்றெழுத்தை நம்பித்தானே பிழைப்பு நடத்துகின்றன.

காந்தா இந்தக் காதல் எனும் மாயவலையில் இன்றுவரை சிக்கவில்லை. இன்னும் முடிவாகாத, இனியும் வராது என்று நிச்சயித்துக் கூற முடியாத காதல் குறித்து தூரத்துப் பச்சைபோல் மனதில் ஒரு அசைக்க முடியாத உருவம் அவளிடமும் இருக்கின்றது.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையின் இரகசியப் பக்கங்களைத் தூசிதட்டிப் பார்த்தால் காதல் என்கிற இனிய அத்தியாயம் இருக்கத்தான் செய்யும். எனினும் இது ஏன் இன்றுவரை தன் வாழ்வில் ஏற்படவில்லையே என எண்ணிப்பார்த்தாள் காந்தா. அப்பாவின் வளர்ப்பு முறை தான் காரணமோ என எண்ணினாள்.

அருணைப் பொறுத்தவரை அவன் அனுவுக்கும், தீபாவுக்கும் இடையே இருதலைக் கொள்ளியாகத் தவித்துக் கொண்டிருக்கின்றான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அனுவும், தீபாவும் அவளது நெருங்கிய சினேகிதிகள் தான். இருவர் மனதையும் காந்தா அறிவாள். இந்த இறுதிப் பரீட்சை முடிந்த பின்தான் எல்லாக் குழப்பங்களும் விஸ்வரூபமெடுத்தன.

அனு ஆரம்பத்தில் அருணை எடுத்தெறிந்து நடந்தவள்தான். தீபாவோ ஆரம்பம் முதல் அருணுக்காக ஏங்கியவள். அருண்மீது ஏற்பட்ட காதலை சொல்லமுடியாமல், காந்தாவை பல்கலைக்கழகப் படிப்பின் முதலாவது ஆண்டிலேயே அருணிடம் தூது அனுப்பி மூக்கு உடைபட்டவள். அந்தச் சம்பவம் இப்போதும் காந்தாவுக்கு நினைவிருக்கிறது. அன்று அருணைச் சந்தித்து காந்தா உரையாடினாள்.

“அருண்... உங்களிடம் கிட்ட ஒரு விசயம் கேட்கவேணும்...” தயங்கியபடி கேட்டாள் காந்தா. அருண் அவளை ஆழமாக நோக்கியபடி “சொல்லும்....” என்றான்.

“இல்லை... தீபாவுக்கு உங்களில் விருப்பம்.. அது தான் உங்களிடம் தெரிவிக்கும் படி கூறினாள்..” என்று ஒருவாறு காந்தா சொல்லி முடித்ததும் அருண் குறுக்கிட்டான். “உமக்கு விசரா?... படிக்கிற நேரத்தில் காதல் கத்தரிக்காய் என்று அலையவேண்டாம் என்று உம்மட சினேகிதிக்குச் சொல்லும்.” சட்டென்று பேச்சைத் துண்டித்து விட்டுப் போய் விட்டான்.

அதே அருண் மூன்று மாதங்களின் பின்னர் ஒரு நாள் காந்தாவிடம் கேட்டான். “நீர் யாரையாவது விரும்புகிறீரா?”

“உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையுமே நேசிக்கிறேன்...” கந்தா சிரித்தாள்.

“அப்படியானால் ஆமிக்காரனையும் நேசிப்பீரா?” அருண் சிரித்தான். காந்தா உடனே சுடச்சுடப் பதில் சொன்னாள். “ஏன் அவன் மனிதனில்லையா?”

“மிருகம்...” என்ற அருண், “சரி பகிடியை விட்டுட்டு சொல்லும்..” என்று கேட்டான்.

“இல்லை... யாரையுமே காதலிக்கவில்லை.. அப்படி ஒரு எண்ணமும் இல்லை.. படிக்கிற நேரத்தில காதலும் கத்தரிக்காயும்..” அவனது ஆயுதத்தையே திருப்பி விட்டாள்.

“உண்மையாகத்தான் சொல்கிறீரோ?” இதைக் கேட்கும் போதே அருணின் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது.

“எனக்கு ஒரு மச்சான் இருக்கிறார்..”

“சொந்தத்தில செய்யுறது கூடாதென்று தெரியாதோ? பிறகு குறைபாடுள்ள பிள்ளை பிறக்கலாம்...”

“அப்படியென்றால் நானும் குறைபாடுள்ள பிள்ளையாகத்தான் இருக்க வேணும்.. அம்மாவும், அப்பாவும் மச்சான் மச்சாள் தான்..” காந்தா இப்படிச் சொன்னதும் அருண் ஒரு வித ஏமாற்றத்துடன் போய் விட்டான். அவனை ஒருவாறு ஏமாற்றி அனுப்பி விட்டதாக நிம்மதிப் பெரு மூச்சு விட்டாள் காந்தா. எனினும் இடைக்கிடை அவனது நினைவு இவளது தூக்கத்தைக் கெடுத்தது.

இன்னொரு மூன்று மாதம் கடந்த பின்னர் அருண் மறுபடியும் அவளுடன் மனம் திறந்து கதைத்தான். “உம்மட சினேகிதி அனு எப்படி?”

“ஏன் கேட்கிறீங்க?”

“சும்மா தான்...” அவன் அசடு வழியச் சிரித்தான்.

“பொல்லாதவள்... யாரும் நெருக்க முடியாது. அப்படி ஏதாவது எண்ணமிருந்தா இப்பவே விட்டுவிடுங்கள்..”

அவளது பதிலில் அருணின் முகம் வாடியது. “அப்ப நீர் தூது போக மாட்டீரா?”

“எல்லாருக்கும் தூது போக நான் என்ன அன்னப் பட்சியா? தீபா கவலைப்படுவாள்...



ச.முருகானந்தன்

நீங்களே கேளுங்கள்..”

அருண் ஏமாற்றத்தோடு போய் விட்டான்.

ஒரு வாரம் கழித்து தேவதாஸ் கோலத்தில் வந்தான். “என்ன ஒரே சோகமயம்?” என்று கிண்டலடித்தாள் காந்தா.

“அனுவிடம் கேட்டேன்... செருப்புக் கழட்டி அடிக்காத குறைதான்....” அருண் மிகுந்த கவலையுடன் கூறினான்.

“சரி... போய்ப் படியுங்க.. படிப்பை முடிச்சிட்டு அடுத்ததை முயற்சியுங்கள்... அதிஷ்டம் உங்கள் பக்கம் வரும்..”

காலம், பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஓடிக் கழிந்தது. இதோ பல்கலைக் கழக வாழ்வும் முடிகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப்போது காந்தாவிடம் அருண் வந்திருக்கிறான். அவளுக்கும் ஓரளவு நடந்தவை தெரியும்.

“காந்தா இப்ப உன்கிட்ட ஆலோசனை கேட்டு வந்திருக்கிறன்... தீபா எடுத்த எடுப்பில என்னைக் கவரவில்லை. ஆனால் அவள் பிடிவாதமாக என்னையே நினைச்சிருந்தா. காலப்போக்கில அவள்மீது அனுதாபம் ஏற்பட்டது. அவள் என்மீது செலுத்திய அன்பே என் மனதைக் கரைத்தது. அவள் பக்கம் மனது ஈடுபட ஆரம்பித்தது. என்னுடைய சம்மதத்தை அவளிடமே தெரிவிக்க இருந்த நேரத்தில், அனுவும் என்னிடம் வந்து தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தாள். அதுதான் குழம்பித் தவிக்கிறேன்...”

“அருண் ஏமாப் போகிறது நீங்கதான். இதில நீங்கதான் முடிவு எடுக்கவேணும்... இன்னொருவர் [...]

முடியாது. ஒரு கொடியில் ஒரு முறைதான் மலரும் மலரல்ல காதல். இந்தக் காதலுக்கு சரியான வரைவிலக்கணம் எது என்ற தெளிவு இந்த உலகுக்கே வரவில்லை. பருவ வயதில இருக்கிற எனக்கோ, உங்களுக்கோ எப்படிப் புரியப் போகிறது?” காந்தா ஒரு வித விரக்தியோடு சிரித்தாள்.

அருண் மௌனமாக யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

“அருண்... காதலைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?...

ம்.. காதல் என்பது பாலுணர்வு என்கிற அத்திவாரத்தில் கட்டப்பட்டது தான். அதில எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனாலும் வெறும் உடல் வேட்கை மட்டும் காதலாகிவிட முடியாது என்று நினைக்கிறேன்...”

“இப்போது இந்த ஆராய்ச்சி எமக்குத் தேவையில்லை. பிரச்சினைக்கு வருவோம். நான் அனுவை ஏற்கிறதா? தீபாவை ஏற்கிறதா?.. என்னால முடிவு செய்ய முடியவில்லை... இரவு தூங்கவுமில்லை”

“இதில குழம்ப வேண்டியதில்லை. நீங்க யாரை விரும்புகிறீர்களோ, அவளையே தெரிவு செய்யுங்கள்..”

“நான் யாரை விரும்புறன்?..” அவளை ஒரு வழிகாட்டியாக நோக்கியபடி தன்னிடமும் கேட்டுக் கொண்டான். தொடர்ந்து மௌனம் திரையிட்டது. காந்தாவும் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். இது மாதிரியான ஏதோ ஒரு ஆப்புக்குள் இப்பிரச்சினை வாலைக் கொடுத்து விட்டுத் திணறும் என்று முதலிலேயே அவளுக்குத் தெரிந்திருந்தது. இப்போது அருண் அவளை அணுகிய போது தனது மனநிலையை[...]யும், இதிலுள்ள சிரமத்தையும் பெருமளவில் புரிந்து கொண்டதால், இதில் தீர்வு சொல்வது தனக்குப் பொருத்தமாக இருக்காது என்பதை ஆழமாக யோசித்து மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்தாள். எனவே, மௌனத்தையே பதிலாக்கி பிரபஞ்ச வெளியில் சூனியத்தை நோக்கினாள்.

அருணோ விடவில்லை. ஏதாவது ஒரு நல்ல முடிவு கூறும் படி அவளை வற்புறுத்தினான். அவன் அவள் மீது வைத்திருக்கின்ற நட்புக்கும், நம்பிக்கைக்கும் ஏதாவது சொல்லித்தான் ஆக வேண்டும். சிங்கக் குகைக்குள் இரையாகச் சென்ற முயல் போல் வெட்டியாடத்தான் வேண்டும். அவளுக்கும் கடந்த ஓரிரு தினங்களாக ஏற்பட்டுத் தொண்டைக்குழி வரை வந்து, புறச் சூழ்நிலைகளால் அடைபட்டுப் போயிருக்கும் இந்த நிலையில் நடக்கக் கூடிய காரியமா இது?

சகதியில் மாட்டுப்பட்ட இரு கால்களையும் எடுக்க முடியாமல் அவன் திணறுவதாக அவள் உணர்ந்தாள். ஒரு காலை ஊன்றி மறுகாலை இழுத்தெடுத்தல் என்பது முடிகிற காரியாம என்ன? வெளியிலிருந்து தான் யாராவது கை கொடுக்க வேண்டும். தான் கைகளைக் கொடுக்கலாமா என்று எண்ணினாள்.

“காந்தா... தயவு செய்து நீதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.” அத்தனை பிரச்சினைகளுக்கும், வார்த்தைகளுக்குமான உணர்ச்சிகளை [...]லிக்க அவளை ஏக்கத் [...]னான்.

இப்போது என்ன செய்யலாம் என்று தீவிரமாகயோசித்தாள் காந்தா. அப்பத்தை என்றால் குரங்கிடம் கொடுத்தாவது பிரித்துவிடலாம். இது பங்கிடக் கூடிய விடயமும் அல்லவே! இரண்டு தோணியில் கால் வைத்திருக்கிறான். இரண்டையும் இன்னொரு தோணியில் வைப்பது தான் தீர்வாக இருக்கும்.

இவன் இப்போது மீசைக்கும் ஆசைப்படுகிறான். கூழுக்கும் ஆசைப்படுகிறான். கூழையும் வீசிவிட்டு, மீசையையும் வழித்துக் கொண்டு வருவானா?

“இப்படி ஒரு இக்கட்டு உமக்கு ஏற்பட்டிருந்தால் என்ன முடிவு செய்திருப்பீர்?” அருண் இப்போது இவளையும் இதனுள் இழுத்து விழுத்துவது காந்தாவுக்குப் புரிந்தது. இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒரு சிரிப்பை மட்டுமே கொடுத்தாள். வேறு பதிலேதும் அவளுக்குப் புலப்படவில்லை. இக்கேள்வி அவளையும் உலுப்பியது. தானும் இக்கட்டில் மாட்டியிருப்பதைச் சொல்ல நினைத்தாள். முடியவில்லை.

அவள் ஆலோசனை சொல்லாவிட்டால், அவனும் எழுந்து போவதாகத் தெரியவில்லை. மீண்டும்மௌனத்திரை காரிருளாய்த் தொடர்ந்தது. எதுவும் தெரியாத கும்மிருட்டுப் போல காந்தா உணர்ந்தாள். அவன் மட்டுமல்ல, தானும் இப்பிரச்சினையில் ஆப்பிழுத்த குரங்காக மாட்டுப்பட்டதாக உணர்ந்தாள்.

“என்ன பேசாமலிருக்கிறீர்?” மீண்டும் அருண்.

இம்முறையாவது மௌனத்தை உடைத்து ஏதாவது சொல்லிவிட நினைத்தாள். முடியவில்லை. அருண் அணிலேறவிட்ட நாய் போல அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். வெகு பிரயத்தனத்தின் பின் காந்தா மௌனத்தை உடைத்தாள். “இதில் நான் சொல்லுறதுக்கு என்ன இருக்கு, உங்களுக்குச் சரி என்று படுகிறதைச் செய்யுங்கோ..”

“இரண்டு பேரையும் பிடிச்சிருக்கு..”

ஒரு பைத்தியக்காரன் போல் அவன் சொல்கையில் காந்தாவுக்குக் கோபம் வந்தது. “அப்ப இரண்டு பேரையும் கட்டுங்கோ வள்ளி, தெய்வானை மாதிரி...” சொல்லும் போதே இருவருக்கும் சிரிப்பு வந்தது. சற்று அமைதிக்குப் பின் காந்தா கூறினாள். இரண்டு பேரையும் வெட்டுங்கோ...”

அவளது பதிலின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஏமாற்றத்தோடு அருண் அவளை நோக்கினான்.

“காந்தா நீர் என்னை இன்னும் குழப்புறீர்...”

“இதெல்லாம் எங்கட கையில இல்லை அருண். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட படி தான் எல்லாம் நடக்கும். எப்பவோ முடிந்த காரியம் முற்றிலும் உண்மை. யாம் அறியோம்...”

“குழப்புறதை விட்டுட்டு முடிவைச் சொல்லும்...”

“நான் பதில் சொன்னால் அப்பம் பிரிச்ச குரங்கின்ர கதையாகத்தான் முடியும்..” இதைச் சொல்லும் போதே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

“விளங்கேல்லை... புரியும்படி சொல்லும்....”

“அப்பத்தைக் குரங்கு எப்படிப் பிரிச்சுக் கொடுத்தது?”

“எப்படி?” சின்னவயதில் படித்தகதையை மீட்டுப் பார்த்தான்.

“அப்பம் ஆருக்குக் கிடைத்தது?” காந்தா சிரித்தபடி கேட்டாள்.

“முழு அப்பமும் குரங்குக்குத்தானே கிடைச்சது?”

“இப்ப எங்கட இந்தக் கதையில ஆர் குரங்கு?” என்று கேட்டுவிட்டு தொடர்ந்து “என்ன யோசிக்கிறியள்? நீங்க தான் அப்பம். அனுவுக்கும் தீபாவுக்குமிடையில பிரிக்க வேணும். குரங்கு நான் தானே?”

“நீ என்ன சொல்ல வருகிறாய்?” அவன் குழம்பினான்.

“உங்களுடைய முதல் காதல் எது?”

“ம்..” அவன் ஆழமாக யோசித்து விட்டு “அனு” என்றான். “மர மண்டை” என்றாள் காந்தா. “என்னிடம் கேட்டதை மறந்திட்டியளா?” பழையதை ஞாபகமூட்டினாள்.

இப்போது அருணுக்கு ஓடி விழித்தது. “உனக்குத்தான் மச்சான் இருப்பதாகக் கூறினாயே?”

“அது டூப்... ஒரு மச்சானும் இல்லை. படிக்கிற நேரம் காதல் வேண்டாமே என்பதால் இப்படிச் சொன்னேன். உங்களை எனக்குப் பிடிச்சிருந்தது...” அவள் ஆழமாக அவனை நோக்கி விட்டு தலையைக் குனிந்தாள். தொடர்ந்த மௌன இடைவெளியில் எல்லாம் புரிந்தது. அருண் சொர்க்கத்தில் மிதந்தான். * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் என்றால் அழகன் என்று பொருள். முருகனுக்கு குமரன், குகன், சண்முகன், சரவணன், வேலவன், வேலன், சரவணபவன் என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு. அவன் கலியுக வரதன். ஈழநாட்டிலே புகழ் பெற்ற முருகன் ஸ்தலங்களுள் செல்வச்சந்நிதியும் ஒன்று. தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும் நீக்கியருள்வதற்காக முருகன் சந்நிதியான் என்ற பெயரில் தொண்டமனாற்றிலே செல்வச்சந்நிதியிலே கோவில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்தருள் புரிகிறான். செல்வச் சந்நிதிக் கந்தனை அன்னதானக் கந்தன் எனக் கூறுவதுண்டு. ஏனெனில் சந்நிதி கோயிலிலே நாள் தோறும் அடியார்களுக்கு மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானம் குறைவின்றி நடந்தபடியே இருக்கும். இது தொன்று தொட்டு நிலவி வருகிறது.

சந்நிதிமுருகன் சந்நிதிக் கோயிலில் வழிபட வருகிற அடியவர்களின் பசி தீர்த்துக், களை தீர்த்து அருள் புரியும் பாங்கு அற்புதமானது. 'ஆற்றங்கரையான்' என்று அன்போடு அழைக்கப்படுகின்ற ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவயானையுடன் அருட்காட்சி தருகின்ற அழகே தனி.

இந்தச் செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டமானாற்றிலே அமைந்துள்ளது. இங்கே முருகப் பெருமானுக்குப் பூசை செய்கின்ற பூசகர் வாயை மூடித் துணியினாலே கட்டிக்கொண்டு தான் பூசை செய்வார். கதிர்காமத்திலேயும் இப்படியே நடப்பது வழமை.

கதிர்காம முருகனுக்கும், சந்நிதியானுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கதிர்காமத்தில் உற்சவம் ஆரம்பிக்கின்ற முதல் நாள் முருகன் சந்நிதியிலிருந்து புறப்பட்டுக் கதிர்காமத்துக்குப் போவதாக ஐதீகம் உண்டு. பின்பு கதிர்காமத்தீர்த்தத்தன்று திரும்பி வருவதாகக் கருதப்படுகிறது.

இந்த ஆலயத்தில் ஆலம் இலைகளிலேயே திருவமுது படைக்கப் பெறும். எல்லோரும் பக்திப்பரவசத்துடன் கண்களை மூடித்தியானித்து வழிபடும்போது முருகப் பெருமான் வேல் வடிவில் வந்து எல்லோருக்கும் அருட்காட்சி அளிப்பது இந்த ஆலய அற்புத நிகழ்வு.

செல்வச்சந்நிதியில் வருடாந்த உற்சவம் ஆரம்பித்து விட்டால் அந்த நகரமே பக்திமயமாகக் காட்சியளிக்கும். முருகப் பெருமானின் அருட்கோல விழாவைக் காண்பதற்கு அடியார்கள் பலரும் அலை அலையாகத் திரண்டு வரும் காட்சி பக்திபூர்வமானதாகும்.

இந்த ஆலயத்தில் ஒரு விசேஷம் என்னவெனில் ஒரு பக்கம் மங்கள வாத்தியமும், இன்னொரு பக்கம் பறை மேளமும் வாசிப்பதாகும்.

### தேர்த்திருவிழா

செல்வச்சந்நிதியானின் தேர்த்திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெறும். அதிகாலையிலேயே அடியார் கூட்டம் அலை மோதத் துவங்கிவிடும். எல்லோரும் முருக



நாமத்தை உச்சரித்த வண்ணம் சூழ்ந்துவர வேற்பெருமான் தேரிலே ஆரோகணித்து வீதி வலம் வரும் திகழ்வு கண்கொள்ளாக்காட்சியாகும். அடியார்கள் எல்லோரும் சேர்ந்து உருவாக்கிய சித்திரத் தேர் முன்னர் தீக்கிரையாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல வருடங்களாக முருகப் பெருமான் கட்டுத் தேரிலேயே வலம் வந்தார்.

ஆனால் இம்முறை புதிய சித்திரத் தேர் ஒன்று வடிவமைக்கப்பட்டு 27.8.2004 வெள்ளிக்கிழமை வெள்ளோட்டம் நடைபெற்று எம்பெருமான் 29.8.2004 ஞாயிறன்று தேரிலே ஆரோகணிப்பர்.

அடியார்கள் புடைசூழ அழகான தேரிலே எம்பெருமான் முருகவேள் ஆரோகணித்து வரும்போது, முன்னே மங்கள இசை முழங்கும். பறை கொட்டும். வடம்பிடித்து இழுக்கும் அடியார்கள் பக்திப்பரவசத்துடன் "முருகா! முருகா!!" என்று கோஷமிட்டவாறு வர, அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்கள் "கந்தனுக்கு அரோஹரா! முருகனுக்கு அரோஹரா" என்றபடியே தமது நேர்த்திகளைப் பூர்த்தி செய்யுங்காட்சி அருங்காட்சியாகும்.

இந்த ஆலயத்தைச் சுற்றிவர பல மடங்கள் உண்டு. அந்தத் திருமடங்களிலெல்லாம் தினசரி அன்னதானம் குறைவின்றி வழங்கப்படும். திருவிழா பார்ப்பதற்கென்று ஈழநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் முருகன் அடியார்கள் வருவது வழமை. அவர்களெல்லோரும் உணவுக்குக் கஷ்டப்படாமல் இருக்க சந்நிதியான் திருக்கோயில் மடங்களிலெல்லாம் அன்னதானம் வழங்கப்படும்.

### *தீர்த்தத் திருவிழா*

சந்நிதியான் தீர்த்தத் திருவிழா மிகவும் புனிதம் வாய்ந்த ஒரு விழாவாகும். ஆலயத்துக்கு அருகேயிருக்கும் தீர்த்தக்கேணியிலேயே எம்பெருமான் தீர்த்தமாடுவார். நோய் தீர்க்கும் மருந்தாக இந்தத் தீர்த்தத்தை எல்லோரும் எடுத்துப்பருகுவர். பக்தர்கள் சூழ்ந்துவர வேலாயுதப் பெருமான் வீதிவலம் வருவார். பெண் அடியார்கள் அடியழித்து (பஞ்சாங்க நமஸ்காரம்) முருகப் பெருமானை வழிபடுவர்.

பாற்காவடி, தூக்குக் காவடி, துலாக்காவடி என்று காவடிகள் பலவும் இங்கே பக்தி பூர்வமாக எடுத்து வழிபாடு நடைபெறும்.

முருகன் அடியவர்களாகிய நாமும் சந்நிதியில் எழுந்தருளியிருக்கின்ற வேலனை வழிபட்டு வேதனைகள் நீங்கி மங்களகரமான நல்வாழ்வு வாழ முருகனை வேண்டித் துதிப்போமாக.

சிவநெறிக்கலாநிதி
**இராசையா செந்தில்நாதன்**


செல்வச்சந்நிதி முருகன் தேரேறி வரும் இந் நந்நாளில்
நாட்டில் சமாதானம் சாந்தி நிலவ உங்கள் திருவடி பணிந்து துதிப்போம்.

**EUROSTAR**



- For Clear Reception of all Sri Lankan Channels in all Locations.
- FM/VHF/UHF Bands Reception.
- Built in Booster & Ac/Dc Dual Power Adaptor.
- Easy to Install.
- Super High Gain.
- 12 Months Warranty.
- Modern Appearance (Modern Model-Outlook)
- Economically Priced

This modern marvel is a real boon to all Sri Lankan TV viewers, from any part of the country.
Economically priced, brings you great values, at all times with crystall clarity of our channels.
Now reach for this modern ACTIVE ANTENNA and feel the difference.
"EUROMIND" assures great pleasures.

**UKAAYE**
SATELLITE SYSTEMS (PVT) LTD.

No. 190, Bodhirajah Mw.
(Gas Work Street), Colombo. 11.
Tel: 075-370019, 01-390814 Fax: 075-370018
Email: ukaaye@visual.lk



சந்நிதி முருகன் அருளால் யாவுமே
நலமுடன் நிறைவேறப் பிரார்த்திப்போம்

**ஜெனா சிற்பக் கலைக்கூடம்**



* லண்டன் மாநகரில் உள்ள
ஆலயங்களுக்கு 7 தேர்களை
3 வருடத்தில் அமைத்தவர்கள்.
* சித்திரத் தேர்கள்
* தங்கத் தேர்கள் * வாகனங்கள்
* முத்து மணவறைகள்
* பூ மணவறைகள் (Plastic)

மணவறைகள், சித்திரத் தேர்கள்,
வாகனங்கள் முதலியவற்றை
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்
இலங்கையின்
முன்னணி நிறுவனம்

பிரதான உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும்

**JENA HANDICRAFT**

S. JEYAKANTHAN, 284-285, Modera Street, Colombo - 15.
Tel.: (011) 2 522956, 2 527820. Mobile: 0777 396608.
E-mail: s.jeyakanthan@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு முட்டுக்கட்டையானால் அதைத் தூக்கி எறியவும் தயங்கக்கூடாது! தேவை நிரந்தர சமாதானமே!!

புற்றுநோய் போன்று புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கும், சமூக நட்புறவு முறிவுக்கும் ஒரு முடிவு காண வேண்டுமானால் ;மேலும் காலம் தாழ்த்தாமல் சமஷ்டி அடிப்படையிலான இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையேல் நாட்டில் மீண்டும் ஒரு இரத்தக்களரி ஏற்படுவதையோ அல்லது நாடு பிரிந்து போவதையோ தடுத்து நிறுத்திவிட முடியாது.

இப்படியான ஓர் எச்சரிக்கையை விட்டிருப்பது தமிழீழ விடுதலைப்புலிகளோ, தமிழ் அரசியல் வாதிகளோ, சர்வதேச தமிழ் அமைப்புக்களோ அல்ல.

அப்படியானால் அதைக் கூறி இருப்பவர் யார் என்று அறிய உங்கள் ஆவலைத் தூண்டுகிறது அல்லவா?

மூத்த அரசியல்வாதியும், ஆரம்பகாலம் தொட்டே தமிழ் மக்களுக்காகவும், மலையகத் தொழிலாளர்களுக்காகவும் மேடைகளில் மட்டுமல்ல ,நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்தவரும், ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தியவருமான முற்போக்கு எண்ணம் கொண்ட சகோதரர் வாசுதேவ நாணயக்கார தான் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், சகல உரிமைகளுடனும் வாழ அரசமைப்புச்சட்டங்கள் முட்டுக் கட்டையாக இருந்தால்; அதைத் தூக்கி எறிவதிலும் தவறில்லை என்கிறார் வாசுதேவ நாணயக்கார.

கண்டியில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிவரும் மனித அபிவிருத்தித் தாபனம் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற வதிவிடக் கருத்தரங்கிலேயே வாசுதேவ நாணயக்கார இப்படித் துணிச்சலாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

மலையகத்தின் இதயம்-மலையகத் தலைநகர் -எனக் கூறப்படும் கண்டி நகரில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஹந்தானை மலை உச்சியில் அமைந்திருக்கும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பயிற்சி நிறுவனத்தில் இக் கருத்தரங்கு கடந்த 20,21,22 ஆம் திகதிகளில் மனித அபிவிருத்தித் தாபனத்தின் தலைவர் பி.பி.சிவப்பிரகாசத்தின் நெறியாள்கையில் நடைபெற்றது.

கருத்தரங்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், தென் பகுதியான காலி, மாத்தறை, களுத்துறை, சப்ரகமுவ, ஊவா, மத்திய மாகாணம், கொழும்பு எனப் பல பகுதிகளிலும் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன், ஊடகத் துறையினரையும், புத்தி ஜீவிகளையும் ஒரே மேடையில் ஒன்று கூட்டி மூன்று தினங்கள் ஒன்றாகவே உலாவ விட்ட பெருமை மன்ற நிதியத்தின் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசத்தையே சாரும். அவர் பாராட்டப்பட வேண்டியவர்.

வட பகுதித் தமிழர்கள் என்றால் அனைவரும் புலிகள், பயங்கரவாதிகள் என்ற ரீதியுடன் வந்த காலி, களுத்துறைவாழ் சிங்களவர்களும்-

சிங்களவர்கள் என்றாலே கொடூரமானவர்கள், கொலைகாரர்கள் எனப் பயப்பிராந்தியுடன் வந்த வடக்கு- கிழக்கு சகோதர, சகோதரிகளும், இங்கு ஒரே குடும்பம் போல் இருந்து பரஸ்பரமாக தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுள், ஊடக நண்பர்கள், புத்திஜீவிகள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், தொண்டர் நிறுவனங்களின் அமைப்பாளர்கள் என அனைவரும் ஓரளவு நாட்டின் நலனிலும், சமூக ஒற்றுமையிலும் ஆர்வம் கொண்டவர்களாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறான கருத்தரங்கில் சகோதரர் வாசுதேவ நாணயக்கார முன் வைத்த கருத்துக்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் எடுத்துச் சொல்லப்படும் என்று உறுதியாகிவிட்டது.

''1948ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் அடைந்தபோதும் 1972ஆம் ஆண்டுவரை டொனமூர், சோல்பரி ஆணைக்குழுக்களின் சிபார்சுகளை அடிவருடி உருவாக்கப்பட்ட

**கருத்தரங்கின் ஒரு கண்ணோட்டம்**

அமைப்புகளே இங்கும் மாறி மாறி உருவாக்கப்பட்டன.

''இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போது பிரிட்டிஷ்காரர் சகல மதங்களுக்கும், சகல மொழிகளுக்கும் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் வழங்கியே சென்றனர்.

''ஆனால் எம்மவர்கள் ஆளத் தொடங்கிய பின்பு தான் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஆட்சி செய்யும் அதிகாரம் உருவாக்கப்பட்டது. எம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த வெள்ளையர்கள் தயாரித்த அரசமைப்பின் அடிச்சுவட்டிலேயே எம்மவர்களும் சொல்லத் தலைப்பட்டனர். 75வீதமான சிங்களவர்களுக்கு ஏனைய சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி ஆள வேண்டும் என்ற எண்ணம் உருவானது.

''அதேவேளை 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற இந்தியா, அன்றே ஆங்கிலேயரின் அரசமைப்பைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு சுதந்திர இந்தியாவுக்கென ஒரு தனியான அரசமைப்பை உருவாக்கிக் கொண்டது.

''மொழி ரீதியாக, மத ரீதியாக குரல் எழுப்பப்பட்டபோது பாதி தான் பிரித்து வழங்கப்பட்டது. ஒரே வீட்டில் சண்டை பிடித்துக்கொண்டிருப்பதை விட அடுத்தடுத்த வீடுகளில் நண்பர்களாக இருப்போம் எனத் தீர்மானிக்கப்பட்டது. அப்படியே பிராந்திய இராச்சியங்களுக்கும், சகலஇன மக்களுக்கும் ஐக்கிய இந்தியாவுக்குள் தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அங்கு நாகலாந்துக்கும், காஷ்மீருக்கும் சற்றுக் கூடுதலான அதிகாரங்கள் அரசமைப்பிலேயே வழங்கப்பட்டுள்ளன.

''இதை ஏன் இங்கும் நாம் பின்பற்றக் கூடாது? என்று கேள்வி எழுப்பிய வாசுதேவ நாணயக்கார, மற்றும் ஒரு விடயத்தையும் புட்டுக்காட்டினார்.

''வடக்கு, கிழக்கு 20 வருடங்களாக யுத்தக் கொடுமையால் சீரழிக்கப்பட்ட ஒரு சூனியப்பிரதேசமாகிவிட்டது.

''குடிசைகள் முதல் கோயில்கள் வரை இடித்துத் தள்ளப்பட்டன. அவற்றை மீளக் கட்டியெழுப்ப காகித வடிவிலான அரசமைப்பினால் ஒன்றும் சாதித்துவிட முடியாது. அப்பிரதேச மக்களை உள் அடக்கிய இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபையிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்வார்கள்.

''ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் இடைக்கால நிர்வாக சபை என்றவுடன் ஏன்தான் நெருப்பை மிதித்தவர்கள் போல் துள்ளிக் குதிக்கின்றனரோ தெரியவில்லை.

**இப்பொழுது மட்டும் என்ன நடை பெறுகிறது?**

''அங்கே தனியான் இராணுவம், தனியான பொலிஸ், தனியான நீதிமன்றம், தனியான கல்வி நிர்வாகம், நீதி நிர்வாகம், சுகாதாரத்துறை என ஈழ இராச்சியம் தான் நடக்கின்றது. அப்படி இருந்தும் அவர்கள் தனியாகப் பிரிந்த தனி நாட்டைக் கேட்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான இடைக்கால நிர்வாகத்தைத் தானே கேட்கின்றனர். நிரந்தரமாகக் கேட்கவில்லையே, இனப்பிரச்சினை தொடர்பான பேச்சு ஒருபக்கம், அபிவிருத்திப் பணிகள் மறுபக்கம் தொடர முடியும். இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கண்ட பின்புதான் அபிவிருத்தி என்றால் பிண குவியலின் மேலும், சாம்பல் மேட்டில் இருந்தும் தான் பேச நேரிடும்.

''எனவே இந்த உண்மையை தென் பகுதியில் இருந்து வந்துள்ள புத்திஜீவிகளும், சட்டத்தரணிகளும் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டும். ஏற்படும் விபரீதங்களை உணர வேண்டும்.

''அரசுக்கும் அரசியல் வாதிகளுக்கும் இதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இல்லை என்றால், இவர்களைத் தூக்கி எறிந்து விட்டு மக்கள் பலத்தால் மாற்று அரசு ஒன்றை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இங்கு தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என ஒன்றுபட்டு வாழ முடியும் என்றும் வாசுதேவ வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த திருமதி. திலினிராஜபக்ச, பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் பேராசிரியர் சிவராஜா ஆகியோர் அரசமைப்பில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள், சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட வேண்டிய சமத்துவ உரிமைகள், மொழி மத பாதுகாப்பு என்பனவற்றையும் - கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகள், பாரபட்சங்கள், குறிப்பாக அண்மைக் காலங்களில் வழங்கப்பட்ட வரட்சி நிவாரணங்கள், பட்டதாரி நியமனங்கள் என்பனவற்றில் காணப்பட்ட பாகுபாடுகள் என்பனவற்றையும் அதற்கு ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றுத்திட்டங்கள் என்பனவற்றையும் - தெளிவாக எடுத்துக் கூறினர்.

> * ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் இடைக்கால நிர்வாகம் என்றவுடன் தீயை மிதித்தவர்கள் போல் துள்ளிக்குதிக்கின்றனர்.
>
> * சமஷ்டி முறையிலான இடைக்கால நிர்வாக அமைப்பு முறையை அங்கீகரிக்காவிட்டால், மீண்டும் இரத்தக்களரி ஏற்படுவதையும், நாடு பிரிவதையும் தடுக்க முடியாது.
>
> *குடிசனத் தொகையிலும், நிலப்பரப்பிலும், இலங்கையின் அரைப்பங்கே இருக்கும் பெல்ஜியம், ஒரே குடையின் கீழ் முப்பிரிவுகளாக இருக்க முடியுமானால் எம்மால் ஏன் முடியாது?
>
> *அரசும், புலிகளும் மட்டும் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திவிடமுடியாது. அடி மட்டத்தில் இருந்து மக்களின் மனதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.
>
> *வெறும் காகித வடிவில் இருக்கும் அரசமைப்பு சமாதானத் தீர்வுகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது எனக் கருதினால், அதை உடைத்து எறிந்துவிட்டாவது நிரந்தரத் தீர்வு ஒன்றைக்காண முன்வர வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட பண்டாரநாயக்காவின் தனிச்சிங்களச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவின் இரண்டு மொழிகள் என்றால் ஒரு நாடு, ஒரே மொழி என்றால் இரண்டு நாடுகள் எச்சரிக்கை இப்போது பலித்து விட்டது என்பதையும் தொட்டுக்காட்டியதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக விழா நாயகனும், மனித அபிவிருத்தித் தாபனத்தின் தலைவருமான பி.பி. சிவப்பிரகாசத்தின் விரிவுரையும், தொகுப்புரையும் எல்லா விடயங்களுக்கும் சிகரம் வைத்தது போல் அமைந்திருந்தன.

பூகோள ரீதியான அமைப்பிலும், இன வாரியான பிரிவுகளிலும் ,அரசியல் அதிகாரப் பகிர்வுகளிலும் பெல்ஜிய சமஷ்டிக் குடியரசுக்கும், இலங்கைக்கும் இடையிலான ஒற்றுமைகளை வரை படங்கள் மூலம் தெளிவுபடுத்தினார்.

''இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் போன்று பெல்ஜியத்தில் பிரெஞ், பிலமிஸ், ஜேர்மன் என மூன்று சமூகத்தவர்கள் வாழ்கின்றனர்.

''இங்கே வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்வது போல் பெல்ஜியத்தின் வடக்கு கிழக்குப் பகுதியில் பிலமிஸ்களும் ஜேர்மனியினரும் வாழ்கின்றனர்.

''தென்பகுதியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இங்கு வாழ்வது போல் பெல்ஜியத்திலும் பிரெஞ்சு சமூகத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

''பிரெஞ்சுக்காரர்கள் பொருளாதார ரீதியாக தனித்துவ உரிமையுடனும், பிலமிஸ்களும், ஜேர்மனியர்களும் கலை, கலாசார ரீதியாக முழு உரிமைகளுடனும் வாழ்கின்றனர். எனினும் தனித்தனி பிராந்திய அரசமைப்பு உண்டு. மிகவும் சிறுபான்மையினராக வாழும் ஜேர்மனியர்களுக்கு தனியான ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

''மத்திய அரசிடமிருந்து கூட்டாகக் குடி உரிமை பெற்ற பிலமிஸ்களும், ஜேர்மனியினரும் தமது பிரதேசத்தில் தனித் தனியான பிராந்திய அரசுகளை அமைத்துள்ளனர்.

''மூன்று பிராந்திய அரசுகளுக்கும் பொதுவான மத்திய அரசு பிரஸல்ஸ் தலைநகரில் இயங்குகின்றது. இங்கேதான் மத்திய அரசின் நாடாளுமன்றம் இயங்குகின்றது. நீதித்துறை, சிவில்கட்டம், இராணுவ பாதுகாப்பு, பொலிஸ் காவல்துறை என்பன மத்திய அரசிடம் இருக்கின்றன.

''அதேவேளை பிராந்திய சிவில் பாதுகாப்புக்கான பொலிஸ்துறை, தமது பிரதேச அபிவிருத்திக்கான நிதி மற்றும் உதவிகளைப் பெறுவதற்கான வெளியுறவுத் தொடர்புகள் உட்பட அனைத்தும் பிராந்திய அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

''பிரஸல்ஸில் தான் ஐரோப்பிய யூனியன், ஐரோப்பிய நாடாளுமன்றம் எல்லாம் தமது தலைமைச் செயலகங்களைக் கொண்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

''பிராந்திய அரசுகளில் இருந்து விகிதாசாரப்படியும், தேர்தல் மூலமும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே மத்திய அரசின் நாடாளுமன்றத்திலும் அங்கம் வகிக்கின்றனர்.

''ஆனால், இந்த நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் தீர்மானங்கள் பிராந்திய அரசுகளின் அங்கீகாரமின்றி செயற்பட முடியாது. பிராந்திய அரசுகளின் அங்கீகாரம் அவசியம்.

''நிலப்பரப்பிலும், குடிசனத் தொகையிலும் இலங்கையை விட சரிபாதியான பெல்ஜியத்தில் இப்படியான ஒரு சமஷ்டி ஆட்சிநடைபெறுகின்றது. இவ்வளவு சிறிய நாடு மூன்று பிராந்திய இராஜ்ஜியங்களையும், மத்தியில் நாடாளுமன்றத்தையும் கொண்டு ஐக்கிய பெல்ஜியமாகச் சிறந்து விளங்குகின்றது.

''அங்கே இனங்களுக்கிடையில் நம்பிக்கை, நட்புரிமை, புரிந்துணர்வு, ஐக்கியம் என்பன தனிச்சிறப்பானவை.

''பெல்ஜியத்தின் விமான நிலையத்தில் காலடி எடுத்து வைத்தவுடன் ''இங்கே பல் இன, பல்மத மக்களாகிய நாம் சமத்துவத்துடனும், புரிந்துணர்வுடனும், நட்புரிமையுடனும், ஐக்கியமாகவும் வாழ்கிறோம். இதே மன உணர்வுடன் உங்களை வரவேற்கிறோம். உபசரிக்கின்றோம். இந்த உணர்வுகளை உங்கள் நாடுகளுக்கும் எடுத்துச் செல்லுங்கள்'' என்ற வாசகங்கள் தான் எம்மை வரவேற்கின்றன.

''இப்படியான ஒரு நிலை ஏற்பட வேண்டுமானால் எம்மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டும். அடுத்த மதங்களை, அடுத்தவரின் மொழிகளை கௌரவிக்கும் பக்குவம் ஏற்பட வேண்டும். இதற்கு அடிப்படையாக ஒவ்வொரு மனிதனின் மனதிலும் தெளிவும், புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

''இதனை அரசியல்வாதிகளினாலோ அல்லது படைபலத்தாலோ தனித்து ஏற்படுத்திவிட முடியாது. மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதன் மூலமே இதனைச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதுவே வழி வகுக்கும். அமைதிப் பேச்சுக்கு இடையூறாக இருக்கும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றால் ஏற்படுத்தப்படும் இனவாதம் அடியோடு அழிந்து போகும். மக்கள் சக்திக்கு ஈடு இணை எதுவுமே இல்லை'' என வலியுறுத்தினார் சிவப்பிரகாசம்.

இப்படிப் பயனுள்ள கருத்தரங்கு நாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது எண்ணமும்.

கருத்தரங்கின் இறுதியில் வடக்கு-கிழக்கு, மலையகம் மற்றும் தென்மாகணங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஏகமனதாகத் தயாரித்த தீர்மானங்கள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இன, மத, சாதி, சமய பேதங்களுக்கு அப்பால் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலே கடந்த காலச் சம்பவங்களைத் திரும்பிப் பார்க்காமல் நாளை நடப்பது நல்லதாக அமைய, உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இந்தப் புத்திஜீவிகளின் கோரிக்கையாக அமைந்திருந்தது.

இரா.புத்திரசிகாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### சப்ளையருக்கு சாத்தோ சாத்து

அந்தக்காலத்தில் ஆறுமுகப் பெருமானுக்கு நித்திய படையல்களைப் பக்குவமாக சப்ளை செய்து வந்தவர் மீது சாமியின் கடூரப் பார்வை விழுந்துவிட்டதாம்.

காரணம் என்ன தெரியுமா? வாக்குப் பிச்சைபோட்ட ஒருபெரியவர்சுறுசுறுப்பாகரேஸ் ஓடும் ஒரு புது முகத்திடம் போய் தனது குறைகளைச் சொன்னாராம். ஊவாவில் கொட்டை போட்ட ஒரு முதியவர் அவர்.

ஆனால் புது இளம் தலைவரோ, அந்தப் பெரியவர் மீது பாய்ந்து விழுந்தாராம். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த பெரியவர், ஊவாவில் இருந்து ஆறுமுகத் தெய்வத்தின் கோயிலுக்கே(தொலைபேசி மூலம்) மணி அடித்துவிட்டாராம்.

அங்கேயும் கூட மணியின் ஒலி சுவாமியின் காதில் படவிடாமல் ஒரு பூசாரியே ரிசீவரை எடுத்தாராம். யார் என்று சொல்லாமல் பெரியவரின் குறைகளை எல்லாம் கேட்டு விட்டு, பச்சையாக பெரியவரைத் திட்டித் தீர்த்தாராம்.

என்னடா இது? புதுக்குரலாக இருக்கே. நம் சாமியின் குரல் இல்லையே! இது ஏதோ சில்லறைகளின் விளையாட்டு என்று புரிந்துகொண்ட பெரியவர், மீண்டும் மணி அடித்தாராம்.

பாவம் பூசாரியின் கெட்டநேரம். அவர் வேறு அலுவலாக வெளியே போக அந்த ஆறுமுகப் பெருமானே ரிசீவரை எடுத்துவிட்டாராம்.

ஊவாவில் புதுநாயகனின் அட்டகாசங்களையும், கோயில் பூசாரியின் அர்ச்சனைகளையும் ஆறுமுகசாமியின் காதில் நன்றாகப் படும்படி தேவாரம் பாடிவிட்டாராம்.

அதற்கு மேலும் சொல்ல வேண்டுமா? ஆறுமுகப் பெருமான் ஆவேசத்தின் உச்சக் கட்டத்துக்கே போய்விட்டாராம். இந்த மாதிரி நாய், பேய்களால் தான் ஸ்தாபனத்தின் நல்ல பேரே கெட்டுப்போகுது என்று ஊவாவின் புதியவருக்கு சாத்தோ சாத்து என்று மொத்திவிட்டாராம்.

இப்போது அந்த ஊவாவின் புதுத் தலைவர் மூலஸ்தான முருகனையே நிந்திக்க ஆரம்பித்துவிட்டாராம்.

பாவம் என்ன செய்வது? எப்படித்தான் பக்குவமாக சப்ளை செய்தாலும், கொஞ்சம் உப்புக்கூடிவிட்டால் பீங்கானே முகத்துக்கு வருகிறது என்றும் அலுத்துக்கொள்கிறாராம் அந்தப்புதுமுகம்.

இதைக் கேள்விப்பட்ட பெரிசுகள் புதுமுகத்தை தோட்டப்பக்கம் வந்தால் நாங்களும் சாத்திவிடுவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனராம். இப்போ இரண்டும் கெட்டான் நிலையானதாம்.

### வேந்தனின் ஆசனம் ஆட்டம் காண்கிறதாம்.

என்னதான் சொன்னாலும் இந்த மனிதன் கேட்க மாட்டேன் என்கிறாரே. நண்டு போல அங்கும் இங்கும் ஓடித்திரிகிறார். யாரிடம் எதைப்பேசுகிறோம் என்று தெரியாமல் உளறிக்கொட்டி எல்லோரது மானத்தையும் வாங்குகிறாரே என்று இளசுகள் ஆதங்கப்படுகின்றனராம்.

விசயம் என்னவென்று மூக்கை நுழைத்துப் பார்த்தால் பல விடயங்கள் வெளிவருகின்றனவாம்.

இந்த வேந்தனார் வடபுலக்கூட்டின் கொள்கைகளுக்கு மாறுபட்ட வகையில் சந்திக்கக் கூடாதவர்களையெல்லாம் சந்திக்கிறாராம். பேசக் கூடாததையெல்லாம் பேசுகிறாராம்.

அத்தோடு நின்றுவிடவில்லையாம். சிவப்புச்சட்டை போஸ்டர்காரர்களிடம் போய்த் தனது வீரப்பிரதாபங்களை எல்லாம் அவிழ்த்துவிடுகின்றாராம்.

இந்த வேந்தனார் போனபின்பு, இந்த மனிதன் இவ்வளவு நேரம் என்ன தூஷணமா பேசிக்கொண்டிருந்தார் என்று கேலியாகச்சிரிக்கின்றனராம். பாவம் வேந்தனாருக்கு எங்கே தெரியப்போகிறது; போஸ்டர் காரர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்பது.

இந்த வேந்தனாரின் அட்டகாசம் வடபுலக் கூட்டுக்குள்ளும் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாம். இதனால் வேந்தனாரின் ஆசனம் சிறிது ஆட்டம் கண்டுள்ளதாம். சிலவேளை சட்டத்தரணியைக் கொண்டு முட்டுக்கொடுக்கவும் ஒரு பேச்சாம். வாயால் கெட்டதாம் தவளை.

### அரை மந்திரி ஆசை ஆளையே ஏப்பம் விட்டதாம்.

மரத்தில் இருந்தவர்களை கீழே தள்ளி விட்டதால் அவர்கள் மருந்து போட கோர்ட்டுக்குப் போய்விட்டனர். தனித்துவத் தலைவருக்கு நேரம்சரி இல்லையாம். பாவம் என்ன செய்வது? மும்மூர்த்திகளையும் மீண்டும் உரிமையுடன் மரத்தில் ஏற்றிவிட்டனராம்.

இதனால் இந்த மும்மூர்த்திகளை விட அதிகம் சந்தோஷப்பட்டவர் குடாவின் நாயகரான அலியார் தானாம்.

காரணம் என்ன தெரியுமா? இப்போதே கிழக்கில் உட்கட்டமைப்பைக்கொண்டு நடத்துபவருடன் கூடிக்கும்மாளம் அடிக்கிறார். தனித்துவத் தலைவருக்கே சிவப்புக் கொடி காட்டினார்.

எல்லாம் அந்தக் கிழக்கு சீமையார் கொடுத்த தெம்பு என்கின்றனராம்.

இப்போது கிழக்கு அபிவிருத்தியாருக்கும் பெரிய தொல்லையாகிவிட்டதாம். உங்களை நம்பித்தானே தலைமைக்கே சிவப்புக்கொடி காட்டினேன். அப்போ சொன்னீங்க தானே அரை மந்திரியாக்குகிறேன் என்று இப்போது அதைச் செய்யுங்கள் என்று கிழக்கரின் கழுத்தைப்பிடிக்கின்றாராம்.

இது என்னடா பெரிய வம்பாப் போச்சு, ஒரு பேச்சுக்குச் சொன்னதை இந்த மனுசன் உடும்புப்பிடியாய் பிடிச்சுக்கொண்டதே என்று திக்குமுக்காடிப்போய் நிற்கின்றாராம்.

இன்னும் ஒரு சங்கதியும் இப்ப லேசா புகைய ஆரம்பிச்சுவிட்டதாம்.

மீண்டும் மரத்தில் ஏற்றி அமர்த்தப்பட்டுள்ள மும் மூர்த்திகளையும் பைலா போட வசதியாகப் பக்கத்தில் அமர்த்திவிட ஒரு கோஷ்டியினர் முயல்கின்றனராம்.

ஏன் தெரியுமா? நவம்பர் பட்ஜெட்டுக்கு முன் இந்த மும் மூர்த்திகளையும் சேர்த்துக் கொண்டால் நம்பர் 108 ஆகிவிடும் என்று கணக்குப்போட ஆரம்பித்துவிட்டார்களாம். இதற்கு மாற்றுப்பரிகாரமாக அரை மந்திரிப் பதவி வழங்கவும் முன் வந்துள்ளனராம். இதனால் குடாவின் அலியார் அசந்து போய் விட்டார் பாருங்க.

கிழக்கு அபிவிருத்தியாரை நம்பி தலைமைக்கு சிவப்புக்கொடி காட்டினேன். இப்போ இந்த மனுசனும் காலைவாரி விட்டிடுவார் போல இருக்கே என்று இரண்டும் கெட்டான் ஆகிவிட்டாராம் அலியார். பாவம் அரை மந்திரி ஆசை ஆளையே ஏப்பம் விட்டுவிட்டதாம்.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/- தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/-
தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்
மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/-



ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேட் 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒருகதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | ரீபீஏ | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | ரீபீஏ | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கை | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | (பமிலி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கார்ட்டூன் | கில்லி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | தமிழ் கார்ட்டூன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | மிஸ்டர்.பீன் | 2004 ஒலிம்பிக் (டெனிஸ்) |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | ஸ்டாருடன் ஒரு நாள் | 2004 ஒலிம்பிக் 5.55 அன்பு மடல் |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | ஸ்டாருடன் ஒரு நாள் | மின்னல் |
| 6.30 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | அலைய்ஸ் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
ஆக. 30 – செப். 05, 2004
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401–6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஐ.தே.கவினால் முடியுமா?

இன்று நாட்டில் 18 மாவட்டங்களில் வரட்சி ஏற்பட்டிருக்கிறது. வரட்சி நிவாரணம் வழங்குவதற்கு திறைசேரியிடம் பணம்இல்லை.

அத்தியாவசியப்பொருள்களின்விலைகள் தினமும் அதிகரித்து வருகின்றன. எரிபொருள் விலை உயர்வை அடுத்து பஸ், ரயில் கட்டணங்கள் அதிகரிக்க உள்ளன. வேலை நிறுத்தங்களும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு பக்கம் வறுமை மறுபக்கம் யுத்த பீதி. நாட்டில் யுத்த காலத்தில் இல்லாத அளவு படு கொலைகள் நிகழ்ந்து வருகின்றன.

ஏப்ரல் 2 ஆம் திகதிய பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் பதவியில் அமர்த்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு செய்வது அறியாது தடுமாறுகிறது.

நாடாளுமன்றத்தில் அரசுக்குப் பெரும்பான்மை இல்லை. கடந்த நான்கு மாதங்களில் பெரும் பகுதி, பெரும்பான்மை பெறும் முயற்சியிலேயே கழிந்து விட்டது. அரசுக்கு முட்டுக் கொடுக்க சம்மதித்த இ.தொ.காவின் நிலைமை இன்னும் தெளிவாக இல்லை.

தெற்கில் பேரினவாதிகளின் கை ஓங்கிய நிலையில் சமாதானப் பேச்சுக்களும் கேள்விக்கிடமாகி விட்டன. சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது மூலம் டோக்கியோ மாநாட்டில் வாக்குறுதி அளிக்கப்பட்ட 450 கோடி டொலர் உதவியைப் பெறும் வாய்ப்பு தற்பொழுது சிறிதளவாயினும் இல்லை.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த நான்கு மாத காலத்துக்கு உள்ளேயே நாட்டின் எதிர்காலம் கேள்விக்குரியதாகி விட்டது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இரு முன்னாள் அமைச்சர்கள் ஆளும் கூட்டமைப்பு அரசுக்கு சவால் விடுத்துள்ளனர்.

''எதையும் செய்ய முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி நாட்டை எம்மிடம் ஒப்படைக்கட்டும். ஒரு வருடத்தில் நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கான அத்திவாரத்தை நிலைநிறுத்தி, சகல துறைகளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்திக் காட்டுகிறோம்'' என்கின்றனர் இவர்கள்.

முன்னாள்அமைச்சர்களான காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஹேமகுமார நாணயக்கார ஆகியோரே எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நாட்டில் இரண்டு தசாப்த காலம் புரையோடிப் போயிருந்த இனப்போருக்கு தற்காலிகமாகவாவது நிறுத்தப்புள்ளிவைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசும் அதன் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் உரிய பங்களிப்பை வழங்கினார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

2002 பெப்ரவரியில் கைச்சாத்திடப்பட்ட அரசு – புலிகள் யுத்த நிறுத்த் ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருந்து வருகிறது. ஆனால், சமாதான முயற்சிகள் தான் பெரும் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளன.

இனப்பிரச்சினை மோசமடைந்து யுத்தமாக வெடிப்பதற்கு, சுதந்திரத்தின் பின்பு நாட்டை மாறி, மாறி ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே பொறுப்பு.

1970 – 77 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போர் ஆயுத வழியில் திரும்பியது.

எனினும் அது முகிழ்ந்து முனைப்புப் பெற்று முழுவடிவம் பெற்றது ஐக்கிய தேசியக்கட்சியின் 17 வருடகால ஆட்சியில்தான்.

சமாதானத்துக்கான மக்களின் ஆணையைப் பெற்று 2001 டிசம்பர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றபோதிலும், புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தவிர பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை.

யுத்தம் நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட அமைதி நிலையின்பெறுபேறாகக்கிடைத்த பிரயோசனத்தை தென் இலங்கை மக்களே அனுபவித்துவருகிறார்கள். இரண்டு தசாப்தகால யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், நாட்டை எம்மிடம் ஒரு வருடத்துக்குத் தாருங்கள், நிரந்தர சமாதானத்துக்கான அத்திவாரத்தை நிலை நிறுத்தித் தருகிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுவது வெறும் வாய்ப் பந்தல்.

# போரை நோக்கிய காய் நகர்த்தல்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும்இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் இவ்வாரம் மேலும் பின் தள்ளப்பட்டுவிட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவி ஏற்று சிறிது காலம் சமாதானம் பற்றிப் பேசி வந்த அரசுத் தலைவர்கள் தற்பொழுது யுத்தம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையின் தற்போதைய நிலைமையானது மிகவும் அபாயகரமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக இலங்கைக்கான நோர்வேத் தூதரக அதிகாரி கஜெஸ்ரி ரொம்ஸ்டால் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்தவாரம் அவர் யாழ்ப்பாணம் சென்ற சமயமே இத்தகைய கருத்தை வெளியிட்டார். நாட்டின் இரண்டு தசாப்தகால யுத்தத்துக்கு முடிவு காண்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் குறுக்கு வழியில் சென்று கொண்டிருக்கின்றன என்கிறார் அவர்.

ஜனாதிபதி சமீபத்தில் யு.பி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் புலிகளின் உட்பகையால் எழுந்துள்ள சண்டை நாட்டின் ஸ்திர நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்துமானால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச படைகள் செல்ல உத்தரவிடுவேன் என்று மிரட்டி இருந்தார்.

இதனைப் புலிகள் பாரதூரமான ஒரு கூற்றாக எடுக்காவிட்டாலும் நாட்டின் தலைவி ஒருவரிடம் இருந்து இந்த கருத்து வெளிவந்திருப்பதை அசட்டை பண்ணிவிட முடியாது.

மக்கள் உயிர்த் தியாகம் செய்ய வேண்டிய கால கட்டம் வந்து விட்டதாக ஜே.வி.பியும், நாட்டைப் பாதுகாக்க தேரர்கள் மரணத்தைச் சந்திக்கத் தயார் என்று தேசிய பிக்கு முன்னணியும் வெளியிட்ட கருத்துக்கள் நாட்டின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தல் உருவாகி வருவதை கோடி காட்டுகின்றன.

வழமை போன்று இவ்வாரமும் கிழக்கில் பல்வேறு அசம்பாவித சம்பவங்கள்இடம்பெற்றுள்ளன. இவற்றுள் மோசமானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் கொலை செய்யப்பட்டது ஆகும்.

வாழைச் சேனைக்கு அருகில் காயங்கேணி இராணுவ முகாமுக்குச் சமீபமாக இந்த சம்பவம்இடம் பெற்றது.

காயங்கேணி இராணுவ முகாமில் வழமையான தமது பரிசோதனைகளை முடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம்கிளைமோர் தாக்குதலுக்கு இவர்கள் உள்ளானார்கள்.

இவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் ரேணுகா என்ற பெண் போராளி காயம் அடைந்தார்.

தாக்குதலின் பின்னணியில் அரசபடைகளின் கை இருப்பதாக புலிகள் திடமாக நம்புகிறார்கள். படையினரும் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை.

இந்தச் சம்பவம் இடம்பெற்று இரு தினங்களின் பின்பு அதே இடத்தில் வைத்து படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட பின்புதான் நிலைமையின் பாரதூரம் அரசுக்குப் புரியவந்திருக்கிறது.

காயன்கேணிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்தார்.

புலிகளே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக படையினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஆனால், புலிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

காயங்கேணியில் படையினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை அடுத்தே படைத்தரப்பினரும், பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், யுத்தத்துக்கான காய் நகர்த்தல்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாரம் வன்னிக்கு விஜயம் செய்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்புப் படையினர் மத்தியில் பேசுகையில், புலிகளின் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களின் போது நடவடிக்கை எடுக்க கண்காணிப்புக் குழு தவறி வருகிறது.

இத்தகைய நிலைமை தொடர்ந்தால் இன்னொரு கண்காணிப்புக்குழுவை அமர்த்துவது குறித்து பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்று எச்சரித்துள்ளார்.

நோர்வேக்குப் பதிலாக புதிய அனுசரணையாளர் ஒருவரைக் கண்டுபிடிக்கும் நிலைமை உருவாகி வருவதையும் அவர் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது அமுலில் இருந்து வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு இது பெரும் அச்சுறுத்தல் என்றே கருதப்படுகிறது.

''யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் ஒரு நாட்டுக்குள் இரு நாடுகள் உருவாகி இருக்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்ட போதிலும் ஒரு தரப்பினரே நன்மை அடைகிறார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்தம் தற்போது ஒரு தரப்பு ஒப்பந்தம் ஆகிவிட்டது. ஒரு நாட்டில் ஒரு பொலிஸ் பிரிவே இருக்க முடியும்.

ஒரு நீதிபரிபாலன முறையே இருக்க முடியும். அரசு மட்டுமே வரி அறவிட முடியும். ஆனால், தற்பொழுது அப்படி இல்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் படி இரு தரப்பினரும் மற்றவரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முடியும்.

அரசியல் நடவடிக்கை என்ற பெயரில் புலிகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாராளமாகச் சென்று வருகிறார்கள். ஆனால், படையினரால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்ல முடிவதில்லை.''

- இப்படி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கொட்டித்தீர்த்திருக்கிறார்.

வவுனியா விஜயத்தின் பின்பு கொழும்பு கோட்டையில் உள்ள கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்த போதும் அதே தோரணையிலேயே அவர் உரையாற்றினார். படையினரின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என்று அவர் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

பாதுகாப்புப் படையினரை புலிகள் யுத்தத்துக்கு சீண்டுகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

''புலிகளின் அண்மைககால நடவடிக்கைகள் படையினரின் பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைகளும் வெறுப்பை ஊட்டுகின்றன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கடமைகளைச் செய்வதில்லை. குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு இவர்கள் கடமைகளைச் செய்ய முடியாது.'' என்றும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க குற்றஞ்சாட்டி உள்ளார்.

கிழக்கிலும், கொழும்பிலும் இடம்பெற்று வரும் சம்பவங்கள், அரசின் பொறுப்புள்ள தலைவர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் புலிகளுக்கு எதிரான போருக்கான ஒரு காய் நகர்த்தல் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

யுத்தம் எந்நேரமும் வெடிக்கலாம் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் நாடு பிளவுபட்டு விட்டது என்றால் ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டியது தானே என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு ஐ.தே.க. பதில் அளித்துள்ளது.

இராணுவத் தளபதி சந்த கோட்டேகொடவும் படையினரை உஷார் படுத்திவருகிறார்.

தேவை ஏற்பட்டால் முழுப் பலத்தையும் பயன்படுத்துமாறு அவர் தனது கிழக்குத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி புலிகள் எமது படையினர் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இது தொடர நாம் அனுமதிக்க முடியாது என்று இராணுவத் தளபதி கூறி உள்ளார்.

20 வருடகால யுத்தத்தில் படையினரும் புலிகளும் கடைப்பிடித்து வரும் நீண்டகால யுத்த நிறுத்தம் இதுதான்.

எத்தனையோ தாக்குதல் நடவடிக்கைகள், ஆத்திரமூட்டும் சம்பவங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் புலிகள் பொறுமை காத்து வருகிறார்கள்.

மீண்டும், யுத்தம் மூளுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கமே ஏற்கவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக இருந்த சமயம் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை அபகரித்ததும் நாடாளுமன்றத்தைக் கலைத்ததும் ஜனாதிபதிதான்.

தற்பொழுது இதனால் ஏற்பட்ட பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். ஜனாதிபதியும் அவரது சிரேஷ்ட சகாக்களும் யுத்த அச்சுறுத்தல்களை விடுத்துவரும் போதிலும் புலிகள் நிதானத்தையே கடைப்படித்து வருகின்றனர். இரு தசாப்தங்களுக்குப் பின்னர் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை இயன்ற அளவு பயன்படுத்துவது என்பதில் புலிகள் உறுதியாக இருப்பதால் அரச தரப்பின் யுத்தத்துக்கான காய் நகர்த்தல்கள் உடனடியாக யுத்தமாக வெடிக்கவாய்ப்பு இல்லை என்பதே அவதானிகளின் கருத்து.

**கிழக்கில் நிலைமை மோசமடைந்து மீண்டும் யுத்தம் மூளுவதற்கான அச்சுறுத்தல் ஏற்பட முக்கிய காரணம் கருணா விவகாரத்தை அரசு கையாண்ட தவறான முறையே. தமிழ் தேசியத்துக்குப் பெரும் துரோகம் இழைத்த கருணாவைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி விட முடியும் என்று அரசு நம்பியது. ஆனால், இறுதியில் கருணா தனது சகாக்கள் எல்லோரையும் கைவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார்.**

**கருணாவினால் கைவிடப்பட்ட ஒரு சில சகாக்களையே படைத்தரப்பினர் தற்பொழுது பயன்படுத்தி வருகின்றனர். கிழக்கில் நடைபெறும்சம்பவங்களுக்கு இத்தகைய ஒரு சிலரே பின்னணியில் நின்று செயற்படுகின்றனர்.**

**இன்னும் எஞ்சி உள்ள கருணாவின் சகாக்களை ஒழித்துக் கட்டும் முயற்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வாரம் கருணாவின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான பேரின்பம் ஜெயக்குமார் என்பவர் அக்கரைப்பற்று நீதிமன்றத்துக்குள் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.**

**படையினரின் பாதுகாப்பில் இயங்கும் கருணாவின் சகாக்கள் இருக்கும் வரை கிழக்கில் அமைதி ஏற்படமாட்டது என்று புலிகள் கருதுகின்றார்கள்.**

-சஞ்சாரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய விசாரணை செய்யுமா ஜே. வி. பி?

"உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்?" என்று தேடியிருக்கிறார் ஜே. வி. பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ. மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் "பொது எதிரியான புலியைத் தோல்வியடையச் செய்யவும், இடைக்கால நிர்வாக சபை யோசனையை இல்லாதொழித்து நாட்டின் இறைமை, சுயாதிபத்தியத்தைப் பாதுகாக்கவும் நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும்" என்று உரத்துக் கூவியுள்ளார் வீரவன்ஸ! "உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்?" என்பதே மஹரகமவில் இடம்பெற்ற அக்கருத்தரங்கின் தலைப்பாகும்.

"நாடு என்ற இலக்கு கீழ்ப்படுத்தப்பட்டு, சமாதானம் என்ற பதம் முன்னிலைப்படுத்தப்பட்டது. இதனைப் புலிகள் வியூகம் வகுத்து மேற்கொண்டனர். புலிகள் நாட்டைத் திட்டமிட்டுச் சீர்குலைத்து, நாடு என்ற இலக்கைக் கீழ்ப்படுத்தி, சமாதானம் என்ற புலிகளின் வியூகத்தை முன்வைத்தனர். இதன் மூலம் நாடா - சமாதானமா? என்ற ஒரு நிலைப்பாட்டை புலிகள் வெளியிட்டனர். புலிகள் குண்டுகளை வெடித்தவுடன் அவர்களது கைக்கூலிகளான அரசசார்பற்ற நிறுவனங்கள் சமாதானம் வேண்டும் , பேச வேண்டும் என்ற குண்டை வெடிக்க வைப்பார்கள். இதனை உருவாக்குவது தான் புலிகளின் இலக்காகும்..." என்று தனது உரையில் தெரிவித்தார் ஜே. வி. பியின் பிரசார செயலாளர்.

### இரத்தம் தோய்ந்த போரியல் - அரசியல்

நாட்டின் நகரங்களிலும், கிராமங்களிலும் போரின் கொடூர விளைவுகளை அனுபவித்தவர்கள், அப்பாவித் தமிழ் மக்களும், அப்பாவி முஸ்லிம் மக்களும், அப்பாவி சிங்கள மக்களும் ஆவர்.

போரினால் சலித்தும், களைத்தும் போயுள்ளவர்கள் அந்த அப்பாவி மக்களே. தங்கள் இரத்த உறவுகளையும், வீடுவாசல்களையும் இழந்தவர்களும் அவர்களே. வடக்கு – கிழக்கில் தமிழ் மக்கள் தங்கள் பூர்வீக நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றையே பல்வேறுவிதமான இராணுவ உபாயங்களால் உயர்பாதுகாப்பு வலயம் போன்ற பிரகடனங்களால் இழந்து நிற்கின்றனர். அதுமட்டுமல்ல, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டங்களால் தமிழ் மக்கள் ஒரு சில மாவட்டங்களையே இழக்கும் நிலைமை வந்து சேர்ந்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற கொடிய போருக்கு தமிழர்கள் விடுதலைப் போர் என்று பெயரிட்டிருந்தனர்; சிங்கள மக்களும், அவர்களது பிரதிநிதிகளும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றும் 'விடுவிக்கும் போர்' என்றும் பெயரிட்டிருந்தனர். உரிமைகள் மறுப்புக்கும், அடக்கு முறைக்கும் எதிராக தமிழ்த் தலைமைகள் எழுந்தபோது ஈழத் தமிழரின் அரசியல், இரத்தம் தோய்ந்த போரியல் - அரசியலாக மாறியது. இதற்கெதிராக சிங்கள அரசுத் தலைமைகள் தமது அரச இயந்திரத்தின் மூலம் மேலும் மேலும் அடக்கியொடுக்கும் போரைக் கட்ட விழ்த்துவிட்டு முப்படையினரும், தமிழ்ப் போராளிகளும், அப்பாவி மக்களுமாக ஒரு இலட்சத்து இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்கள் அழிக்கப்பட்ட பின்னரே, சமாதானம் என்ற வழிவகையை நாட வேண்டிய நிர்ப்பந்தம் அடக்கியொடுக்கிய ஆட்சியாளருக்கும், அடக்கியொடுக்கப் பட்ட தமிழர்களுக்கும் வந்து சேர்ந்தது.



### வீழ்ச்சியுற்ற இலங்கைப் பொருளாதாரமும் தரைமட்டமாகிய வடக்கு- கிழக்கும்

இருதரப்பும் சமாதானம் என்ற வழிவகையை நாடியபோது - இருதரப்பினரிடத்தும் வெளித்தெரிந்த, வெளித்தெரியாத பலன்களும், பலவீனங்களும் இருந்திருக்கும். மாறிவந்த உள்நாட்டு, சர்வதேச சூழ்நிலைகள் இருதரப்பின் மீதும் நேரடியான, மறைமுகமான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கலாம். போரினால் ஒட்டு மொத்தமாக வீழ்ச்சிகண்ட இலங்கைப் பொருளாதாரத்தை நிமிர்த்துவதும், போரினால் நேரடியாகத் தரைமட்டமாகிப்போன வடக்கு - கிழக்கை புனர்நிர்மாணம் செய்து அங்கே அடிப்படையான உட்கட்டுமாண வசதிகளை ஏற்படுத்தி ஒரு நிலைத்து நீடிக்கும் அபிவிருத்திக்கு வடக்கு -கிழக்கை இட்டுச் செல்வதும் முறையே அரசாங்கத் தரப்பினதும், விடுதலைப் புலிகளினதும் சமாதான நாட்டத்துக்கான காரணங்களாக இருந்தன.

ரணில் அரசாங்கமாக இருந்தாலென்ன, தற்பொழுது ஆட்சியிலுள்ள சந்திரிகா அரசாங்கமாக இருந்தாலென்ன போரின் அழிவிலிருந்து இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நிகழ்ச்சி நிரலிலிருந்து பின்வாங்க முடியாது. அதேபோல போரினால் அழிந்து கிடக்கும் வடக்கு -கிழக்கை புனர்வாழ்வுக்கும், புனர்நிர்மாணத்துக்கும், அபிவிருத்திக்கும் உட்படுத்துவதற்காக ஒருஇடைக்காலத்தன்னாட்சியை வடக்கு-கிழக்கில் உருவாக்கும் தமிழ் மக்களின் பொருளாதாரம்சார் அரசியல் அபிலாஷையை விடுதலைப்புலிகள் பிரதிநிதித்துவம் செய்ய முயல்வதும் தவிர்க்கமுடியாததே.

அமுலிலிருக்கும் போர்நிறுத்தத்தை தொடர்வதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சந்திரிகா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இன்னும் எவ்வளவு காலம் இழுபறிகளுடன் காத்திருக்கப் போகிறார்களோ தெரியாது. ஆனால், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பது எனும் விடயம் வடக்கு -கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பை மேற்கொள்ளத் தக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அமைக்கும் விடயத்தை உள்ளடக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதிலேயே நிச்சயம் தங்கியுள்ளது.

### வரலாற்றை மறக்கும் வீரவன்ஸ

சமாதானம் என்ற பதத்தையும், சமாதான நடைமுறைகளையும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளையும் எள்ளி நகையாடுவதன் மூலமோ, திரிபுபடுத்தி பிரசாரம் மேற்கொள்வதன் மூலமோ ஜே. வி. பி தலைவர்கள் எதைச் சாதிக்கப்போகிறார்கள்? நாட்டில் பேரழிவை விளைவிக்கவல்ல ஒரு பெரும் கொடும் போரை நடத்தும்படி இவர்கள் சிங்கள மக்களைத் தூண்டுவதன் மூலம், தம்மை தேசபக்திமிக்கவர்களாகக் காட்டி, சிங்கள, தமிழ் மக்களின் பிணக்குவியல்களின் மீது செங்கொடிகளையும், சிங்கக் கொடிகளையும் நட்டு அரசியல் செய்யப்போகிறார்களா?

பொது எதிரியான புலிகளைத் தோல்வியடையச் செய்யவும், இடைக்கால நிர்வாகசபை யோசனையை இல்லா தொழிக்கவும் அணிதிரளுமாறு அறை கூவும் விமல் வீரவன்ஸ, வரலாற்றை மறந்து - மேடைப்பேச்சுக் கவர்ச்சிகாக புலி எதிர்ப்பு வாதங்களை கக்குவது எவ்வளவு தூரம் இலங்கைச் சமூகங்களைக் காப்பாற்றப்போகிறது? என்பது அனைவரையும் பீதிக்குள்ளாக்கும் வினாவாகும். விமல் வீரவன்ஸ தமது கட்சியான ஜே. வி. பியை வளர்ப்பதற்காக போலியாகப் போர்க்கோஷங்களை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பாராக இருப்பின் அதன் காரணமாக உந்தப்படும் சிங்கள மக்களின் இளம் சமூகம் அதிதீவிர பௌத்த சிங்கள தேரியவாதச் சகதிச் சிந்தனைக்குள் சிக்கிக்கொள்ளும். இதனால் ஜே. வி. பி சிலவேளை தற்காலிக அரசியல் இலாபங்களை ஈட்ட முடியும். ஆனால், இலங்கைத் தீவு இனப்போர் என்ற தீவிர சூறாவளிக்குள் அடுத்துவரும் பல ஆண்டுகளுக்கு சிக்கிக் கொள்ளும் நிலைமையே ஏற்படும். அதன் பின்னர் மேலும் ஒரு இலட்சம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அழிந்த பின்னர், மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவது புத்திசாதுரியமாக இருக்கமுடியாது.

### சமாதானம் இல்லையேல் நாடு இல்லை!

நாடா? சமாதானமா? என்று கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ஸ! சமாதானமில்லையேல் நாடு இல்லை என்பதை பல சிங்கள புத்திஜீவிகளே உணர்ந்துள்ள நிலையில், சமாதானம் சிங்கள நாட்டை அழித்துவிடும் என்ற ரீதியில் சிங்கள மக்களைத் திசை திருப்பி ஜே.வி.பி. தனது கட்சியை அரசியல் ரீதியில் வளர்க்க முற்படுமாயின், அந்த வளர்ச்சி நீர்க்குமிழி போன்று தற்காலிகத் தன்மையானது. இதனை அரசியல் புலமையாளர்களாகவுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே ஜே. வி. பிக்கு சுட்டிக்காட்டுகின்றனர்.

இரத்தம் தோய்ந்துபோயுள்ள இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் 'சமாதானத்தின் எதிரிகள் யார்?' என்பதை ஜே.வி.பி. தலைவர்கள் கண்டுபிடிப்பார்களா? அவர்கள் சுயவிசாரணை செய்யவேண்டிய நிலை உள்ளது!

-யாழ். ஆத்மா-

# பெண் பாவம்

கற்பகம் விழி நிறைந்த கண்ணீருடன் ஆனந்தனைப் பார்த்தாள்.

"ஆனந்த்! நேற்றுவரை பன்னீர் தெளித்துப் பரவசப்படுத்திய நீங்கள், இப்போது கண்ணீரை வரவழைத்துவிட்டீர்களே. உங்களுக்காக என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்தேனே. இப்போது என்னை ஆழ்கடலில் தள்ளி விட்டு, ஏதோ கதை சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே......"

ஆனந்த் – வேதனையுடன் அவளைப் பார்த்தான். "கற்பகம் நீ என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லு கேட்டுக்குறேன். ஆனால் துரோகி என்று மட்டும் சொல்லாதே. சந்தர்ப்ப சூழ்நிலை என்னை சூழ்நிலைக் கைதியாக்கிடுச்சி.

செவ்வாய் தோஷமுள்ள என் தங்கச்சிக்கு எத்தனையோ மாப்பிள்ளை பார்த்து எதுவுமே சரிவரல்ல. கடைசியிலதான் செவ்வாய் தோஷமுள்ள இந்த மாப்பிள்ளை சிக்கினாரு. இந்தக் கல்யாணம் நடக்கனும்னா நான் மாப்பிள்ளையோட தங்கச்சியை மணம் முடிக்கனுமாம்.

உனக்கே நல்லாத் தெரியும். நோயாளி அம்மா, பென்ஷன் வாங்குற அப்பா, மூணு தங்கச்சிமாருங்க. இப்பத்தான் நான் சம்பாதிக்கிறேன். இந்த நிலையிலே என்னோட மூத்த தங்கச்சியைப் பார்ப்பேனா... இல்ல காதலைப் பத்தி யோசிப்பேனா... நீயே சொல்லு..."

"போதும் பேசாதீங்க, நானுண்டு – என் வேலையுண்டுன்னு இருந்த என்னை நீங்கதான் சுத்தி சுத்தி வந்து காதலிச்சீங்க. என் மனசை மட்டுமா நீங்க கெடுத்தீங்க. உங்க குடும்பத்தைப் பத்தி அடிக்கடி சொல்லுவீங்க. ஆனால் என்னை நேர்ல இதுவரை கூட்டிட்டுப் போனதில்லை. கேட்டா என் வேதனைகள், பிரச்சினைகள் என்னோட போகட்டும்னு சொல்லுவீங்க.

உங்க தங்கச்சியோட வாழ்க்கையைப் பத்தி யோசிக்கிற நீங்க, ஏன் என்னைப் பத்தி மட்டும் யோசிக்க மாட்டேன்னுறீங்க. எனக்காக என் வீட்ல நல்ல இடத்தில மாப்பிள்ளை பார்த்தப்போதெல்லாம் நான் வேணாம்னுட்டேன். கோபுர விளக்காயிருந்த என்னை காலுக்குப் போடுற செருப்பா மாத்திட்டு ரொம்பசுலபமா கதை சொல்லுறீங்களே. இது கடவுளுக்கே அடுக்காது...."




"இங்க பாரு கற்பகம். இப்பவும் சொல்லுறேன். உன்னை உண்மையா நேசிச்சது நிஜம். இப்பவும் உனக்காக என் மனம் அழுதுகிட்டிருக்கு. ஆனால் அதுக்காக நான் என் கடமையை மறுக்கமுடியுமா...?"

"உடைந்த சட்டி உலைக்கு உதவாது. நீங்க என்னதான் சொன்னாலும், என்னைப்பொறுத்த வரை நீங்கள் எனக்குச் செஞ்சது துரோகம், பச்சைத்துரோகம்! என்னோட கண்ணீர் உங்களைச் சும்மா விடாது. என் மனம் என்ன பாடு படுது.. எவ்வளவு வேதனைப் படுதுன்னு [illegible] தெரியாது. அணில் கடித்துப் பழமான என்னை இனி யார்தான் ஏத்துக்குவாங்க.

அப்பா, அம்மா சொல் கேட்காம கானலை காதல்னு நினைச்ச எனக்கு சரியான தண்டனை கிடைச்சிடுச்சி. உங்க முகத்திலேயே நான் முழிக்க விரும்பலை. தயவுசெய்து இந்த இடத்தைவிட்டுப் போயிடுங்க..."

கற்பகம் படபடவென வார்த்தைகளை அள்ளிவீச, ஆனந்த் எதுவும் சொல்லாமல் அந்தப் பூங்காவனத்தை விட்டு வெளியே வந்தான். அவன் போட்ட திட்டம் இவ்வளவு எளிதாக வெற்றியடையுமென்று உண்மையிலேயே எதிர்பார்க்கவில்லை.

கற்பகம் பிடிவாதக்காரி – அதிகமாக வம்புசெய்வாளோவென்று பயந்திருந்தான். நல்ல வேளையாக பெரிதாக எதுவும் நடக்கவில்லை. இனியென்ன பிரபல கோடீஸ்வரரான சங்கரலிங்கத்தின் ஒரே வாரிசான வசந்தியை கைபிடிக்கவேண்டியதுதான். அப்புறம் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட கார், பங்களா, வங்கியில் கணிசமான பணம் என்று சுகபோகமான வாழ்க்கைதான். நல்ல வேளையாக அவன் கற்பகத்தை கடைசிவரை தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லவில்லை. தன் பெற்றோருக்கு ஒரே மகனான அவன் கற்பனையில் உருவாக்கிய பாத்திரங்கள் போலியெனத் தெரிந்து அவனின் முகமூடி கிழிந்திருக்கும்.


ஆனந்த் குதூகலத்துடன் எதிர்கால சுகமான கனவுகளுடன் பாதையில் நடந்தான். அப்போது எதிர்ப்புறம் யாரோ அழைக்கவே அவன் சடுதியாக திரும்பிப் பாதையின் குறுக்காக நடந்தான். அந்த சமயத்தில் மிக வேகமாக வந்த லொறியின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக மறுபடியும் வந்த வழியே திரும்பினான். அவ்வளவுதான் – வேகமாக வந்த மற்றொரு வாகனத்தில் தாக்குண்டு தூக்கிவீசப்பட்டான். அந்த இடத்திலேயே மண்டை வெடித்துச் சிதறி இறந்தான். பெண்பாவம் பொல்லாதது. தெய்வம் இப்போதெல்லாம் அன்றே கொல்லும் என்பதையெல்லாம் பாவம் அவன் அறிந்திருக்க நியாயமில்லை.

(யாவும் கற்பனை)


-பாலா. சங்குப்பிள்ளை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரச் சிரிப்பு




# போட்டி




பொழுது போகாமல் சும்மா வீட்டிலே வெட்டியாக உட்கார்ந்திருக்கிறீர்களா?.. இதோ ஒரு போட்டி. அருகே உள்ள படத்தைப் பாருங்கள். ஒரு பட்டத்துக்குள் சில ஆங்கில எழுத்துக்கள் இருக்கின்றன. எழுத்துக்கள் கறுப்பாகவும் வெள்ளையாகவும் எழுதப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். ஒரு பென்சிலை எடுத்து ஒரே எழுத்துக்களில் கறுப்பாகவும் வெள்ளையாகவும் உள்ள எழுத்துக்களை கோடுகள் மூலம் இணையுங்கள். ஆனால், ஒரு கோடு... அடுத்ததற்கு மேலாக குறுக்கறுத்து செல்ல கூடாது. உதாரணமாக கறுப்பு M ஐயும் - வெள்ளை M ஐயும் இணைத்தீர்களானால் அந்த இணைப்புக் கோடுகள் ஒன்றுக்குமேலால் ஒன்று செல்லக்கூடாது... இதோ போல் எல்லா எழுத்துக்களையும் இணையுங்கள் பார்க்கலாம்.

சரியாக இணைத்திருந்தால் எமக்கு அனுப்பி வையுங்கள்.. உங்கள் பெயருடன் விடையை பிரசுரிக்கிறோம்.

## ஜோக்

நீதிமன்றில் வழக்கு விசாரணை ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஒரு பெண், போதைப் பொருள் விற்ற குற்றத்துக்காக குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருந்தாள். வழக்கை விசாரித்த நீதிபதி அந்தப் பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

தண்டனையைக் கேட்டு அதிர்ச்சியுற்ற பெண் அழத்தொடங்கினாள். ஐயா எனக்கு ஏழு வயதில் ஒரு மகனும் ஐந்து வயதில் ஒரு மகளும் இருக்கின்றார்கள். எனது கணவன் எட்டு வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். எனவே இந்த சிறு பிள்ளைகளுக்கு என்னைவிட்டால் வேறு வழி இல்லை. எனவே எனக்கு கருணை காட்டுங்கள் என்று கெஞ்சினாள்.


நீதிபதிக்கோ ஆச்சரியம். ஏனம்மா உனக்கு ஏழுவயதில் மகனும் - ஐந்து வயதில் மகளும் இருப்பதாக சொல்கிறாய். ஆனால் கணவன் எட்டு வருடத்துக்கு முன்னர் இறந்து விட்டார் என்கி




றாயே. இது எப்படி சாத்தியம் என்று கேட்டார்.

அதற்கு அந்த பெண், 'ஐயா இறந்தது எனது கணவன் தான்... நான் அல்ல'' என்றாள் பணிவாக.

# கண்ணாமூச்சி



அருகே உள்ள படத்தில் வெள்ளை நிற, சாம்பல்நிற, கறுப்பு நிற சதுரங்கள் அடுக்கடுக்காக உள்ளன. குத்து மதிப்பாக பார்க்கும் போது அந்த சதுரங்கள் வளைவாக இருப்பது போல் தெரிகின்றது. ஆனால், உண்மை அப்படியல்ல... கூர்ந்து பாருங்கள். அவைகளெல்லாம் சரி சமனான சதுரங்கள். சரியாக சமனாக - சதுரமாகவே அடுக்கப்பட்டுள்ளன. ஆனால், பார்வைக்குத்தான் கோணலாகத் தெரிகின்றன. உற்றுப் பாருங்கள்.

# நெட் குறும்பு



அடடா... இனி இவைகளும் இப்படித்தான் இருக்கப் போகினம் என்றால் நம்ம பாடு கஷ்டம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரித்தலை தற்காலிகமாகத் தடை செய்ய மாத்திரைகளா, ஊசி மருந்தா சிறந்தது?

**கேள்வி:பெண் வயது 26. முதலாவது பிரவசத்தின் பின்னர் தொடர்ந்து 2 வருடம் கருத்தடை மாத்திரை உபயோகித்து வந்தேன். இப்பொழுது 3 வருடமாக உபயோகிப்பதில்லை. இன்னொரு குழந்தை பெற முயற்சி செய்தும். இதுவரை குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. வெள்ளை படுகிறது. பிறப்புறுப்பில் அரிப்பும் உண்டு. வெள்ளை – துர்நாற்றமாக இருக்கிறது. மருத்துவரிடம் காட்டினேன், கருப்பை வாசல் அடைப்பட்டிருப்பதால் கருத்தரிக்க வில்லை என்கின்றார். உங்கள் ஆலோசனை என்ன?**


பதில்:கருத்தடை மருந்துகள், ஊசி மருந்தோ, மாத்திரைகளோ – எதுவென்றாலும் அவை ஹோர்மோன்களைக் கொண்டவை. இவை சாதாரண – மாதவிலக்கு வட்டத்தில் பெரும் மாறுதல்களை செய்கின்றன. இதனால் சூலகத்திலிருந்து முட்டைகள் வெளிவருவது தடைப்படுகின்றது. என்றாலும் இந்த நிலைமை – தற்காலிகமாகவே. உபயோகித்த மருந்துகள், காலகெதியில் – வீரியம் குறைந்து போய் விடும், அந்நிலையில் திரும்பவும் சூலகத்திலிருந்து ஒழுங்காக முட்டைகள் வெளியேறும். அப்பொழுதுதான் கருத்தரித்தல் நிகழும். திரும்பவும் இந்தச் சுமுகமான சூழ்நிலை வருவது ஒவ்வொருவரின் உடல் வாகு, கருத்தடை மாத்திரைகள் உபயோகிக்கப்பட்ட காலம் என்பவற்றில் தங்கியுள்ளது.

சாதாரணமாக 6 மாதத்திலிருந்து 4 வருடம் கூட எடுத்திருப்பதை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன். தாங்கள் கருத்தரிக்க முடியாமல் மலட்டுத்தன்மை வந்து விடும் என்று அஞ்சவேண்டாம். ஏற்கனவே ஒரு குழந்தையின் தாயாயிருக்கின்றீர்கள். எனவே தாய்மையடையும் பக்குவம், உடல்வாகு உங்களுக்கு இருக்கின்றது. வெள்ளை மணத்துடனும், அரிப்புடனும் படுவதால் – உங்களுக்கு ஏதாவது தொற்று இருக்கலாம். நீங்கள் நீரிழிவு நோயாளராக இருந்தால் தொற்று ஏற்படும் சாத்தியம் அதிகம். உங்கள் யோனிக் கசிவை – எடுத்து பரிசோதித்து அதற்குரிய மருந்துகளை எடுக்க வேண்டும். இவ்வாறு தொற்று இருந்தாலும் கருத்தரித்தல் தாமதிக்கக்கூடும். தொற்று யோனிப்பாதையில் ஏற்படுத்தும் அமிலத்தன்மையில் – ஆணின் விந்தணுக்கள் உயிர்வாழமுடியாது.

கருத்தடை மருந்துகள் உபயோகிப்பதால் – கருப்பையினுள் உள்ள சுவரின் தன்மை மாற்றமடைகிறது. இதைத்தான் கருப்பை வாசலில் அடைப்பு என்று உங்கள் மருத்துவர் கூறியிருக்கலாம். சில பெண் நோய் நிபுணர்கள் D&C சிகிச்சை முறையில் கருப்பை சுவர் வளர்ச்சிகளை வழித்தெடுத்து கருப்பை சுவரை பழைய நிலைக்கு கொண்டுவந்து கருத்தரிக்க வழி செய்வார்கள். எனவே அவர்களின் ஆலோசனையை நாடவும்.

**கேள்வி: பெண், வயது 27. திருமணத்திற்கு முன்னர் கணவராக வரப்போகிறவருடன் ப்ால் தொடர்பு கொண்டிருக்கிறேன். இப்போது அவரையே திருமணம் செய்துள்ளேன். ஆனால் இப்பொழுது உறவு கொண்டால் சிறுநீர் கழியும் போது எரிகின்றது. நான்முன்னர்செய்ததவறு இதற்குக் காரணமா – அல்லது வேறு என்ன காரணம்? இதனால்எனக்கு மலட்டுத் தன்மை ஏற்படுமா?**

பதில்: திருமணத் திற்கு முன்னர் உறவு கொண்டது உங்கள் மனதில் ஒரு குற்ற உணர்வை உண்டாக்கியுள்ளது. அதனால் அதை ஒரு தவறாக எண்ணி, மலடாகி விடுவீர்களோ என்று பயந்து நடுங்குகின்றீர்கள். அப்படி எதுவும் நடக்காது. உடல் உறவின் பின்னர் சிறுநீர் எரிவது என்பது, யோனிக்கு முன் புறத்தில் வயிற்றில் அமைந்துள்ள சிறுநீர்ப்பை, சிறு நீர் குழாய் என்பவை உறவின்போது ஏற்படும் உராய்வினால் தாக்கம் உண்டாவதால் அழற்சியுறுவதால் நடைபெறுகின்றது.சிலருக்கு சிறுநீர்பை கீழே இறங்கியிருப்பதால் (CYSTOCOELE), இந்த அழற்சி அதிகமாயிருக்கும். எனவே ஒரு பெண் நோய் நிபுணர்கொண்டு சோதித்து பார்த்து – எதுவித வித்தியாசமும் இல்லையெனில் பயப்படத்தேவையில்லை.



**கேள்வி: ஆண். வயது 34. திருமணம் முடித்து 1 வருடம். குழந்தை இல்லை. மனைவிக்கு மாதவிலக்கு காலத்தில் வயிற்றுவலியுண்டு. குடும்பஉறவு கொண்டபின்னர் – மனைவியின் பிறப்புறுப்பிலிருந்து எனது விந்து வெளியே வந்து விடுகிறது. இதுதான் எனக்கு குழந்தை இல்லாததற்கு காரணமா? குழந்தை கிடைக்க ஆலோசனை தரவும்.**

பதில்:முதலில் மனைவியின் வயிற்று வலி பற்றி சோதித்துப் பாருங்கள். ஒரு பெண் நோயியல் நிபுணரிடம் (VOG) ஆலோசனை பெறுங்கள். உலகில் நூற்றுக்கு 70 வீதமான பெண்களுக்கு மாதவிலக்குக் காலத்தில் வயிற்றில் வலி ஏற்படுவது சகஜம். இதனை DYSMENORRHOEA என்று கூறுவர். சாதாரணமாக இதற்கு கருப்பையில் ஏற்படும் தசை இறுக்கம் (CRAMP) காரணம். ஆனால் கருப்பையில் கட்டிகள் இருந்தாலும் இது உண்டாகலாம். இதனை ULTRA SOUND SCAN பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம். கருப்பையில் கட்டி போன்ற வளர்ச்சிகளும் கருத்தரித்தலைத் தடைசெய்யும்.

அத்துடன் திருமணம் முடித்து ஒரு வருடத்துள் கருத்தரித்தல் ஐம்பது வீதமே நடைபெறுகிறது. எனவே இன்னும் ஒருவருடம் பொறுத்துப் பாருங்கள். அதன் பின்னர் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறலாம்.

குடும்ப உறவின் பின்னர் விந்து வழிந்து வெளியேறுவது கூட கருத்தரித்தல் நடைபெறாததற்கு ஒரு காரணம் என்று சில வைத்திய நிபுணர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

இதற்கு குடும்ப உறவு முடிவடைந்த பின்னர் – பெண் – முகம் குப்புறப் படுத்துத் தூங்குவதால் இந்த விந்து வெளியேறுதலைக் கட்டுப்படுத்தலாம் என்று அவர்கள் ஆலோசனை கூறுகின்றார்கள். நீங்கள் அந்த முறையையும் பின்பற்றிப் பாருங்கள்.

**கேள்வி: எனது மகளுக்கு வயது 6. அவளது இரண்டாவது வயதிலிருந்து முதுகிலும், கால், கைகளிலும், முகத்திலும் உரோமம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் எனது மகளின் வாழ்க்கை பிற்காலத்தில் பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகின்றேன். மயிர் கொட்டுவதற்கு மருத்துவம் ஏதாவது உண்டா?**

பதில்:பயப்படுகின்ற அளவிற்கு உரோமம் தேகத்திலிருந்தால் நிச்சயம் நீங்கள் ஒரு குழந்தைகள் மருத்துவரிடம் உங்கள் மகளைக் காண்பிக்க வேண்டும்.

ஒரு சில ஹோர்மோன் சம்பந்தப்பட்ட நோய்காரருக்கு உடலில் உரோமம் அதிகமாக வளர்வது உண்டு. காலம் தாமதிக்காமல் வைத்திய நிபுணரின் ஆலோசனையை நாடவும்.

**கேள்வி:பெண். வயது 24. திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது. கருத்தடையை தாற்காலிமாதகப் பின்பற்ற – மாத்திரைகள் உபயோகிப்பது நல்லதா – ஊசி மருந்து போடுவது நல்லதா? இதனால் ஏதாவது பக்கவிளைவுகள் உண்டா?**

பதில்: தற்காலிகக் கருத்தடை முறைகளில் பிரபலமானது கருத்தடை மாத்திரைகளும், DEPO - PROVERA என்கின்ற ஊசி மருந்தும்தான். இதைவிட கருப்பையில் வைக்கும் கருத்தடைச் சாதனங்களாகிய COPPERT வளையம், ஆண்களுக்குரிய ஆணுறை என்பவையும் தற்காலிகமான கருத்தடைச் சாதனங்களே.

மாத்திரைகளும், ஊசி மருந்தும் ஒரு விதமானஇரசாயனகலவையைக் கொண்டவை. அவற்றை உபயோகப்படுத்தும் விதத்தில் தான் வேறுபடுகின்றன. மாத்திரைகள் தினமும் எடுத்துவரவேண்டிய செயல் முறையைக் கொண்டது. ஒரு நாள் மறந்து போய் மாத்திரையை எடுக்காவிடில் அடுத்த நாள் இருமாத்திரைகளை உபயோகிக்கலாம். ஆனால், இரண்டு நாளைக்கு மாத்திரையை மறந்துவிட்டால் கருத்தரிக்கச் சாத்தியம் உண்டு. ஊசி மருந்து ஒரு தடவை எடுத்தால் மூன்று மாதத்திற்கு பாதுகாப்பைத் தரும்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

இந்த இரண்டு முறைகளையும் பின்பற்றும் போது, ஒரு சில விஷயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவை தான் கருத்தடைமுறைகளே ஒழிய, நீண்ட காலத்திற்கு தொடர்ந்து பின்பற்றத் தகுந்த முறைகளல்ல. மருத்துவர்கள் இம்முறைகளை 3 வருடங்களுக்கு அதிகமாக பின்பற்றுவதை விரும்புவதில்லை. காரணம், இந்த ஹோர்மோன்கள் நீண்ட கால உபயோகத்தில், அதிஉயர் இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொலஸ்த்ரோல் அளவு அதிகரிப்பு, நீரிழிவு என்பவற்றை உண்டாக்குவதாக மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். எனவே இந்த முறைகளைப் பின்பற்ற முன்னர் – மருத்துவப்பரிசோதனை செய்து பார்த்தபின்னர்தான் இந்த மாத்திரைகள், ஊசிமருந்தை உபயோகிக்க ஆலோசனை கூறுவர். மேலும் பரம்பரையில், அதாவது உங்கள் பெற்றோருக்கு இரத்த அழுத்தம் – இருதய நோய், கொலஸ்த்ரோல் அளவு உயர்வு, நீரிழிவு இருந்தால் மாதாமாதம் இந்தக் கருத்தடை மருந்துகளை எடுக்கும் போது மருத்துவப்பரிசோதனை செய்து கொள்வது மிக அவசியம். இப்படியானவர்களை HIGH RISK உயர் அபாய நிலையில் உள்ளவர்கள் என்று கருதப்பட்டு ஹோர்மோன் சம்பந்தப்படாத – கருப்பையினுள் வைக்கப்படும் கருத்தடைச் சாதனங்கள், ஆணுறை என்பவற்றை உபயோகிக்க ஆலோசனைகளை மருத்துவர்கள் கூறுவதுமுண்டு. எனவே எந்தக் கருத்தடைமுறை உங்களுக்கு உகந்தது என்பதை, அறிய உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறவும்.

# பயமுறுத்தும் பறவைக் காய்ச்சல்

மனித உயிர்களைப் பலி கொள்ளும் வகையில் பல்வேறு அனர்த்தங்கள் படையெடுக்கத் தொடங்கி விட்டன. இயற்கை அனர்த்தங்கள் ஒருபுறம் உயிர்களைப் பலியெடுத்த வண்ணமிருக்க, பலவகையான நோய்களும் தோன்றி மனித வாழ்வுக்குச் சவாலாகிக் கொண்டு வருகின்றன.

எயிட்ஸ், சார்ஸ் போன்ற நோய்கள் உலகை ஆட்டிப்படைக்கும் வேளையில், பறவைக்காய்ச்சலும் மனித ஆரோக்கியத்திற்குப் பெரும் தலையிடியாக இருக்கிறது. கோழிகள் மூலம் மனிதனைத் தேடி யமதர்மன் படையெடுக்கத் தொடங்கி விட்டார்.

பத்து நாடுகள் வரை இந்தப்பறவைக் காய்ச்சலால் தாக்கப்பட்டிருக்கின்றன. இதனால் 80 மில்லியன் கோழிகள் ஆசியாவில் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறுகின்றனர். சீனா, வியட்நாம், கம்போடியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பரவி வந்த பறவைக்காய்ச்சல் அண்மையில் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலும் பரவி அச்சமூட்டுகின்றன.

1997 இல் இதே வைரஸ், கோழிகளைத் தாக்கி வேகமாக மனிதரைத் தொற்றியது. உஷாராகிய அதிகாரிகள் வேகமாகச் செயற்பட்டு 1.4 மில்லியன் கோழிகளை உடனடியாகக் கொன்றார்கள். இவ்வேகமான நடவடிக்கையால், ஆறு பேரின் மரணத்துடன் அபாயம் நீங்கியது.

தற்போது பறவைக் காய்ச்சல் அபாயம் மீண்டும் உலக நாடுகளைக் கிலிகொள்ள வைத்துள்ளது. அண்மையில் மலேசியாவில் பறவைக் காய்ச்சல் மீண்டும் தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

மலேசியாவின் வடகிழக்கில் உள்ள கொல்ன்தான் மாகாணத்தில் உள்ள கிராமத்திலேயே பறவைக்காய்ச்சல் உள்ளதாக ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள கோழிகள், வாத்துகள் போன்றவை வெளியே கொண்டு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியை தனிமைப்படுத்தியும் விட்டுள்ளனர். இப்பறவைக் காய்ச்சலால் மலேசியாவின் கோழிப்பண்ணைத் தொழிலுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் தாய்லாந்திலும் பறவைக் காய்ச்சல் அபாயம் தொடங்கியுள்ளது. தாய்லாந்தின் வடக்குப் பகுதியில் இவ் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கும்



கோழிப்பண்ணைகள், வாத்துப்பண்ணைகள் என்பன மூடப்பட்டுள்ளன. இருப்பினும் இந்நோய் மக்களைச் சென்றடைவதற்கான சாத்தியம் மிகக் குறைவாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நோய் அபாயத்தால் பல பண்ணை உரிமையாளர்கள் நஷ்டப்பட்டுள்ளனர். அத்துடன் பல கோழி, வாத்து பண்ணைகள் மனித சஞ்சாரமில்லாத பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மலேசியாவில் இந்நோயுள்ள வாத்துக்களை விஷவாயுவால் அழித்தும் வருகின்றனர். கடுமையான சுகாதார நடவடிக்கைகளுடனும், விழிப்புணர்வுடனும் நடந்து கொண்டால் இந்நோய் பரவுவதைத் தடுக்க முடியும் என்கின்றனர் அதிகாரிகள்.

தற்போது கோழிகளிடம் ஏற்பட்ட வைரஸால் பரவும் பறவைக் காய்ச்சல், காலக்கிரமத்தில் மனிதருக்கிடையே பரவும் மனிதக் காய்ச்சலாய் மாறிவிடுமே என்பது தான் பலரது ஐயமாகவுள்ளது. உடனடியாக இது தொற்றுக்காய்ச்சலாக இல்லாவிடினும் வெகுவிரைவில் இந்நிலை வருமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறெனில் பெருத்த மனித அழிவு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எதற்கும் கோழிப்பிரியர்கள் வெகு கவனத்துடன் இருந்து கொள்வது நன்று.

– தர்ஷனா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுக்கெழுத்து
வசந்த் - லக்ஸ்மிராய்

விக்ரம்

ரம்பா



# காட்சிக்குக் கவர்ச்சியும் ஓ. கே.! -தியா

'ட்ரீம்ஸ்' படம் முடிந்துவிட்டது. தியாவும் அமைதியாகி விட்டார். தியா மும்பையில் இருக்கிறார். அவர் சென்னை வந்து படப்பிடிப்பில் கலந்துகொள்வது சிரமமாக இருக்கிறது. அதனால்தான் 'ட்ரீம்ஸ்' படம் தாமதம் என்ற குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தியா உண்மையில் சென்னை கெல்லீஸ் பகுதியில்தான் வசித்துவருகிறார். 'ட்ரீம்ஸ்' முடிந்ததில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார். தனுஷுடன் ஜோடியாக நடிக்கிறோம், படம் விரைவாக முடிந்துவிடும் என்ற தைரியத்தில், 'ட்ரீம்ஸ்' முடியும் வரை வேறு படங்களில் நடிப்பதில்லை என்று எழுதிக்கொடுத்திருந்தார். ஆனால் 'ட்ரீம்ஸோ' வருடக்கணக்கில் இழுத்துவிட்டது.

படத்தின் இயக்குநர் கஸ்தூரிராஜா, வாய் மொழியாக வேறுபடங்களில் நடி, பிரச்சினை ஒன்றுமில்லை என்று சொன்னாலும், தியா வேறு படங்களில் நடிக்காமலே இருந்தார்.

இப்போது 'கற்க கசடற' படத்தில் நடிக்கிறார். இது தவிர மனோஜ் ஜோடியாக ஒரு படத்திலும் நடிக்கிறார்.

'ட்ரீம்ஸ்' 'படத்தில் உதட்டுக்கு உதடு முத்தம் கொடுத்திருக்கிறீர்களே' என்றால், ''எல்லா நடிகைகளையும் போல, காட்சிக்குத் தேவைப்பட்டது'' என்றார்.

மும்பை நடிகைகளுக்குப் பின்னால் இயக்குநர்கள் ஓடுவதுதான் தியாவின் ஒரே எரிச்சலும், வைத்தெரிச்சலும். மொழி தெரியாத அவர்கள் பின் ஓடுவதைவிட, தமிழ் தெரிந்த, இன்னும் பல தெரிந்த எங்களிடம் வரலாமே என்பதுதான் தியாவின் ஆதங்கம்.

தனது ஆதங்கத்தை தியா வெளியில் யாரிடமும் பகிர்ந்து கொள்வதில்லை. தனக்குப் பிரியமான கரடி பொம்மையிடமே கூறுகிறார். எதிர்த்துப் பேசாமலிருக்கக் கரடி பொம்மையை விட நல்லதெரிவு இல்லை என்பது தியாவின் திடமான முடிவு!

# அச்சச்சோ மீனா

படவாய்ப்புக்கள் இல்லை, திருமணம் முடித்து அமெரிக்காவில் குடிபோகப் போகிறார் என்று மீனாவைப் பற்றிச் செய்தி வருகிறது. இது பற்றி கேட்டால் மேக்கப் போடாமலே 'ஷாக்' மீனாவாக மாறி கலக்கியடிக்கிறார்.

'ஷாக்' படம் நன்றாக போய்க்கொண்டிருக்கிறது. தெலுங்கில் மீனா ஹரி கிருஷ்ணாவுடன் இணைந்து நடித்து 'சாமி' (விக்ரமின் 'சாமி' அல்ல, ஒரிஜினல் 'சாமி') வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இதே போல் கன்னடத்திலும் மீன் கொடி பறக்கிறது. ரேணுகா சர்மா இயக்கத்தில் 'மல்லம்மா' என்ற கன்னடப் படத்தில் நடித்த வருகிறார் மீனா. இது பல மொழிகளில் தயாராகிறது.எல்லா மொழிகளிலும் மீனாம்மாதான் மல்லம்மா!


கேரளாவையும் மீனா விட்டு வைக்கவில்லை. மோகன்லால் ஜோடியாக ஷாஜி கைலாஷ் இயக்கத்தில் 'நாட்டு ராஜாவு' படத்தில் நடிக்கிறார். மீனா நடிக்கும் இன்னொரு மலையாள படத்தை ரோஷன் என்பவர் இயக்குகிறார்.

தமிழில் ஒளிப்பதிவாளர் கம் டைரக்டர் நிவாஸ் இயக்கத்தில் ஒரு படம் பண்ணுகிறார். இது தவிர பெரிய ஹீரோக்கள் இரண்டு பேரின் படத்தில் நடிக்கப் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது.

இப்போது சொல்லுங்கள்... எனக்கு வாய்ப்பு இல்லாமல் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன் என்பது பொய்தானே என்று கேட்கிறார் மீனா.

அப்படியானால் திருமணம் ?

அச்சச்சோ... எனக்கு அந்தளவு வயசாகலையே என்று தனது மீன் கண்ணால் கண்ணடிக்கிறார்.



சிம்ரன்

# கவர்ச்சிக் கலக்கல்

ரீமாசென்னும், கிரணும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் சினிமாவில் நுழைந்தவர்கள். இருவரும் கவர்ச்சி என்னும் ஆயுதத்தை வைத்தே வாய்ப்புக்கு வேட்டையாடுபவர்கள். ஆனால் சென்னுக்கு சிக்கும் வாய்ப்புகள், கிரணுக்கு டாடா காட்டுகின்றன. ஏன் இப்படி?

கிரண் தன் தொப்பை குலுங்க இது குறித்து யோ..........சித்து வருகிறார். ரீமாசென்னுக்கு யோசிக்கவே நேரமில்லை. கல்கத்தாவில் பிறந்த சென்னுக்கு செல்லும் இடமெல்லாம் சிவப்பு கம்பள வரவேற்பு. அவரும் சின்ன வேடமோ, ஒரு பாடலுக்கு ஆட்டமோ, எதுவாக இருந்தாலும் மறுப்பதில்லை. வாய்ப்புக்கு ஏற்ற சம்பளம் வாங்கிப் பொருளாதார விஷயத்தில் தன்னிறைவு அடைந்துவிட்டார்.

திரையில் கவர்ச்சியாக, இளைஞர்களை சுண்டியிழுத்தாலும் ரீமாசென்னுக்கு ஆண்களென்றால் சீ...சீ.... பாய் பிரெண்ட்ஸ் எல்லாம் வேஸ்ட் என்கிறார் அழகான உதட்டைச் சுழித்தபடி.

இவர் முதலில் காலடி எடுத்து வைத்தது விளம்பரத்துறையில். டீன். ஏஜ் பருவத்திலேயே மொடலிங்கிற்கு வந்துவிட்டதால் கல்லூரி வாசலில் காலடி பதிக்கவில்லை.

ஆனாலும், படப்பிடிப்புக்காக உலகநாடுகளை எல்லாம் ஒரு முறை வலம் வந்துவிட்டார். பிடித்த இடம் சுவிட்சர்லாந்து. கல்யாணம் செய்தால் கணவருடன் அங்கு செல்ல வேண்டும் என்பது ரீமாசென்னின் தேனிலவுக் கனவாம்......!

புதுமுகங்களுடன் ஜோடியாக நடிக்க மற்ற நடிகைகளைப் போல ரீமாசென் பின்வாங்குவதில்லை. 'செல்லமே' படத்தில் விஷாலுடன் நடித்தவர், 'உன்னோடு நான்' படத்திலும் புதுமுகத்துடன் ஜோடி சேர்கிறார்.

கடைசியாகக் கிரணைப் பற்றி ஒரு செய்தி. [illegible] படத்திற்குப் பிறகும் சரியான வாய்ப்பு கிடைக்காததால் தற்போது சேரனா பக்கம் [illegible] தரிசிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஆயுதம்' பிரஷாந் - சினேகா

'கர்கக் கசடற' விக்ராந்த் - லக்ஸ்மிராய்

# விஸ்வநாதனும், இளையராஜாவும்

சிந்துஜா பிலிம்ஸ் என்னும் புதிய படநிறுவனம் தமிழில் முதன் முறையாகப் படம் ஒன்றைத் தயாரிக்கிறது. 'விஷ்வ துளசி' எனப் பெயரிட்டிருக்கும் இப்படத்தில் 'அழகன்' மம்முட்டியும், 'அழகி' நந்திதாதாஸும் முதன் முறையாக இணைந்து நடிக்கின்றனர்.

அமெரிக்காவில் வசிக்கும் தமிழ்பெண் சுமதிராம் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார்.

அன்பை மனதிற்குள் வைத்து மருகித் தவிக்கும் காதலர்களாக மம்முட்டி, நந்திதாதாஸ் நடிக்க, அவர்களுடன் மணிவண்ணன், டெல்லி கணேஷ், மனோஜ் கே. ஜெயன், இளவரசு, வையாபுரி, ராஜேஷ் வைத்யா, மதன்பாப், கலைராணி, நித்யா, சுகுமாரி, கோவை சரளா, காமலா காமேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

1952-களில் சுந்தரிபுர என்னும் சிறிய கிராமத்தில் தங்கள் வாலிபத்தை தொலைத்த நாயகன், நாயகியின் நினைவுகளினூடாக இப்படத்தின் கதை பயணிக்கிறது. இதன் முதற்கட்டப் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி பொள்ளாச்சி, தரங்கம்பாடி, கடலூர் பகுதிகளில் நடைபெற்றது. இறுதிக்கட்டப் படப்பிடிப்பு கேரளாவில் உள்ள ஒத்தப்பாலம் பகுதியில் நடைபெற்று, அடுத்தமாதம் 'விஷ்வ துளசி' திரையில் மணம் வீச இருக்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதனும், இசைஞானி இளையராஜாவும் இணைந்து இப்படத்துக்கு இசையமைக்கிறார்கள்.

ஒளிப்பதிவு - பி. கண்ணன், பாடல்கள் - இளையராஜா, சுமதிராம், எடிட்டிங் - சுரேஷ் அர்ஸ், கலை - பிரபாகர், நடனம் - சிவசங்கர், சண்டைப்பயிற்சி - விக்ரம் தர்மா, ஒப்பனை - அனில் பெம்ரிகர்(மும்பை), மக்கள் தொடர்பு - நிகில், தயாரிப்பு - சிந்துஜா பிலிம்ஸ், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - சுமதிராம்!

# ஷிப்ட் ஆனார் ரம்பா!

...னதை தேற்றிக் கொள்ளுங்கள். மும்பைக்குப் போய்விட்டார் ரம்பா! ஒரு காலத்தில் தொடை காட்டி சுள்ளென்று இழுக்க வைத்த சுந்தரியின் சினிமா வரலாற்றில் கத்தரி வெயிலாக அடித்தது விதி! தொடர்ந்து பட வாய்ப்புக்கள் குறைந்து போக, சொந்தப்படம் எடுத்தார். ஆனானப்பட்டவர்களையே ஆட்டி பார்க்கும் சினிமா உலகம், ரம்பா கிடைத்தால் சும்மாவிடுமா? பிரச்சினை... பிரச்சினை... பிரச்சினை..! தொடர்ந்து படம் எடுக்க முடியாமல் பட வாய்ப்புக்களுக்கு குளறுபடி செய்தார்கள். அப்படத்தில் நடித்த ஜோதிகாவும், லைலாவும், தயாரிப்பாளர் சங்கத்தில் முறைப்பாடு செய்தார்கள். அதை ஒரு வழியாகச் சமாளித்து படத்தை வெளியீடு செய்தால் முதலுக்கே மோசம்!

ஒரு தொழிலும் வசப்படாதவர்களுக்கு அபயக்கரம் நீட்டுவது அரசியல்தானே! என்னவோ தெரியவில்லை, அங்கேயும் தோற்றுப்போனார் ரம்பா! பிரதமராக இருந்த வாஜ்பாய் சென்னைக்கு வந்த போது, விமான நிலையத்தின் உள்ளேயே விடவில்லையாம் இவரை! இப்படி வருங்கால எம். பி. கனவோடு இருந்தவரை எட்டி எட்டி உதைத்தது விதி! அட... அத்தோடு விட்டால் பரவாயில்லையே. கோயம்புத்தூரில் நகைக்கடை ஒன்றைத் திறக்கப் போனார். போன இடத்தில் வம்பு! பிரச்சினை போலீஸ் வரைக்கும் போனது. தகாத செயலுக்காக அழைத்ததாக அவர்கள் மீது இவர் புகார் கொடுக்க, பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்றிவிட்டார் என்று இவர் மீது அவர்கள் புகார் கொடுக்க, ஒரே ரகளை,

இப்படி அடுக்கடுக்காகத் தொல்லை கொடுத்த தமிழ்நாட்டை விட்டு இப்போது ஒரேயடியாக மும்பைக்குப் பறந்துவிட்டார் ரம்பா. அங்கேயே சொந்த வீடு வாங்கிக் கொண்டு செட்டில் ஆகிவிட்டாராம். அங்கே இரண்டு ஹிந்தி படங்களில் நடிக்கிறார் என்று சொல்லப்படுகிறது. எந்தளவுக்கு உண்மையோ?

இதற்கிடையில் சென்னையில் ரம்பா பார்த்து பார்த்து கட்டிய இரண்டு வீடுகளும் விற்பனைக்கு வந்துள்ளன. வாசலில் இருக்கும் இரண்டு தூண்களை ஏக்கத்தோடு பார்க்கிறார்கள் வாங்க வருகின்ற பெரிய மனிதர்கள். விலை கட்டுப்படி ஆகவில்லையாம்!

அதை விடுங்கப்பா, ரம்பா ரசிகர்கள்பாடு என்னஆகிறது!

## மாணாக்கர்களுக்காக "துள்ளுற வயது"!

பாடத்தை மனப்பாடம் செய்வது கஷ்டமாக இருக்கும். அதே சமயம் சினிமாப் பாடல்கள் சுலபமாக மனதில் பதிந்துவிடும். என்னென்றால் மாணவர்களுக்குப் [illegible] இது போல் நல்ல விஷயங்களையும் அவர்களுக்கு [illegible] நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கு ஆச்சரியமில்லை. அதே சமயம் [illegible]

## இரண்டு கதாநாயகர்கள்

*இரண்டு கதாநாயகர்களை கொண்ட கதையுள்ள படங்கள் என்பது ஹிந்தியில் சகஜம். ஆனால் தமிழில் அதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு. இதற்குக் காரணம் ஈகோதான். இதுபோன்ற பிரச்சினைகளைப் புறந்தள்ளிவிட்டு, தற்போது தமிழில் இரண்டு ஹீரோக்களை வைத்துப் படம் எடுக்க முடிவுசெய்துள்ளார் ஏ. எம். ரத்னம். அந்த இருவரும் யார் என்பது அனைவரின் கேள்வியாக இருக்குமே? இந்தப்படத்தில் நடிக்க சம்மதித்துள்ள இருவர்... பிரசாந்த், ஸ்ரீகாந்த்.*

# ஆட்டமும் திண்டாட்டமும்

ஸ்ரீ அஷ்ட லட்சுமி கம்பெனி தயாரிக்கும் படம் 'சூப்பர்டா'. குணால், ராம்கி, செந்தில், லிவிங்ஸ்டன், பொன்னம்பலம், அபிநயஸ்ரீ, ஷகிலா, ஷர்மிலி, பரவை முனியம்மா ஆகியோர் நடித்திருக்கும் இந்தப் படத்தை வெளியிட கோவை நீதிமன்றம் தடைவிதித்தது.

தேவா இசையில் கவிஞர் தொல்காப்பியன் எழுதிய வரிகள் ஆபாசமாகவும், குறிப்பிட்ட சமூகத்தினரை சிறுமைப்படுத்துவதாகவும் இருப்பதாக வழக்குத் தொடர்ந்து இந்தத் தடைபோடப்பட்டது.

தற்போது சர்ச்சைக்குரிய அந்தப் பாடல் வரிகள் நீக்கப்பட்டதால், படத்தை வெளியிட நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

பிரச்சினை இத்துடன் முடியவில்லை. 'சூப்பர்டா' படத்தில் சர்ச்சைக்குரிய பாடலில் ஆடியிருப்பவர்கள், அந்நாள் கவர்ச்சி நடிகை அனுராதாவும், அவரது மகளுமான இந்நாள் கவர்ச்சி நடிகை அபிநயஸ்ரீயும். கவர்ச்சியை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இது போதாதென்று ஷகிலா, ஷர்மிலி என்று மலையாளத்திலிருந்து கரை ஒதுங்கிய கவர்ச்சி அணுகுண்டுகளையும் தாராளமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதனால் படம் கோர்ட்டுக்குத் தப்பினாலும் தரப்படுத்தல் கத்திரிக்குத் தப்புமா என்ற குழப்பத்தில் மண்டையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், படம் திட்டமிட்டபடி குறித்த தேதியில் வெளியாகும் என்று தயாரிப்பாளர் நம்பிக்கை அளித்துள்ளனர். அப்பசரி, கொண்டாட்டம்தான்!

# அர்ஜுன் படங்கள்!

அர்ஜுன் நடித்த 'ஜெயசூர்யா', 'அரசாட்சி' ஆகிய இரண்டு படங்களும் தயார்நிலையில். ஆனால், ஓகஸ்டில் வெளியீடு என 'ஜெயசூர்யா'வுக்கு விளம்பரம் செய்து விட்டார்கள்.

இதனால் அரசாட்சியைத் தயாரித்த சி.ஐ.டி.வி. நிறுவனம் தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்தது. 'ஜெயசூர்யா' தயாரிப்பாளரும், இயக்குநருமான மனோஜ்குமாரை அழைத்து விசாரித்தது!

'ஜெயசூர்யா'வை விட 'அரசாட்சி' தான் சீனியர் படம். அதனால் இதைத்தான் வெளியீடு செய்ய வேண்டும் என்றனர். ஆனால், 'ஜெயசூர்யா'வை விறுவிறுவென தயார் செய்து தரப்படுத்தல் அனுமதிப்பத்திரம் வாங்கிவிட்டார் மனோஜ்குமார். அதனால் தரப்படுத்தல் கணக்குப்படி இதுதான் முதல் படம் எனச் சொல்ல... அதைச் சங்கம் ஏற்றுக் கொண்டது.

# விக்ரம் என்னவாம்

தேசிய விருது கிடைத்து இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று நடிகர் விக்ரம் கூறினார். சிறந்த நடிகர்களுக்கான தேசிய விருதுக்கு தேர்வு பெற்றது குறித்து நடிகர் விக்ரம் கூறியபோது, "இது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. பிதாமகன் படம் நடிக்கும் போது இவ்வளவு பெரிய விருது கிடைக்கும் என்று நினைக்கவில்லை. ஆனாலும் அந்தப் படத்தைப் பார்த்த பலர் என்னைப் பாராட்டி நிச்சயம் 'விருது' கிடைக்கும் என்றனர்.

எனக்குப் பிடித்த படம் சேது. பிதாமகன் படத்தில் எனது பாத்திரத்தை ஒரு சவாலாக எடுத்து நடித்தேன். அதில் எனக்கு வசனம் கிடையாது. கொஞ்சமாவது வசனம் வைத்துக் கொள்ளலாம் என்று யோசித்தோம். பிறகு வேண்டாம் என்று விட்டுவிட்டோம். கடைசியில் வரை பேசாமலேயே நடித்தேன். படப்பிடிப்பு காட்டுக்குள் தான் நடந்தது. அங்கு காரில் செல்லமுடியாது. 2கிலோ மீற்றர் தூரம் குதிரையில் சென்றோம். படப்பிடிப்பு நடந்த இடம் பெரிய குளத்தில் உள்ள சோற்றுப்பாறை.

அந்தப் படத்தில் நடிக்க வேண்டிய காட்சிகளை 15 நாட்கள் பயிற்சி எடுத்த பிறகு நடித்தேன். அழுவது கூட ஊளையிடுவது மாதிரித்தான் எடுத்தனர்.

வைத்தியர், வக்கீல் பாத்திரம் இப்படித்தான் இருக்கும் என்று நடிக்கலாம். ஆனால் 'பிதாமகனில்' பேசத் தெரியாத வெட்டியான் பாத்திரம் எங்கும் பார்க்காதது. எப்படி அழணும், எப்படி நடிக்கணும், ஓடணும் என்றெல்லாம் முதலில் பயிற்சி எடுத்துப் பார்த்த பிறகு நடித்தேன்.

முகத்தில் அழுக்கு மண் பூசினேன். நடிச்ச இடத்தில் அட்டை, பூரான், காட்டெருமை [illegible] 90 நாள் படப்பிடிப்பு நடந்தது.

தேசிய அளவில் இந்தப் படத்துக்கு அங்கீகாரம் கிடைத்ததில் என் [illegible]



'அறிவுமணி' பீராவாசதேவன் - மாளவி

'மகாநடிகன்' சத்யராஜ் - நமீதா

மீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர வைக்கிறது "சாண்ட்விச்" உணவு



பாண்துண்டுகளை ஒன்றிணைத்து தயாரிக்கும் "சாண்ட் விச்" உணவுதான் மேல்நாட்டவர்களுக்கு அன்றாடம் பிடித்த உணவு எனலாம். அதிலும் இந்த "சாண்ட்விச்" உணவில்தான் எத்தனை ரகம்! பட்லர் என்னும் இந்தப் பல்கலைக்கழக மாணவர் ஒரு போட்டியில் கலந்து கொண்டு தயாரித்த சிறந்த இராட்சத சாண்ட்விச் அனைவரையும் அதிரவைத்து விட்டது.

# ஆமைக் குஞ்சுகள் உயிர் தப்பி வாழ...



கடல் ஆமைகள் கரைக்கு வந்து மண்ணைக் கிளறி முட்டைகளை இட்டு அவற்றை மண்ணினால் மூடிவிட்டுச் சென்று விடுகின்றன. முட்டைகள் பொரித்து ஆமைக்குஞ்சுகள் வெளிவரும் போது ஆபத்து உருவாகிவிடும். ஆமைக்குஞ்சுகள் கடலை அடைவதற்கு முன் பறவைகள் அவற்றைப் பிடித்து அழித்து விடுகின்றன. அவ்விதம் ஆமைக்குஞ்சுகள் அழிந்து விடாமல் உயிர்தப்புவதற்காக அவற்றை கூட்டமாக பாதுகாத்து கடலில் சேர்த்து விடும் இயக்கம் ஒன்று இயங்குகிறது.

மசாலா மிக்ஸ்

# வாண வேடிக்கை தந்த பரபரப்பு!




லாஸ்வேகாஸ் நகரிலுள்ள தாளினோ ஓய்வு நிலையத்தில் நவீன காட்சிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி காட்சிச் சாலைகளின் ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்றபோது வாண வேடிக்கைகளால் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்து விட்டார்கள் ஏற்பாட்டாளர்கள்.

# சடை நாய்க் குட்டிகளை அலங்கரிக்கும் நிலையம்



சடை நாய்க்குட்டிகள் அழகாக இருப்பது வழக்கம். ஆனால், சீனாவில் ஒரு கால்நடை அலங்கரிப்பு நிலையம் சடை நாய்களை மேலும் அழகுபடுத்துவதில் அக்கறை கொண்டிருக்கிறது. நாய்களின் சடைகளை வெட்டிச் சிதைத்து மைபூசி அவற்றின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்கிறது அந்த நிலையம். அவ்விதம் அழகூட்டப்பட்ட இரு நாய்க்குட்டிகளைப் படத்தில் காணலாம்.

# "மெரி" கோரவுண்ட் ஆடுவதில் குதூகலம்



மத்திய சென்.பீற்றர்ஸ் பேர்க்கிலுள்ள கிரெஸ் டொலஸ்கி தீவுக்கு வருபவர்களை அங்குள்ள கார்னிவல் கண்காட்சி பெரிதும் கவர்ந்து விடுகிறது. கார்னிவலில் முக்கிய இடத்தை மெரி கோரவுண்ட் விளையாட்டு பெற்றிருக்கிறது. ''மெரிகோரவுண்ட்'' ஆடுவதில் குதூகலம் அடையும் ஒரு பிரிவினரைப் படத்தில் காணலாம்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஆகஸ்ட் 16, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஐஸ்வரியாவினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. சி.சசிகலா, கொழும்பு 14. 2. வி.அனு, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 3. வி.விக்கி, 130/5, புத்தளம் வீதி, சிலாபம். 4. வி. கனிஸ்ரா, திருகோணமலை. 5. ம.செல்வநாயகம், மன்னார் வீதி, வவுனியா.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் இசையை கொப்பி அடிப்பதில் வல்ல இசை அமைப்பாளர்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் செப்டெம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னர் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பிக்கு ஒரு மடல்

ஜே.வி.பியினருக்கு முதலில் எனது வீர வணக்கங்களைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அழகான இந்த இலங்கைத் திருநாடு இன்று அலங்கோலமான நிலையில் சென்று கொண்டிருக்கிறது. இதற்கு உங்கள் பங்களிப்பும் அண்மைக்காலமாகக் காணப்படுகின்றது என்பதை நினைக்கும்போதுதான் சங்கடமாயிருக்கிறது. அதை உங்களுக்கு ஞாபகப்படுத்திவைக்க விரும்புகிறேன்.

2001ஆம் ஆண்டுக்குப்பின் நடந்த தேர்தல்களில் உங்கள் ஜே.வி.பி படிப்படியாகக் கண்ட வளர்ச்சி, இன்று நாட்டின் அரசை நிர்ணயிக்கின்றபங்காளிக்கட்சியாக வரும் அளவுக்கு நீங்கள் வந்திருப்பது அரசியல் வாழ்வில் உங்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

ஆனால், நீங்கள் பெற்ற வளர்ச்சியையும்,வெற்றியையும் வைத்துக்கொண்டு நாட்டுக்கு நல்லதைச் செய்வதை விடுத்து 'கெடுக்கிறேன் பந்தயம் பிடி' என்று நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவது தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக உள்ளது.

வாழப்போகின்ற சொற்ப நாட்களிலாவது நாட்டுக்கு நல்லது செய்வதை விடுத்து தீமையே செய்ய முயன்று வருகிறீர்கள். நீங்கள் மனிதப் பண்பே அற்றவர்களாக, வாழ்ந்து மடியப்போவதாகத் திட்டமிட்டுக்கொண்டுதான் அவ்வாறு செயற்படுகிறீர்களோ என்று நான் சிந்தித்துப் பார்க்கிறேன். நீங்களும் ஏன் ஒருமுறை இதைக்குறித்து சிந்தித்துப்பார்க்கக் கூடாது.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள்ளும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளும் இருந்த மோதல்கள் தான், உங்கள் கட்சி வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணம் என்பது நான் கூறி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

நீங்கள் பெற்ற வெற்றியானது இன்று அரசைத் தீர்மானிக்கும் அளவுக்கு வந்துவிட்டதென்றால் அது உங்களுக்கு இமாலய வெற்றி தான். இதனால் அரசின் பங்காளிக்கட்சியாக நீங்கள் இன்று ஆட்சியில் இருக்கிறீர்கள். நாட்டின் ஜனாதிபதியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைத்த உங்களுக்கும், ஜனாதிபதிக்குமிடையே இன்று ஏன் முறுகல்நிலை தோன்றியுள்ளது என்று தான் தெரியவில்லை.

உண்மையிலேயே உங்களுக்குள் முறுகல் நிலைதானா அல்லது இனப்பிரச்சினை விடயத்தை முடிவுக்குக்கொண்டுவரக்கூடாது என்பதற்காக நீங்கள் இருவரும் முறுகல் நிலை போன்று கபட நாடகம் ஆடுகின்றீர்களா என்று எனக்குத் தெரியவில்லை.

புலிகள் விடயத்தில் தான் நீங்கள் ஒருமித்த கருத்துடையவர்கள். இன்று பிரச்சினையான இந்த விடயத்திலே ஒத்த கருத்துடைய உங்களுக்குள் எப்படி முறுகல் நிலை சாத்தியம் என்பது தான் புதிராக உள்ளது. அதை எனக்குச் சொல்லி இருப்பீர்களேயானால், நான் உங்களுக்குப் பகிரங்க மடல் எழுத வேண்டிய தேவைப்பாடே ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் கூட்டமைப்புத்தலைமைப் பதவியை அம்மையார் துறந்துவிட்டார் என்பது நாடறிந்த உண்மை தான். கட்சித் தலைமைப் பதவியை அம்மையார் துறந்துவிட்டதைக் கேள்விப்பட்ட நாட்டுமக்கள் ஏன், எதற்காக என்று தடுமாறிப் போக, நீங்கள் என்னவென்றால் அதைக்குறித்து அலட்டிக்கொள்ளாமல் சாதாரணமாகவே இருப்பது தான் ஏன் என்று விளங்கவில்லை. இதற்கு ஏதாவது காரணம் உண்டா?

அது மாத்திரமல்ல, அரசாங்கத்துக்கு எதிராக இன்று போர்க்கொடி தூக்குமளவுக்கு நீங்கள் பலப்பட்டுவிட்டீர்களா என்பதுதான் ஆச்சரியமாய் உள்ளது.

இனப்பிரச்சினை விடயத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு நீங்கள் இடமளிக்கப்போவதில்லை என நீங்கள் ஆணித்தரமாகக் கூறிவருகிறீர்கள். நீங்கள் ஏன் பிரிவினையை விரும்புகிறீர்கள்? சமாதான வாழ்வென்பது உங்களுக்கு எட்டாக்கனியாகவே தான் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இது ஒருபுறமிருக்க நீங்கள் பங்காளிக்கட்சியாய் வரும்போதே பிரிவினைக்கு எதிரான எமது கொள்கையை மாற்றிக்கொள்ளவே மாட்டோம் என்று கூறியா பங்காளிக்கட்சியாக இணைந்துகொண்டீர்கள்?

நீங்கள் பங்காளிக்கட்சியாக இருந்து நடத்தும் உங்கள் அரசாங்கம் கையாலாகாத் தனமாகக் காணப்படுகிறது என்பதை நீங்கள் ஏன் உணர்ந்துகொள்ளவில்லை? இதனால் உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கூட ஒரு சதத்தையாவது பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்பது உங்களுக்கு வெட்கமானதாகத் தென்படவில்லையா?



அவ்வாறு நீங்கள் வெளிநாட்டு நிதியைப் பெற்றிருந்தால் அது உங்கள் கட்சிக்கும், உங்கள் இனவாதக் கும்பலுக்கும் கிடைத்த பேர் அதிஷ்டமாக அதனை நீங்கள் சுருட்டியிருக்கலாம் அல்லவா? அல்லது அது உங்கள் பகுதிக்குள் முடக்கப்பட்டிருக்கலாம் அல்லவா? ஏன் இந்தத் தந்திரம் உங்களுக்குவரவில்லை? அல்லது உங்கள் குள்ள நரித்தந்திரம் உதவி வழங்கும் நாடுகளிலே பலிக்க வில்லையா? பலிக்க வில்லை என்பதுதான் உண்மை என்று நினைக்கின்றேன். வெள்ளையர்கள் ஒன்றும் புத்தி பேதலித்தவர்கள் அல்லர் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கட்டும்.

உங்கள் ஆட்சியிலும், அதிகாரத்திலும் சமாதானப் புறாவைத்தான் தகர்த்துப் போட்டீர்கள் என்றாலும், நாட்டு மக்களையும் அல்லவா தகர்த்து விட்டீர்கள். உங்கள் அரசாங்கத்தில் அதிகரித்த விலை வாசியினால் நாட்டு மக்கள் அரை வயிற்றுடன் வாழ வேண்டிய படுபாதகமான பாவத்தை அல்லவா துணிகரமாய் செய்திருக்கின்றீர்கள்.

அரசின் ஒரு அங்கமாக இருந்து கொண்டு எதுவுமே உங்களுக்குத் தெரியாது என சாதிக்கும் நீங்கள் – சிறு சிறு விடயங்களுக்குக் கூட ஆர்ப்பாட்டம் செய்யும் நீங்கள் – இன்று ஏன் மௌனம் சாதிக்கின்றீர்கள்? அதற்குள் ஏதும் பரம இரகசியங்கள் உண்டோ என எனக்குத் தெரியவில்லை.

இன்னும் ஒன்றையும் உங்களுக்குத் தெரிவிக்க முற்படுகின்றேன். எடுத்ததற்கெல்லாம் போஸ்டர்கள் ஒட்டவேண்டாம். ஒரு காலம் வரும் அப்போது நீங்கள் இதற்குப் பதில் கூறவேண்டி வரும் என்பதை உங்களுக்கு ஞாபகப் படுத்தவிரும்புகின்றேன்.

விடுதலைப்புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வழங்கினால் தமிழீழம் உருவாகிவிடும் எனும் பயம் ஏன் உங்களுக்கு எழ வேண்டும் என்பது தான் புரியவில்லை. நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் நீங்கள் என்பதை மறந்துவிட்டீர்கள். பரம்பரையாக ஆண்ட அரச வம்சம் இதனைக் கூறியிருந்தால் நான் ஏற்றுக் கொண்டிருப்பேன். இதில் உங்களுக்குக்கென்ன யோக்கியதை இருக்கின்றது.

ஒன்றை மாத்திரம் கூறி நிறைவு செய்யலாம் என்று நினைக்கின்றேன். இராணுவப் பலம் மிக்க புலிகள் அமைதி வழியில் பேசித் தீர்வுகாண முன்வந்ததை கைநழுவ விட்டு விட்டு சுயநலத்துக்காக புலிகளை ஆத்திரமடையச் செய்வீர்களேயானால் நாடு சுடுகாடாகவே மாறிவிடும் என்பதை உங்களுக்கு ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றேன்.

நான் இந்த மடலின் ஊடாக உங்களைக் கேட்டுக் கொள்வது நீதியை நிலை நாட்டுங்கள். நாட்டுக்குச் சமாதானம் செய்யும் ஒரு சமாதான விரும்பியாய் உங்கள் சிந்தனையை மாற்றிக்கொண்டு ஜனநாயக வழிக்குத் திரும்பி விடுங்கள். ஊருடன் கூடி வாழப்பழகுங்கள். இறுதிப்பந்து வீச்சினைத் தவற விட்டால் தோல்வி தான் உங்களுக்கு நிச்சயம் என்பதை உணர்ந்து சமாதானம் செய்ய உங்கள் அணியைத்திரட்டுங்கள்.

இப்படிக்கு
உண்மையுள்ள
பாபு.

---

## இவ்வார 'ராசிபலன்' 30–08–2004, 05 –09–2004

**பொ. சந்திரன்**

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ்வாய் பூரம் சுக்கிரன்<br>சுக்கிரன் புனர்பூசம் குரு<br>புதன் மகரம் கேது | | சுக்கிரன் |
| | சூரியன் பூரம் சுக்கிரன்<br>குரு உத்தரம் சூரியன்<br>சனி புனர்பூசம் குரு | | சூரியன்<br>புதன்<br>செவ் |
| | | கேது | குரு |

ஆவணி 14 முதல் ஆவணி 20 வரை

சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

(1,8) உரிய செவ்வாய் 5 இல் இருப்பது நல்லதல்ல. ஆனால், சுக்கிர சாரம் பெற்று இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. ராகு ராசியில் இருப்பது பிரச்சினை. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,7) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. கேது 7 இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 4இல் சுக்கிரன் இருப்பதால் சுக்கிரனால் நன்மை உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில் துறை முன்னேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பார். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. குரு 6 இல் இருப்பது குறைதான். வியாழக்கிழமை வழிபாடு செய்யத் தாக்கம் குறையலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 3இல் இருப்பது நல்லது. குரு சாரம் பெற்று இருப்பது நல்ல பலனை அதிகரிக்கச் செய்யலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 4இல் இருப்பது கையில் பணம் இருக்காது. குழந்தைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவர். 4இல் சூரியன், செவ்வாய், புதன் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய செவ்வாய் 4 இல் இருப்பது திருமணவாய்ப்பை தாமதப்படுத்தலாம். சயன சுகமும் குறையலாம். (9;10) உரிய சனி இரண்டில் இருப்பது தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. தகப்பனுக்கும் கூடாது. குருவின் இருப்பு சிறப்பானபடியால் ஆறுதல் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. மேலும், கேதுவின் சாரத்தில் இருப்பதும் கூடாது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு 4இல் அவ்வளவு சிறப்பு என்று கூற முடியாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் சனி இருப்பதும் (7,10) வீடுகளை நோக்குவதுப் பிரச்சினைதான். மன அமைதியைப் பாதிக்கலாம். அடுத்து ராகு, கேது சந்திரனைத் தவிர் மற்றைய கிரகங்களை அடைப்பது நல்லதல்ல.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கும்பம் முதல் மேடம்வரை அதாவது 8,9,10 ஆகிய வீடுகளில் சஞ்சரிப்பதானது ஆரம்பத்தில் நல்ல பலனை செய்ய விடினும், வார இறுதியில் நல்ல பலனைச் செய்யும். ராசியில் சுக்கிரன் இருப்பதால் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டில் சூரியன், புதன், செவ்வாய் இருப்பதால் கையில் உள்ள பணம் செலவாகலாம். (4,11) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் உதவி செய்வர். மூத்த சகோதரம் நல்லாயிருக்கும். (7,8) உரிய சனி 12 இற் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 10 இல் குரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் ராசியில் ஆட்சியாக இருப்பதால், மேலும் செவ்வாய், புதன் அங்கு இருப்பதால் எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். சூரியன் சுக்கிர சாரம் பெற்று இருப்பதும் நல்லதல்ல. (2,11) உரிய புதன் ராசியில் இருப்பது கையில் பணம் இருக்காது. (4,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 12 இல் இருப்பது திருமணவாய்ப்பு உண்டு. எதிரிகள் பகையை மறந்து அல்லது மன்னித்து நண்பராகும் வாய்ப்பு உள்ளது. 10க்குரிய சுக்கிரன் 12 இல் இருப்பது தொழில்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2**

(1,10) உரிய புதன் 12இல் இருப்பது நல்லதல்ல. மேலும் கேதுவின் சாரம் பெற்று இருப்பதால். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். தகப்பனுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது நல்லதல்ல. வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,7) வீடுகளைச் சனி பார்ப்பது, அந்த அந்த வீடுகளால் வரும் நல்ல பலனைக் கெடுத்துவிடும். சனிஸ்வர வழிபாடு நன்மை செய்யும்.

**துலாம்: சித்திரை3,4சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 10 இல் பெரிதாக நன்மை இல்லை. குரு சாரம் பெற்று இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. மேலும் கேது ராசியில் இருப்பதால் எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,7) உரிய செவ்வாய் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. 10 இல் சுக்கிரன் இருப்பதை சில சோதிட நூல்கள் குறை கூறுவதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது, என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 10இல் நன்மை இல்லை, சுக்கிர சாரம் பெற்று இருப்பதால் ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். ஆனால், நிறைவேறும். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். (2,5) உரிய குரிய 11 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்திதரும். (3,4) உரிய சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. அயன சயன சுகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். 10 இல் சூரியன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். அங்கு செவ்வாய், புதன் குழப்படிவிடலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10 இல் அவ்வளவு சிறப்பு இருக்காது. சூரிய சாரம்பெற்று இருப்பது நல்லபலனைத் தரும். ஆனால், செவ்வாய், புதன் சேர்க்கை நன்மை இல்லை. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்லதல்ல. (7,10) உரிய புதன் 9 இல் இருப்பது நல்லதல்ல. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் வெளியாரின் தலையீடு இருக்கும். ராசியை சனி பார்ப்பது சங்கடங்களை உண்டாக்கலாம்.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். குருவின் சாரம் பெற்று இருப்பதும் சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 8இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. 7 இல் சுக்கிரன் இருப்பது திருமணவாய்ப்பையும் பாதிக்கும். குடும்ப அமைதியைக் கெடுக்கும். 10க்குரிய சுக்கிரன் 7 இல் இருப்பது 10 இல் கேது இருப்பதும் தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. குரு 9 இல் இருப்பது மிகவும் விசேஷம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5 இல் இருப்பதை நஞ்சுச் சனி என்பர். நன்மையில்லை. குருவின் சாரம் பெற்று இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம், சயன சுகமும் குறையலாம். (4,9) உரிய சுக்கிரன் 6 இல் இருப்பது பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 இல் சூரியன், புதன், செவ்வாய் இருப்பது திருமணவாய்ப்பை பாதிக்கலாம். குடும்ப அமைதியையும் பாதிக்கலாம். 10க்குரிய செவ்வாய் 7 இல் இருப்பது அவ்வளவு சிறப்பு இல்லை. சூரியன் அங்கிருந்து தொழிலை சிறிது முன்னேற்ற முயலும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது விசேஷம். மேலும் சூரிய சாரம் பெற்று இருப்பதும் சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும். (2,9) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. ஆலய வழிபாடு அமையும். (4,7) உரிய புதன் 6 இல் இருப்பதும் விசேஷம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். 7 இல் உள்ள குரு ராசியைப் பார்ப்பதால் சனி ராசியைப்பார்க்கும் தோசம் நிவர்த்தியாகும். இருப்பினும் சனி ராசியைப் பார்ப்பது குறைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றான் தாய் மனப் போக்கில் வடக்கில் துறைமுகங்கள்

வடக்கில் உள்ள பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்கள் மாற்றான் தாய் மனப் போக்கில் காலம் கடத்துவதாக ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

துறைமுக அதிகாரசபையின் கீழ் உள்ள கொழும்பு, காலி, திருகோணமலை, ஒலுவில் போன்ற துறைமுகங்கள் பெறும் அபிவிருத்தியும், ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் வடமாகாண துறைமுகங்கள் பெறுவதில்லை — யுத்தம் தந்த பரிசுகளில் இதுவும் ஒன்று என்பது வேதனையான விடயமாகும்.

இலங்கைப் பெருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்குவது துறைமுகங்களே. ஆனால், அம்பாந்தோட்டை துறைமுகம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதில் உள்ள அக்கறை வடக்கு– கிழக்கு மாகாணத்து துறைமுகங்களில் காட்டப்படுவதில்லை.

பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதாக அரசியல்வாதிகள் வெறும் பேச்சளவிலேயே கூறி வருகின்றனர்.

துறைமுகங்களின்வளர்ச்சியைப்பொறுத்தவரை துறைமுகங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் அமைச்சர்கள், தங்கள் சார்ந்த பகுதிகளின் வளர்ச்சியிலேயே கவனம் செலுத்துகின்றனர். தென் இலங்கை ஆட்சியாளர்கள் வடக்கு– கிழக்கில் கவனம் செலுத்தவில்லை.

ஆனால், மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரவ் வேறுபட்டவராக விளங்கினார்.

ஒலுவில் துறைமுகத்தை ஸ்தாபித்தமை, அதற்கென ஒரு இறங்கு துறையை (அஷ்ரப் துறை மேடை) அமைத்தமை. மூவினத்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்தமை, தெற்குத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தமை, வடக்கு–கிழக்கு தமிழர்களுக்கு வேலை வாய்ப்பளித்தமை என்பன அவரது ஆளுமையை புடமிட்டுக்காட்டுகின்றன. ஆனாலும், வடக்கின் துறைமுகங்கள் உள்வாங்கப்படாதது சுட்டிக்காட்டப்படவேண்டியதே.

பலத்த எதிர்பார்ப்புடன் பணியாற்றியவர்களுக்கு யுத்தகால கெடுபிடிகள் வடக்கு நோக்கிய பயணத்துக்கு தடைபோட்டிருக்க கூடும். கிழக்கு மாகாணத்தை உள்வாங்கிய தன் மூலம் புலிகளை துறைமுகத்துள் புகுத்தி விட்டார் என அப்போது விமர்சிக்கப்பட்டதுடன் பல கைதுகளும் இடம்பெற்றன.

காலித்துறைமுகத்தைஅபிவிருத்திசெய்ய வேண்டும் என்ற துடிப்பு தென்மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ரொணிடி மெல்க்கு இருந்தது. அதே பாணியிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அப்போது செயற்பட்டார். இதே கரிசனை அம்பாந்தோட்டைக்கும் காட்டப்பட்டது.

எப்பாடுபட்டேனும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வேன் என துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீர சூளுரைத்துள்ளார். காலித் துறைமுக அபிவிருத்தியை முன் எடுப்பதாகவும் குறிப்பிடுகின்றார். இப்போது கூட வடக்கு– கிழக்குத் துறைமுகங்கள் பற்றிப் பேசப்படவில்லை.

காங்கேசன் துறைமுகம் 1998ஆம் ஆண்டில், துறைமுகங்கள் அதிகாரசபையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பிலிருந்து ஊழியர்கள் கொண்டுவரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனை அபிவிருத்தி செய்யவென அதே ஆண்டே (1998) நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் ஆதலால் தமிழர்கள் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பருத்தித்துறைமுகத்தை அதிகாரசபை பொறுப்பேற்றுக் கொண்டாலும், ஊழியர்களைப் பொறுத்தவரை ஆகஸ்ட் 2001 ஆம் ஆண்டிலேயே 43 பேரை அதிகாரசபை பொறுப்பேற்குமென தெரிவிக்கப்பட்டிருந்தது. இத்தகையவர்கள் பலவருடமாக யாழ். செயலகத்தின் சார்பில் தினசரி வேதனம் பெற்று கடமையில் ஈடுபட்டுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்கும் என்று செய்தி கேட்டு மகிழ்ச்சியுடன் காணப்பட்ட ஊழியர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. துறைமுக ஆலோசனைச் சேவை (Port Management and Consuitanly Service Ltd) நிறுவனம் என்ற நிலையிலேயே உள்ளது. அதுமட்டுமன்றி ஒரு வருட ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட சேவைக்காலம் நிரந்தரமாக்கப்படாதுமீண்டும் ஒரு வருடம் நீடிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனால், இத்துறைமுக ஊழியர்களுக்கு ஏனைய துறைமுக ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இவர்கள் நாளாந்தம் வேதனம் தவிர்ந்த வேறு எந்த நன்மையும் பெறுவதில்லை.

துறைமுக அதிகாரசபையின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 2500 ரூபா பணம் கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பருத்தித்துறை துறைமுகத்தின் முக்கிய பிரச்சினை; அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதே ஆகும். இதனால் ஊழியர்கள் காலை 7.30 மணிக்கு உள்வாங்கப்பட்டு மாலை 5.30 மணிக்கு வெளிச்செல்லப்படுகின்றனர்.

இதனால் ஊழியர்களுக்கு சுதந்திரமில்லை. இரவுநேர வேலைகள் நடைபெறாததனால் மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை.

புதிய வேலைகள் கையாளப்படும் போது சம்மந்தப்பட்டவர்களுக்கு பயிற்சியும், ஆலோசனையும் வழங்கப்படுவது நியதி. அதற்குக் கூட இவர்கள் கொழும்புக்கு அனுப்பப்படுவதில்லை. சுருங்கச் சொன்னால் பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் ஏனைய துறைமுக ஊழியர்களிலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

காகிதாதிகள் கூட வழங்கப்படாததனால்; அதிகாரிகள் தங்கள் சொந்தப் பணத்திலேயே அவைகளைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது.

ஆனால், கொழும்பு உள்ளிட்ட துறைமுகங்களில் காகிதாதிகள் கைதுடைப்பதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்பதை யாரும் காண்பதில்லை.

பெரும்பாலும் வருமானம் ஈட்டாத ஒலுவில் துறைமுக ஊழியர்கள் அதிகார சபையின் கீழ் பணியாற்றுவது போன்று இவர்களும் பணியாற்ற விரும்புகின்றனர்.

இங்கு சீமெந்து இறக்குமதி செய்யும் நடவடிக்கை இடம் பெறுவதனால், நாட்கூலிக்குப் பணியாற்றும் இவர்கள் அதிகார சபையின் கீழ் உள்வாங்கப்படுவது அவசியமே.

வட பிராந்திய ஊழியர்கள் நலனை மறைக்கும் மூடு மந்திரம் எதுவென அறிந்து அதனை வெளிக் கொண்டுவரும் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும். அதிகார சபை ஊழியர்கள் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் படுவதோடு, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாற்றான் தாய் மனப் போக்கில் வேறுபாடு காட்டப்படும் துறைமுகங்கள், உயர் பாதுகாப்பு வலயம் எனும் பிரச்சினை திருமலை துறைமுகத்துக்கு வரக்கூடும் எனும் அபாயம் இப்போது எழுந்திருக்கின்றது. அச்சுறுத்தல் தரும் முகாம்கள் குறித்த சர்ச்சை, கடற்படைக் கெடுபிடிகள், அரசியல் நடவடிக்கை என்பனவே இச்சந்தேகங்களைத் தருகின்றன.

**எஸ்.எஸ்.ஆர்.**

## சொற்சிலம்பம் போட்டி இல.123

சொற்சிலம்பம் 123 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் செப்டெம்பர் 05 ஆம் திகதி ஆகும். விடைகள் செப்டெம்பர்12 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டெம்பர்19ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.121க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலா விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.123

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | ■ | |
| 11 | 12 | | ■ | 13 | | 14 | |
| 15 | | ■ | 16 | | ■ | | ■ |
| | ■ | 17 | | ■ | 18 | | 19 |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.121

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 க | 3 ஜ | ம் | ■ | 4 தி | 5 க | 6 தி |
| 7 ம | ட | ம் | ■ | 8 க | ண் | ட | ல் |
| த் | ■ | 9 ப | 10 கோ | டா | ■ | 11 க | லை |
| 12 து | 13 ரு | ம் | பு | ■ | 14 தா | ம் | ■ |
| 15 வ | சி | ■ | 16 ர | 17 ச | னை | ■ | 18 ம |
| ம் | ■ | 19 அ | ம் | மி | ■ | 20 ஆ | ல் |
| ■ | 21 பா | தி | ■ | 22 பா | ஞ் | சா | லி |
| 23 க | ல் | க | ண் | டு | ■ | 24 மி | கை |

## சொற்சிலம்பம் போட்டி இல.123

**இடமிருந்து வலம்**

1. சீதையை அடைய இராமர் முறித்தது.
5. தாய்.
7. சுவடு/ அடையாளம்.
8. கூறுதல்.
10. ஆடை தயாரிப்பதற்கு உதவும்.
11. சூரியன்.
13. பால் கெட்டுப்போவதை இப்படிக் கூறுவர்.
15. ரசனை கொள்.
16. கோப்பிசத்தில் அமைவது.
17. தாண்டு.
18. தகைமை உடைய தன்மை.
20. கை கூப்பு.
22. மலையகத் தலைநகர்.
23. கதாநாயகனின் எதிரி.

**மேலிருந்து கீழ்**

1. இந்திய நிதியமைச்சர்.
2. ஒரு திக்கின் சுருக்கம்.
3. சதிபதி.
4. அருச்சுனன் மனைவி; அபிமன்யுவின் தாய்; கிருஷ்ணனின் தங்கை.
5. நெஞ்சு.
6. பாய்தல்.
9. அமருவது இதில்.
12. முனிவர்.
14. ஆங்கிலத்தில் 'கொமிஷன்'
16. வீட்டின் ஹோல்/ விறாந்தை.
17. ஒரு காட்டு மிருகம். புளுகுவதை இது விடுவதாகவும் சொல்வர்.
18. ஒரு தோல் வாத்தியம்.
19. வலிமை/ திறமை.
20. விழி.
21. ஒன்று சேர்.

## சொற்சிலம்பம்-120 பரிசு பெறுவோர்.

1. ப.பிரியங்கா,
   மாயழகு வீதி,
   அக்கரைப்பற்று.
2. வ.துரைராஜா,
   22,3/1 மூர் வீதி,
   வெள்ளவத்தை.
3. திருமதி.உஷாதேவி ஜோன்சன்,
   இல.100/16, ஈடி.தாபரேமாவத்தை,
   கொழும்பு – 05.

### பாராட்டுப்பெறுவோர்

1. ப.யசோதா,
   219, ஜெயபுரம் தெற்கு,
   பல்வராயன்கட்டு.
2. சி.பரமசாமி,
   புளியம்பொக்கணை,
   பரந்தன்.
3. க.யசோதா,
   சில்வா வீதி,
   வட்டக்கச்சி.
4. அ. அகல்யா,
   ஓடக்கரை வீதி,
   யாழ்ப்பாணம்.
5. க.ஜெகதீபன்,
   நவாலி தெற்கு,
   மானிப்பாய்.
6. த.கார்த்திக்,
   புதுக்குடியிருப்பு,
   முல்லைத்தீவு.
7. இ.குல ஈஸ்வரி,
   முல்லை வீதி,
   பரந்தன்.
8. இ.கோபாலபிள்ளை,
   மானிப்பாய் வீதி,
   யாழ்ப்பாணம்.
9. திருமதி. ம.விக்னேஸ்வரா,
   கரவெட்டி மேற்கு,
   கரவெட்டி.
10. வி.எஸ்.எஸ்.ஆனந்தர்,
   கொலிங்வூட் பிளேஸ்,
   வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலமா சபையின் காலைவாரினார் ரிஷாத்!

# வங்குரோத்து நிலையில் முஸ்லிம் காங்கிரஸ்

இரு வாரங்களுக்கு முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோருக்கும் இடையே அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பகீரத முயற்சிகளின் பயனாக எட்டப்பட்ட இணக்கப்பாடும், ஒற்றுமைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் ஓரிரு நாட்களுக்குள்ளேயே சீர்குலைந்து போய்விட்டன.

அதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க் கிழமை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முஸ்லிம் காங்கிரஸை மட்டுமல்ல முழு முஸ்லிம் சமூகத்தையுமே ஆச்சரியத்துக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

கடந்த மே மாதம் நடுப்பகுதியில் பூகம்பமாக வெடித்த ரவூப் ஹக்கீம் – குமாரி குரே விவகாரத்தின் எதிரொலியாக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான ரிஷாத், நஜீப் ஆகிய இருவரும் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். அத்துடன் அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வறிதாக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்தார்.

அதனையடுத்து கடந்த ஜூன் மாதம் பிற்பகுதியில் ரிஷாத், நஜீப் ஆகியோரும், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்குக் கட்சி தாவிய ஹுஸைன் பைலாவும் தம்மை முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கியமை சட்டவிரோதமானது எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கின் தீர்ப்பே கடந்த செவ்வாயன்று அறிவிக்கப்பட்டது. இம்மூவரையும் கட்சியிலிருந்து விலக்கியமை செல்லுபடியாகாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமை இயற்கை நீதிக்கோட்பாட்டுக்கு முரணானது எனவும் நீதிமன்றம் அறிவித்தது.

## முகா.வின் அறிவீனம்

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத், நஜீப், பைலா ஆகிய மூவரையும் கட்சியிலிருந்து விலக்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதியுயர் பீடம் கைக்கொண்ட வழிமுறைகள் பிழையாக அமைந்தமையே இவ்வாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இம்மூன்று எம்.பிக்களையும் கட்சியிலிருந்து நீக்குவதற்கு முன்னதாக, அவர்களுக்கு அனுப்பப்பட்ட குற்றப்பத்திரிகைகளுக்கு, விளக்கமளிப்பதற்கு கட்சி போதிய அவகாசம் வழங்கவில்லை என்பதே நீதிமன்றத்தின் கவனத்திற்கு சமர்பிக்கப்பட்ட முக்கிய விடயமாகும். முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் இவர்களை ஒழுக்காற்று விசாரணைக்கு அழைத்தபோது, அவர்கள் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு முன் தோன்றாததால், இரவோடு இரவாக கூடிய கட்சியின் உயர் பீடம் 24 மணித்தியாலங்களுக்குள் எழுத்து மூலம் விளக்கமளிக்குமாறு அம்மூன்று எம்.பிக்களுக்கும் கடிதம் அனுப்பியது.

ஆனால், தமக்கு கால அவகாசம் போதாது எனவும், தாம் எழுத்து மூலம் விளக்கமளிப்பதற்கு இரு வார கால அவகாசம் தருமாறும் முஸ்லிம் காங்கிரஸிடம் எழுத்து மூலம் கேட்டிருந்தனர். எனினும் அவர்கள் கேட்டவாறு அவகாசம் எதுவும் வழங்காமலேயே உடனடியாகக் கட்சியிலிருந்து அம்மூவரையும் விலக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதுவே ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், ஹுஸைன் பைலா ஆகிய மூவருக்கும் சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

இத்தீர்ப்புக் குறித்து ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி எம்.பி ''இவ்வாறு தீர்ப்பு வரும் என்று கட்சி ஓரளவு எதிர்பார்த்த ஒன்று தான். இத்தீர்ப்பை மையமாகக் கொண்டு சட்ட விதிகளுக்கு அமைவாக, இம்மூன்று எம்.பிக்கள் மீதும் மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும்'' எனக் கூறியுள்ளார்.


ஹஸனலியின் இக்கருத்து முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய வங்குரோத்து நிலையையே வெளிக்காட்டி நிற்கிறது. அதியுயர் பீடம், அரசியல் பீடம், மசூறா சபை, அரசியலமைப்புக்குழு எனப் பல்வேறு கட்டமைப்புக்களைக் கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஓர் உறுப்பினரைக் கட்சியிலிருந்து விலக்குவதற்கான உரிய வழிமுறைகளைப் பின்பற்றாது தவறிழைத்தது ஏன் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

## விழுந்தாலும் மீசையில் மண்படவில்லையாம்

கட்சியாப்பு, இயற்கை நீதிக்கோட்பாடு போன்றவற்றுக்கு அப்பால் குறித்த உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து விலக்கி, அவர்களது எம்.பி பதவிகளை உடனடியாகப் பறித்து விட வேண்டுமென்ற தன்னிச்சையான – வக்கிரமிக்க முடிவே கட்சியை இன்று சந்தி சிரிக்க வைத்துள்ளது.

அதனால் தான் 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்றளவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலியின் அறிக்கை அமைந்திருக்கிறது.

இத்தீர்ப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு நல்ல படிப்பினையாகும் எந்த ஒரு விடயத்திலும் கட்சி யாப்பு, ஜனநாயகம், மசூறா போன்றவற்றிக்கு உரிய மதிப்பளித்து ஆக்கபூர்வமான தீர்மானங்களையும், நடவடிக்கைகளையும் எதிர்காலத்திலாவது



ஹக்கீம்

சிறப்பாக மேற்கொள்ள இப்படிப்பினை வழிவகுக்கும் என ஓரளவு எதிர்பார்க்கலாம்.

இந்த வழக்குத் தீர்ப்பு தொடர்பான விடயம் ஒருபுறம் இருக்க, அதற்கு முன்னதாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் ஏற்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நஜீப் ஏ.மஜீப் ஆகியோருக்கும் இடையே கடந்த 16 ஆம் திகதி இரவு கைச்சத்திடப்பட்ட நல்லிணக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது என்று முஸ்லிம் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஆகையினால் அது தொடர்பாக ஆராய்வது அவசியமான ஒன்றாக உள்ளது.

ரவூப் ஹக்கீம் – குமாரி குரே விவகாரம் பூகம்பமாக வெடித்து, சதிப்புரட்சி ஒன்றுக்கான ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டவை பற்றியும், அது தொடர்பில் அரசியல் கொந்தளிப்புகளுக்கு மத்தியில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் ஓரளவு – மேலெழுந்தவாரியாக கடந்த வார சுடர்ஒளியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

கடந்த நான்கு மாதங்களாக ஜம்மியத்துல் உலமா மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளின் பயனாகவே சென்ற 16 ஆம் திகதி இரவு, பிணக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஒற்றுமைப்படுத்தப்பட்டு, மேற்கொண்டு எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஓர் இணக்கவரைபு தயாரிக்கப்பட்டது.

## ரிஷாதின் புலம்பல்

குமாரி குரே விவகாரத்தினால் முஸ்லிம் சமூகம் தலை குனிந்து நின்று கொண்டு, உலமா சபைக்கே அழுத்தம் கொடுத்து வந்தது. ரவூப் ஹக்கீமும் உலமா சபையை நாடினார். ரிஷாத் பதியுதீனும் உலமா சபையை நெருக்கினார்.

''முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தம்மை அநியாயமாக விலக்கி விட்டார்கள். எமக்கு அநீதியிழைக்கப்பட்டு விட்டது. அதனால் இது விடயத்தில் உலமா சபை தலையிட்டு நீதி பெற்றுத்தர வேண்டும்'' என ரிஷாத் அழுது புலம்பினார்.

கட்சியை மேலும் சிதைய விடாது ஒற்றுமைப்படுத்த உதவுமாறு முஸ்லிம் காங்கிரஸும், தலைவர் ஹக்கீமும் உலமா சபைக்கு அழுத்தம் கொடுத்து வந்தனா.

முஸ்லிம் சமூகமும், பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் என ஏகோபித்த அழுத்தம் வலுக்கவே ஜம்மியதுல் உலமா, ஏழு உறுப்பினர்களைக் கொண்ட விசேட கமிட்டி ஒன்றை அமைத்து, குறித்த சர்ச்சை பற்றி ஆராய்ந்தது.

சம்பந்தப்பட்ட இரு தரப்பாரையும் பல தடவைகள் நேரடியாக அழைத்து, விசாரித்து – இரவு பகலாக அதில் கவனம் செலுத்திய ஜம்மியத்துல் உலமா, இறுதியாக இரு தரப்பாரையும் ஓர் இணக்கப்பட்டுக்கு கொண்டு வந்தது.

அதுதான் கடந்த 16 ஆம் திகதி இரவு நடந்த் நிகழ்வாகும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏமஜீத் ஆகிய மூவரும் ஜம்மியத்துல் உலமாவினால், அவர்கள் முன்னிலேயே தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர்.

அதன் பிரகாரம் இரு தரப்பாரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுவதுடன் தமக்கிடையிலான பகைமையுணர்வுகளைக் களைவது எனவும், முஸ்லிம் சமூகத்திற்காக முஸ்லிம் காங்கிரஸில் ஒன்றுபட்டு செயற்படுதல் எனவும் அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகின்றது.

## ஹக்கீம் – ரிஷாத் இணக்கம்

''ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத் ஆகியோரைக் கட்சியிலிருந்து விலக்கிய தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரஸ் வாபஸ் பெறுவதோடு, அது தொடர்பாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கட்சி உறுப்புரிமை ரத்து தொடர்பான கடிதத்தையும் உடனடியாக வாபஸ் பெறும்.''

''அதேபோன்று ரிஷாத், நஜீப் ஆகிய இருவரும் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை உடனடியாக வாபஸ் பெறுவர்.''

''தமக்கிடையான ஒற்றுமை குறித்த அறிவிப்பை – ஜம்மியத்துல் உலமாவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை நாடாளுமன்றத்தில் (17.08.2004 அன்று) மூவரும் கூட்டறிக்கையாக வெளியிடுவர்.''

இவையே ஹக்கீம் – ரிஷாத் முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் தயாரிக்கப்பட்டு மூவரினாலும் ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாகும்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ரிஷாத், நஜீப் ஆகியோர் 24 மணித்தியாலத்திற்குள் அதனை மீறிவிட்டனர். மறுநாள் நாடாளுமன்றம் சென்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் சேர்ந்து கூட்டறிக்கையை வெளியிடாது அரசின் முக்கிய புள்ளிகளைச் சந்தித்து மந்திராலோசனை நடத்தினர்.

குறித்த தினத்தில் (17 ஆம் திகதி) நாடாளுமன்றம் சென்ற ரவூப் ஹக்கீம் கூட்டறிக்கை விடுவதற்கு தயாராக இருந்த போதிலும் அதற்கு முதல் நாள் இரவு தன்னுடன் உறவைப்புதுப்பித்துக் கொண்டு, நல்லிணக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு எம்.பிக்களும் சபைக்கு வராதால் அவர் ஏமாந்து – தடுமாறினார்.

கூட்டறிக்கையைத் தயாரித்த ஜம்மியத்துல் உலமா பிரதிநிதிகளும் அன்றைய தினம் சபை நடவடிக்கைகளை அவதானிக்கச் சென்றிருந்தனர். அவர்களுக்கும் பெருத்த ஏமாற்றமே. உலமாக்கள் ரிஷாத் எம்.பியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

அதேவேளை அன்று காலை ஹுஸைன் பைலா எம்.பியை அவ்விரு எம்.பிக்களும் சந்தித்தபோது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் சேர வேண்டாம் – தமக்கு சார்பாகவே எல்லாம் நடக்கும் – அதனால் வழக்கை வாபஸ் பெற வேண்டாம் என வற்புறுத்திக் கூறினாராம். அவர்களது சட்டத்தரனிகளும் அவ்வாறே கூறினராம்.

## ஜனாதிபதி உத்தரவாதம்

அதன் பிறகு அமைச்சர்களான மங்கள சமரவீர, லசந்த அழகியவன்ன, மஹிந்தானந்த அலுத்கமகே, சிறிபதி சூரியாராச்சி போன்றோருடன் ரிஷாத் எம்.பி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சில உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஹுஸைன் பைலா எம்.பி.முன்னிலையில் ஜனாதிபதியின் இணக்கத்துடனேயே இவ்வுறுதிமொழிகள் வழங்கப்பட்டனவாம்.

இவ்வுத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்ட ரிஷாத் பதியுதீனும், நஜீப் ஏ.மஜீதும் தமது கையிலிருந்த – ஜம்மியத்துல் உலமாவினால் தயாரிக்கப்பட் ட – ஹக்கீமுடனான நல்லிணக்க ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துள்ளனர்.

ரிஷாத் தரப்பினர் எதிர்ப்பார்த்தவாறே எல்லாம் நடந்து கொண்டு வருகின்றது. தமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைத்திருப்பதால், இனி அரசுடன் சேர்ந்து பிரதி அமைச்சர் பதவிகளை ஏற்பதற்கு அவர்கள் தயாராகி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அவர்கள் நிகழ்ச்சி நிரல் ஒன்றின் பிரகாரமே காய்களை நகர்த்தி வருகின்றனர். அதற்காக ரவூப் ஹக்கீமை அல்ல முஸ்லிம் காங்கிரஸை அல்ல ஜம்மியத்துல் உலமாவையும், முஸ்லிம் சமூகத்தையும் தாம் ஏமாற்றுவதற்குத் தயார் என்பதை ரிஷாத் தரப்பினர் நிரூபித்து விட்டனர்.

அதேவேளை ரிஷாத் அணியினர் மீது சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக மீண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி செய்யும். அதன் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணைக்கு மூன்று எம்.பிகளும் ஒரு மாதமாவது கால அவகாசம் கோரலாம். அதையடுத்தே அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கும் தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ள முடியும்.

அதன் பிறகு ஒரு மாத காலத்திற்குள் சர்ச்சைக்குரிய மூன்று எம். பிக்களும் கட்சிக்கெதிராக நீதிமன்றத்துக்குச் செல்வர். நீதிமன்றம் அது தொடர்பில் இரு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்க முடியும்.

## உலமா சபைக்கு ரிஷாத் துரோகம்

இதன்படி, தீர்ப்பு தமக்கு சாதகமாக வருகின்றதோ, இல்லையோ தாம் குறைந்தது நான்கு,ஐந்து மாதங்களாவது சுதந்திரமாக எம். பி பதவியை வகிக்கு முடியும் என அம்மூவரும் கருதுவதாலும், ஜனாதிபதியினதும், அரசினதும் ஆதரவும், அரவணைப்பும் தமக்கிருப்பதால் எம். பி பதவியில் நீடிக்க முடியும் என நப்பாசை கொள்வதாலுமே அவர்கள் அரசு பக்கம் சென்று பிரதி அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்கு முயற்சித்துவருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தல் முடிந்த கையோடு அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை வற்புறுத்திய விடயம் அரசுடன் இணைந்து கொள்ளவேண்டும் என்பதே. அதற்கு ஹக்கீம் ஒத்துவராததாலேயே குமாரி குரே விவகாரம் வெடித்தது. அதனால் ஏற்பட்ட அனர்த்தங்கள் ஏராளம்.

அவற்றை முடிவுக்குக் கொண்டுவந்து, முஸ்லிம் காங்கிரஸை நிமிர்த்தி எடுப்பதற்காக அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா மேற்கொண்ட முயற்சிகள் – நடவடிக்கைகள் யாவும் ரிஷாத் அணியினரின் திருகுதாள அரசியல் போக்கினால் வீணடிக்கப்பட்டுள்ளன.

ஜம்மிய்யத்துல் உலமாவுக்கு ரிஷாத் அணியினரின் கபடத்தனமான அரசியல் காய் நகர்த்தல்கள் புரிந்திருக்கவில்லை. கட்சியில் சேர்த்து விடுமாறு ரிஷாத் அழுது புலம்பியதால், ஜம்மிய்யாவும் சமூக ஒற்றுமை கருதி மிகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

ஆனால் அவை எல்லாவற்றினதும் மொத்த வடிவமாகக் கிடைத்த நல்லிணக்கத்தை சிதறடிக்கச் செய்துவிட்டிருக்கின்றனர் ரிஷாத் அணியினர். தமது சாக்கடை அரசியலுக்குள் ஜம்மிய்யத்துல் உலமாவையும் சம்பந்தப்படுத்தி, அதன் கௌரவத்திற்கும், கண்ணியத்திற்கும் மாசு கற்பிக்கும் வகையில் அதனை ஏமாற்றி – துரோகமிழைத்தவர்களை முஸ்லிம் சமூகம் குள்ள நரிகளாகவே பார்க்கிறது

-அஸ்லம் எஸ். மௌலானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# தொழிற்சங்க சூதாட்டம்

தோட்டக்கம்பனிகளுக்கு வக்காலத்து வாங்கும் தொழிற்சங்கங்களால் தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?

தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய தொழிற்சங்கங்கள் ஒன்றுக்கு ஒன்று காலைவாரிவிடவும், முட்டி மோதிக்கொள்ளவும் வேண்டுமா?

தொழிற்சங்கங்களின் போட்டாபோட்டியினால் தோட்டத் தொழிலாளர்களை நடுத் தெருவில் நிறுத்திவிடலாமா?

கம்பனிக்காரர்கள் சந்தோஷமாக வழங்கும் சில லட்சங்களுக்காக இலட்சியத்தையே அடைமானம் வைக்கலாமா?

இவைதான் இன்று மலையகத்தில் மூலை முடுக்களில் எல்லாம் எதிரொலிக்கும் கேள்விகள்.

இக்கேள்விகளிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி இரண்டு மாதங்கள் ஓடி மறைந்து விட்டன.

நாட்டு மக்களையே வாட்டிவதைக்கும் வறுமையும், வாழ்க்கைச் செலவு உயர்வும் தோட்டத் தொழிலாளர்களை விட்டு வைக்கவில்லை.

இதோடு நின்று விடவில்லை. நாட்டின் பலபாகங்களிலும் ஏற்பட்டுள்ள வரட்சி பெருந்தோட்டத்துறையையும் பாதித்துள்ளது என்பதை மறைக்க முடியாது.

அரசாங்கம் கிராமப்புற விவசாயிகளுக்கும், கிராமத்தவர்ளுக்கும் வரட்சி நிவாரணம் வழங்கி உள்ளது. தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கமும் மறந்துவிட்டது. வரட்சியினால் தேயிலைச் செடிகள் செத்து மடிகின்றன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் குடும்பங்கள் வருமானம் இன்றிப் பட்டினியால் வாடுகின்றன.

ஆனால், இவர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க அரசாங்கமும் நினைக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரணம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என சிந்திக்கவும் இல்லை. பத்திரிகை அறிக்கையோடு இவர்களின் கடமை முடிந்துவிட்டதாக இருந்துவிட்டனர் தொழிற்சங்கத் தலைவர்கள்.

இவர்களுடைய ஏனோதானோ போக்கினால், கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தொழிலாளர்களின் கழுத்தில் மாட்டிவிட்ட தொண்டு இன்று அவர்களுடைய வாழ்க்கையை முடிக்கும் யமனாக மாறிவிட்டது.

தாங்களே பெரிய தொழிற்சங்கங்கள் எங்களிடம் லட்சக்கணக்கான அங்கத்தினர்கள் இருக்கின்றனர் என்று பீற்றிக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்ட தொழில்சங்கங்களின் சாயம் இப்பொழுது வெளுத்து விட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி என்பனவே இப்படித் தம்பட்டம் அடித்துக்கொண்டன.

முறையே 70 ஆயிரம், 50 ஆயிரம், 13 ஆயிரம் என்ற அடிப்படையிலேயே தொழிற்சங்க சந்தா தோட்டத்துரைமார் மூலம் காசோலைகளாக அனுப்பப்படுவதாக தொழில் திணைக்களத்தில் கிடைத்த தகவல் ஒன்றின் மூலம் அறிய முடிந்தது.

# தொழிலாளர் திண்டாட்டம்

இம்மூன்று சங்கங்களுக்கும் இடையில் மலையக மக்கள் முன்னணியும் 20 ஆயிரம் அங்கத்தினர்களைக் கொண்டுள்ளதை அறிய முடிந்தது.

இன்று ஏற்பட்டுள்ள சிக்கல் என்ன? மலையக மக்கள் முன்னணியை கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவிடக்கூடாது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு இ.தொ.காவும், இ.தே.தோ. தொ.சங்கமும் பிடிவாதமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சந்திரசேகரன் இப்பேச்சுக்களில் கலந்து கொண்டால், தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என இ.தொ.கா கூறி உள்ளதாக துரைமார்சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம் சந்திரசேகரன் வந்தால் குழப்பியடித்துவிடுவார் சமரச முடிவு காண முடியாது என்று இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரமுகர் கூறுகின்றார்.

ஆனால், தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியோ விலாங்கு நிலையில் தனது சகாக்களுக்கு தலையையும், மலையக மக்கள் முன்னணிக்கு வாலையும் காட்டிக் கொண்டிருக்கின்றது.

இவற்றை எல்லாம்விட இன்று தோட்டக் கம்பனிகள் பல கோடிரூபாய்களை இழந்து நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றைய நிலையில் 121 ரூபா சம்பளத்தை வழங்குவதே பெரிய வேலை என்கிறாராம் ஒரு தொழிற்சங்க வாதி. இது எப்படி இருக்கிறது.

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறும் தோட்டக்கம் பெனிகள், தமது அதிகாரிகளுக்கும் தோட்டத்துரைமாருக்கும் பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து சொகுசு (இண்டர் கூலர்) வாகனங்களை வாங்கி உள்ளன.

கம்பெனித் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு மூன்று நாள் விடுமுறை வழங்கி கம்பெனிச் செலவிலேயே உல்லாசப் பிரயாணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இதை எல்லாம் எந்தக்கணக்கில் எழுதப் போகின்றார்கள்? இவையெல்லாம் இந்த தொழிற்சங்கவாதிகளின் மரமண்டைகளில் ஏறவில்லையா?

இப்படியான மோசடிகளையும், ஊழல்களையும் தட்டிக் கேட்கும் தகுதியற்ற தொழிற்சங்க வாதிகள், சகதொழிற்சங்கங்களின் காலைவாரி விடுவதில் ஆர்வமாக இருப்பது தான் வேடிக்கையாக இருக்கின்றது.

இந்த மூன்று தொழிற்சங்கங்களும், என்ன கம்பெனிகளைக் குத்தகைக்கு எடுத்து விட்டனவா? அக்காலத்து பெரிய கங்காணிமார் போன்று இவர்கள் மட்டும் தான் ஒப்பந்தம் செய்யவேண்டுமா?

கம்பெனிக்காரர்களுக்கும், தோட்டத் துரைமார் சம்மேளத்துக்கும் ஆமாம் சாமி போடுபவர்கள் மட்டும் தான் கூட்டு ஒப்பந்தம் செய்வதில் கூட்டாளிகளாக இருக்க வேண்டும் என்று கருதுகின்றார்களோ என்பதும் புரியவில்லை.

தொழிலாளர்களின் நலனுக்காககூட்டு ஒப்பந்தம் செய்யப்படுகின்றதா? அல்லது தொழிற்சங்கத் தலைவர்களின் வறட்டுக் கௌரவத்துக்காச் செய்யப்படுகின்றதா?

இவ்வளவு காலம் தான் அமைச்சர், ஆளும்கட்சி என்று அடம் பிடித்தீர்கள்? இப்பொழுது எந்த மகுடமும் இல்லை. தோட்டத் துரைமார் என்ற சாதாரண கங்காணிமார் கூட உங்களை மதிப்பதாகத் தெரியவில்லை.

உங்களுடைய வரட்டுப்பிடிவாதத்தையும். சுய நலத்தையும் விட்டு அனைத்துத் தொழிற்சங்கங்களினதும் அபிப்பிராயத்துடன், புரட்சிகரமான எண்ணம் கொண்ட தொழிற்சங்கங்களை பேச்சு மேசைக்கு அழைத்து உருப்படியான ஒரு ஒப்பந்தத்தின் மூலம் ஏதாவது நன்மை ஏற்படுத்துங்கள் அல்லது மற்றவர்களுக்கு இடம் கொடுத்து ஒதுங்கிவிடுங்கள்.



## சொல்லாதே இது இரகசியம்!

இரத்தினக்கல் விளையும் பூமியில் தனிக்காட்டு ராஜாவாக இருக்கும் அந்த அரசியல் வாதிக்கு எப்போதுமே மலையக இளைஞர்கள் மீது – அதாவது தாய்க்குலம் மீது – அதீத அன்பாம்.

அண்மையில் நடைபெற்ற மலையக இளைஞர், யுவதிகளுக்கான நேர்முகப் பரீட்சையின் போதும் இவர்தனது கைவரிசையைக் காட்ட முயன்றாராம்.

வழமையாகவே தனக்கு ஆள்பிடித்து வரும் அந்த நங்கையிடம் ''நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் வந்திருக்கு. கடிதம் வந்தவர்களை எல்லாம் என்னை வந்து பார்க்கச் சொல்'' என்றாராம்.

அம்மணியும் சில தோட்டங்களுக்குப் போய் ஐயாவின் கட்டளையை அவிழ்த்து விட்டாராம்.

அம்மணியின் ஆலோசனைப்படி ஒரு பைல் கட்டுடன் அரசியல்வாதியின் அலுவலகத்திற்கு வந்தாராம் ஒரு நங்கை.

உங்களை இங்கே யார் வரச் சொன்னது என எரிந்து விழுந்தாராம் அரசியல்வாதி.

அடப்பாவி மனுசா, ஒன்னோட ஆள் வந்து தானே நேர்முகப்பரீட்சைக்குப் போகும் முன் வந்து பார்க்கும்படி சொன்னார் என்றாராம் அந்த நங்கை.

நீங்களா நேர்முகப்பரீட்சைக்குப் போகின்றீர்கள் என்று கேட்கவே, அந்த நங்கை சொன்னபதில் அரசியல்வாதியைத்தூக்கிப் போட்டு விட்டதாம்.

எப்படிச் சொன்னார் தெரியுமா?

''என்னுடைய பேத்திமார் (மகளின் பிள்ளைகள்) மூவர் பரீட்சைக்குப் போகின்றனர். உன்னுடைய அலுவலகத்துக்கு வரவே பயப்படுகின்றானர். உனது மன்மத லீலை ஊர் அறிந்தது. அதனால் தான் நான் வந்தேன்'' என்று ஒரு போடு போட்டாராம். இது எப்படி இருக்கு?



## டேஸ்ட்கடை தணிகாசலம்

சனி, ஞாயிறு தினங்களில் வெறிச் சோடிப்போய் இருக்கும் இரத்தினபுரி நகரம் ஒரே கலகலப்பாக இருந்தது. மலையக இளைஞர், யுவதிகள் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர்.

ஒகோ இப்பொழுது தோட்டப்புற படித்த இளைஞர், யுவதிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் நடக்கின்றன அல்லவா?

நிலைமை எப்படி இருக்கின்றது என்று நோட்டம் விடச் சென்றார் தணிகாசலம் அண்ணன்.

அப்போது தான் நற்பணிமன்றத்தில் தொண்டர்களாகப் பணிபுரியும் இளைஞர்கள் தணி அண்ணனைக் கண்டுகொண்டனர்.

''வணக்கம் அண்ணே!'' என்று கோஷ்டி கானமாக மரியாதை செலுத்தினர்.

''வணக்கம், வணக்கம். எல்லோரும் நன்றாகச் செய்தீர்களா?''

இளைஞர்,யுவதிகளின் முகத்தில் நல்ல மகிழ்ச்சி காணப்பட்டது.''எல்லா விடயங்களும்நல்லபடியாக முடிந்தன. வழமை போல் அரசியல்வாதிகளுக்கும், தொழிற்சங்கவாதிகளுக்கும் இடமில்லாமல் போய்விட்டது!'' என்றாள் திலகா.

''என்ன திலகா படித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கும், தொழிற்சங்கவாதிகளுக்கும் என்ன தொடர்பு?''

''அண்ணே! வழமையாகவே மலையக இளைஞர், யுவதிகளுக்கான ஏதாவது ஒரு வேலை வாய்ப்பு அல்லது நேர்முகப்பரீட்சை என்றால் காங்கிரஸ் ஆபிசில் தான் ஒரே கூட்டமாக இருக்கும். பந்தக்காரர்களும், புரோக்கர்களும் கதாநாயகர்களாகிவிடுவார்கள். ஆனால், இந்த



முறை இவர்களெல்லாம் செல்லாக்காசாகி விட்டார்கள்'' என்றாள் திலகா.

''ஆமாங்க அண்ணே! இந்த முறை ஒரு நாய்க்குட்டி கூட அந்தப்பக்கம் போகவில்லை'' என்றான் நடராசன்

''எதுக்குத்தம்பி போகனும், அதுதான் வெள்ளம் வரும் முன் அணை போடுவது போல் இராமானுஜம் ஐயா தெட்டத் தெளிவாக அறிவித்துவிட்டாரே! எந்த அரிசியல் வாதியின் சிபார்சும் தேவை இல்லை என்று. முகவர்களும் நியமிக்கப்படவில்லை. எந்த விதமான பெயர் லிஸ்டுகளும் தயாரிக்கப் படவில்லை. தேவை, உங்களுடைய தகைமைச்சான்றிதழ்கள் மட்டுமே என்று அவர் அறிவித்துவிட்டாரே?''

''ஆமாங்க அண்ணே, இராமானுஜம் ஐயாவை எவரும் ஏமாற்றி விட முடியாது. இந்த ஏமாற்றுக்காரர்களைப் பற்றி நன்றாகவே அறிந்தவர். கடந்த காலங்களில் இடம் பெற்ற ஊழல்,மோசடிகள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதில் உறுதியாகவே இருக்கின்றார். அது தான் இந்த அரிசியல் வாதிகளுக்கு ஒரே எரிச்சலாக இருக்கின்றது.''

''உண்மை தான் தம்பி. அண்மையில் கூட யாரோ ஒரு தொழிற்சங்கவாதி ஏதோ அறிக்கை விட்டிருந்தாரே!''

''இப்ப யாருங்க அண்ணே இவுங்களோட அறிக்கைகளை எல்லாம் கணக்கு எடுக்கப் போறாங்க? ஜீ.சி.ஈ. உயர் தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்த அனைவருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப் பட்டுள்ளது. இந்தத் தகுதியுடையவர்கள் எவருக்காவது கடிதம் கிடைக்காவிட்டால், தாம் விண்ணப்பம் அனுப்பியதற்கான பதிவுத்தபால் ரசீதுகளுடன், விண்ணப்ப நகலைக்கொண்டு வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளதே!''

''உண்மை தான் தம்பி. பேப்பரில் விண்ணப்பம் கோரி விளம்பரம் செய்யப்பட்ட போது இந்த அரசியல்வாதிகள் 'இது எல்லாம் பம்மாத்து. நாங்கள் பெயர் லிஸ்ட் கொடுத்தால் தான் நடக்கும்' என்று கூறினார். இதைக் கேட்ட பலர் இந்தத் தொழிற்சங்கவாதிகளிடம் பெயர்களைப் பதிந்ததோடு விண்ணப்பம் அனுப்பாமல் விட்டுவிட்டனர்.''

''அண்ணே சரியாச் சொன்னீங்க. அப்ப கோட்டை விட்டவர்கள் இப்ப அரசியல் வாதியின் கழுத்தைப்பிடிக்கின்றனர்.அது தான் இந்தப் பேப்பர், அறிக்கை எல்லாம்.''

''அது தான் தம்பி உண்மை நிலை. இனி மேலும் நீங்கள் இந்த அரசியல்வாதிகளிடம் போய் அடிமையாக வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாருக்காவது கடிதங்கள் கிடைக்கவில்லை என்றால் உடனடியாக சமூக அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள். அவர்களுக்கு நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படும். ஆனால், ஒன்று சரியாக நேரத்தில் விண்ணப்பம் செய்தவர்களுக்கு மட்டுமே!'' என்று கூறி விடைபெற்றார் தணி அண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கை கலக்கும் ஊக்கமருந்து சர்ச்சைகள்

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்ற வீர, வீராங்கனைகளில் சிலர் ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கி போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஒரு சிலர் ஊக்கமருந்து சோதனைக்கு முகம் கொடுத்தால், அது தொடர்பான விசாரணைகளுக்கு உள்ளாக வேண்டிவரும் என்பதால் தாமாகவே விலகிக்கொண்டனர். இது தவிர, போட்டிகளில் வென்று பதக்கமும் பெற்ற நிலையில் ஊக்க மருந்து உபயோகித்தனர் என நிரூபணமாகவே சிலரது பதக்கமும் பறிமுதல் செய்யப்பட்டது. அவ்வாறு இம்முறை ஒலிம்பிக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட ஒரு சிலர் பற்றிய தகவல்கள்.

## இந்தியாவின் பிரதிமா குமாரி



இந்திய விளையாட்டு அரங்கை மீண்டும் ஒருமுறை ஊக்கமருந்து சர்ச்சை உலுக்கியுள்ளது. ஏதென்ஸ் ஒலிம்பிக் குழுவில் இடம் பெற்றிருந்த பளுதூக்குதல் வீராங்கனை பிரதிமா குமாரி ஊக்க மருந்து உட்கொண்டது சோதனையிலிருந்து தெரியவந்தது.

இது ராத்தோரால் எழுச்சி கண்ட இந்திய ஒலிம்பிக் பயணத்திற்கு மிகப்பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கடந்த 18 ஆம் திகதி பெண்களுக்கான பளுதூக்குதல் போட்டி நடந்தது. இதில்63 கிலோ எடைப் பிரிவில் இந்தியா சார்பில் மல்லேஸ்வரி, பிரதிமா குமாரி ஆகியோர் பங்கேற்க இருந்தனர். முதலில் பங்கேற்ற மல்லேஸ்வரி முதுகுப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதியிலேயே வெளியேறினார். இதற்கிடையே போட்டியில் பங்கேற்றவர்களின் பட்டியலில் 28 வயதான பிரதிமா குமாரியின் பெயரைக் காணமுடியவில்லை. இவருக்கும் முதுகில் காயம் ஏற்பட்டதால் போட்டியிலிருந்து விலகி விட்டதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால், இந்த விடயத்தை ஏன் கடைசி வரைக ரகசியமாக வைத்திருந்தார்கள்? என்ற சந்தேகம் அனைவருக்கும் எழுந்தது.

இது தொடர்பான உண்மை விவகாரம் அடுத்த இரு நாட்களில் வெளியானது. பிரதிமா குமாரி ஊக்க மருந்து சோதனையில் முன்னதாகவே சிக்கியுள்ளார். இவருக்கு தடை விதிக்கப்பட்டதாலேயே போட்டியில் பங்கேற்க இயலவில்லை. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாக, கடந்த ஜுலை 30 இல் இருந்தே ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சோதனையில் பிரதிமா குமாரி தடைசெய்யப்பட்ட மருந்துப் பொருளை உட்கொண்டது கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து இவருடன்சேர்ந்து மொராக்கோவின் வாபா அமோரி, மால்டோவின் விக்டர் சில்சியான், துருக்கியின் சுலே சுபர்ஸ், ஹங்கேரியின் ஜோல்டன் கெக்ஸ்கஸ் ஆகிய 5 பேருக்கும் சர்வதேச பளுதூக்கும் கூட்டமைப்பு தடைவிதித்துள்ளது.

ஏற்கனவே 48 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற மியான்மரின் நன் அய்கைன் ஊக்கமருந்து பயன்படுத்தியதால் தடை விதிக்கப்படடிருந்தார். இதன் விளைவாக இவரது நான்காவது இடம் இந்திய வீராங்கனை குஞ்சராணிக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. போதைமருந்துக்கு எதிரான இந்த நடவடிக்கையை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் ஜாக்ஸ் ரோச் வரவேற்றுள்ளார்.

தற்போது இந்திய வீர, வீராங்கனைகள் அவ்வப்போது ஊக்கமருந்துகளைப் பயன்படுத்தி நாட்டிற்கு அவமானத்தைத் தேடி தருகின்றனர். 1999இல் நடந்த ஆசிய பளுதூக்கும் 'சாம்பியன்ஷிப்' போட்டியில் குஞ்சராணி ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினார். அதையடுத்து இவருக்கு 6 மாதம் தடைவிதிக்கப்பட்டது. 2002 இல் நடந்த 'காமன் வெல்த்' போட்டியில் சதீஷா ராய் சோதனையில் சிக்க அவருக்கு அப்போட்டியில் கிடைத்த பதக்கம் பறிக்கப்பட்டது. இதே போல் கடந்த ஏப்ரலில் கசகஸ்தானில் நடந்த ஆசிய 'சாம்பியன் ஷிப்' போட்டியில் வீராங்கனை சுனைனா சிக்க அவரிடமிருந்து இரண்டு வெண்கலப் பதக்கங்களும் பறிக்கப்பட்டன.

இவர்கள் வரிசையில் இப்போது பிரதிமா குமாரியும் சேர்ந்துள்ளார். இவர் 2002இல் நடந்த 'காமன் வெல்த்' விளையாட்டுப் போட்டியில் 2 தங்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், இவரது ஊக்க மருந்து தொடர்பாக இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் சுரேஷ் கல்மாடி உட்பட முக்கிய அதிகாரிகள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

தற்போது பிரதிமா குமாரி ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கியது தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளது. இவர் 'டெஸ்டோஸ்டிரோன்' என்ற தடை செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தியதாகவே ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான இந்தியக் குழுவின் துணைத் தலைவர் ஹரிஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவின் இரினா



ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய ரஷ்யாவின் இரினா கோர்சனன்கோவின் தங்கம் பறிக்கப்பட்டது.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கடந்த 18 ஆம் திகதி நடந்த குண்டெறிதல் போட்டியில் ரஷ்யாவின் இரினா தங்கம் வென்றார்.

இறுதிப்போட்டியில் இவர், போட்டியிட்ட மற்ற வீராங்கனைகளை விட 2 மீற்றர் தூரம் அதிகம் எறிந்து அபார வெற்றி பெற்றார். இரினா ஊக்கமருந்து பயன்படுத்தினார் என இரண்டு நாட்களுக்குப் பின்னர் சர்வதேச ஒலிம்பிக் சங்கம் கூறியது. இது உறுதி செய்யப்படவே, கடந்த 22ஆம் திகதி இவரது தங்கம் பறிக்கப்பட்டது. முன்னதாக 1999 உலக 'சாம்பியன்ஷிப்' போட்டியிலும் இவர் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கி போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்லோவாகியாவின் ஹபோரக்

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியின் தடகளப் போட்டிகள் நாளை முதல் ஆரம்பமாகின்றன. இந்நிலையில், ஸ்லோவாகியா நாட்டைச் சேர்ந்த குண்டு எறியும் வீரர் ஹபோராக் போதை மருந்துச் சோதனையில் சிக்கியுள்ளார். மாட்ரிட்டில் சமீபத்தில் நடந்த சர்வதேசப் போட்டியொன்றில் பங்கேற்ற அவரிடம் நடத்தப்பட்ட மருத்துவச் சோதனையில், அவர் போதைமருந்து பயன்படுத்தியது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் ஒலிம்பிக் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

## கிரீஸின் லியானிடாஸ்

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் ஆடவர் பளுதூக்குதலில் வெண்கலப் பதக்கம் வென்ற கிரீஸ் வீரர் லியானிடாஸ் சாம் பெய்ன்ஸின் பதக்கம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியினால் பறிமுதல் செய்யப்பட்டது.

போட்டியின் போது ஊக்கமருந்து பாவித்தார் என்று குற்றச்சாட்டு எழ, அது தொடர்பான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார் லியோனிடாஸ். பரிசோதனையின் முடிவில் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகவே அவரது பதக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

## கிரீஸின் கோஸ்டாடினோஸ், எக்டேரினி தானோ



கிரீஸ் நாட்டின் பிரபல தடகள வீரரான கோஸ்டாடினோஸ் கென்டிரிஸ், வீராங்கனையான எக்டேரினி தானோ ஆகிய இருவரும் ஒலிம்பிக் போட்டியிலிருந்து அவர்களாகவே விலகிக் கொண்டனர்.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகுவதற்கு முன்னதாகவீரர்களுக்கானஊக்கமருந்துப்பரிசோதனை நடத்தப்பட்டது. அப்பரிசோதனைக்கு இவ்விருவரும் தம்மை உட்படுத்திக்கொள்ளவில்லை.

பரிசோதனைக்கு உட்படாததால் அது தொடர்பான விசாரணைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதால் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இவர்கள் ஒதுங்கிக் கொண்டுள்ளனர்.

எனினும், இதுகுறித்து கிரேக்க தடகள வீரர் கென்டிரிஸ் கூறுகையில்—

''கடந்த நான்கு வருடங்களுள் 30 ஊக்க மருந்துப் பரிசோதனைகளில் நான் தேறியுள்ளேன். ஆனால், இப்போது கிரேக்க தடகளச் சங்கம் என்மீது குற்றம் சுமத்துகிறது. விளையாட்டு சம்மேளனங்களும் என்னைச் சாடுகின்றன'' — என்றார்.

மேலும், இவ்விருவரும் தாம் எந்தவிதமான ஊக்கமருந்தையும் பயன்படுத்தவில்லை என்று தம் மீதான குற்றச்சாட்டையும் மறுத்துள்ளனர். எனினும், பரிசோதனைக்கு உட்படுத்துவதிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டதால் இரண்டு வருடங்களுக்கு இவர்கள் மீது தடைவிதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒலிம்பிக்கிலிருந்து விலகிக் கொண்ட இவர்களில் கென்டிரிஸ் கடந்த 2000 சிட்னி ஒலிம்பிக்கில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கமும், தானோ 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளியும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுச் செய்திகள்! பிராங்

## ஹங்கேரியின் ராபர்ட் பஜிசெஷி



## டாக்டர் எம்.ஜீ.ஆர் டீம்ண்ட் பல்கலைக் கழகம் இலங்கையில் கிளை விரித்துள்ளது.

இந்தியாவில் 32 கிளைகளுடன் இயங்கும் டீம்ண்ட் பல்கலைக்கழகம் முதன் முறையாக இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பல்கலைக் கழகம் இலங்கை அரசாங்கத்தினாலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்புகளை இலங்கையில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகம் குறித்தும் அதன் விபரங்கள் குறித்தும் அறிந்துகொள்ளும் முகமாக, சுடர் ஒளி பத்திரிகைக்கு பல்கலைக்கழக முகாமையாளர் கே.அகிலன் அவர்களையும், நிர்வாகப் பொறுப்பாளர் கே.லோகநாதன் அவர்களையும் செவ்வி கண்ட விடயங்களை இங்கு தொகுப்பாகத் தருகிறோம்.

இந்தியாவில் 32கிளை நிறுவனங்களுடன் செயற்படுகின்றது. இலங்கையில் இது கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளது. இது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும்.

இந்தியாவிலே இது சிறப்பாக வெற்றியுடன் செயற்படுகிறது. இலங்கையில் இதனை நிறுவுவதன் நோக்கம் பட்டப்படிப்புக்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பதாகும். இலங்கைக்கு சேவை செய்வது மற்றொரு நோக்கமாகும். இலங்கையிலே படித்துப் பட்டம்பெற சிறந்த வழி முறையாக இது காணப்படுகிறது.

புலமைப்பரிசில் திட்டங்கள் இங்கும் உண்டு. திறமையுள்ள மாணவர்களுக்கு இது வழங்கப்படும். இப்பட்டப்படிப்பானது தொழில் உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது. இளமானிப்பட்டத்துக்கு மேலாக முது நிலைப்பட்டங்களுக்குமான வாய்ப்புகளும், வசதிகளும் இங்கு உண்டு.

இங்கு பட்டப் படிப்பினைத் தொடர்வதற்கான அடிப்படைத் தகைமையாக க.பொ.த (உ.த) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருப்பது போதுமானது. நடைபெறும் பட்டப் படிப்பானது முழு நேரப் பட்டப்படிப்பாக மூன்று வருடப் பாட நெறியினைக் கொண்டது.

தற்போது இலங்கையில் பின்வரும் பாட நெறிகளைத் தொடர முடியும்.

1)BACHELOR OF COMPUTER APPLICATION(BCA)
(PROFESSIONAL DEGREE)
2)BACHELOR OF BUSINESS MANAGEMENT (BBM)
3) MASTER OF BUSINESS ADMINISTRATION (MBA)

இவைகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளன. இவை தவிர

INTERNATIONAL LAW(LLB)
PSYCHOLOGY (BSC)
BACHELOR OF ENGINERING (BE)

போன்ற பாடநெறிகள் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

வழங்கப்படும் பட்டமானது இளமானிப்பட்டம் ஆகும். இது இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும் தரமுடைய பட்டச் சான்றிதழாகும்.

கற்கை நிலையங்களாக கொழும்பில் மாத்திரமே விரிவுரைகள் நடைபெறும். நாடளாவிய ரீதியில் கற்கை நிலையங்கள் திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. போட்டி நிறைந்த கல்வி உலகில் எத்தனை போட்டி நிறுவனங்கள் வந்தாலும், காலத்துக்கேற்ற புதிய புதிய பாடத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டு மாணவர்களை வெளியேற்றுவதற்கு நாம் தயாராகியிருக்கின்றோம்.

திருப்திகரமான விரிவுரைகளும், திருப்திகரமான செயன்முறைப் பயிற்சிகளும் இடம்பெறுவதுடன், மாணவர்கள் மட்டுப்பாடற்ற சுய செயன்முறைப் பயிற்சிகளில் ஈடுபடவும் தாராளமாக சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஒரு வகுப்புக்கு முப்பது மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளதனால் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஆங்கிலத்தில் புலமை குறைந்த மாணவர்களுக்கென விஷேட கவனம் செலுத்தப்பட்டு ஆங்கில பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். விரிவுரையாளர்கள் யாவரும் இந்தியாவின் எம்.ஜீ.ஆர் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள். இலங்கையிலே தங்கியிருந்து மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்தவுள்ளனர்.

விரிவுரை மண்டபங்கள் முற்றிலும் குளிரூட்டப்பட்டு நவீன வசதிகளுடன் சௌகரியமாக அமைக்கப்பட்ட மண்டபங்களிலேயே விரிவுரைகள் நடைபெறும்.

ஆரம்பிக்கப்படவுள்ள கற்கைநெறிகள் புரட்டாதி மாதத்தின் நடுப்பகுதியில் கோலாகலமான ஆரம்ப வைபவத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும்
அகிலன்
தொ.பே 0714840172, +94 1125650 91/2
தொலைநகல் 2 576613

ஆகிய எண்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## விமானச் சிப்பந்திகளுக்கு எக்ஸ்போ பயிற்சிக் கல்லூரி

இலங்கையில் உள்நாட்டு விமான சேவைகளை வழங்கிவரும் ''எக்ஸ்போ எயர்'' விமான சிப்பந்திகளுக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்றை முதன்முதலாக ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக எக்ஸ்போ எயர் பணிப்பாளர் சபீர் மரைக்கார் கூறுகையில்:—

பொதுவாக எல்லா விமானக் கம்பனிகளும் தங்களின் விமானச் சிப்பந்திகளுக்கு பயிற்சிகளை வழங்க பயிற்சிக் கல்லூரிகளைக் கொண்டுள்ளன. ஆனால், இந்தப் பயிற்சிக் கல்லூரிதான் விமானச் சிப்பந்திகளாகச் சேர விரும்புகின்ற இளைஞர்களுக்குப் பயிற்சியினை வழங்கும் இலங்கையின் முதல் கல்லூரியாகும்.

இதனால், ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இது பயனுடையதாக அமையும். விமானத்தில் கடமைபுரிகின்ற ஏனைய ஊழியர்களை விட விமானச் சிப்பந்திகள் (Cabin Crew) இரண்டு முக்கிய பொறுப்புக்களைக் கொண்டு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர். பிரயாணிகள் ஏனைய விமான ஊழியர்கள் போன்றோரின் பாதுகாப்பின் மீது அக்கறை செலுத்துவதோடு அவசரம் ஏற்படும் போது அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு இடம் மாற்றுவதும் இவர்களது பொறுப்பாகும். இது ஒரு கடினமான வேலையாகும். இதற்குப் பொருத்தமான பயிற்சி அவசியம்.

இந்தப் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்படும் பயிற்சி விமானக் கோட்பாடு, விமானப் பாதுகாப்பு, அவசர நடவடிக்கைகள், விமான முதலுதவி, சிப்பந்திகளுக்கான மனிதவள முகாமைத்துவம், மீட்பு நடவடிக்கைகள், பிரயாணிகளை நிர்வகித்தல் போன்ற விடயங்களை கொண்டிருக்கும். பயிற்சிக் காலம் 7 வாரங்களாகும். பயிற்சி முடிவில் இலங்கை உள்ளூர் விமான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

இலங்கை உள்ளூர் விமான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டு கொழும்பு—இரத்மலானை விமானநிலையத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரி இம் மாத முடிவில் திறக்கப்படும்.

இலங்கையில் முதல்முதலில் ஆரம்பிக்கப்பட்ட உள்ளூர் விமானசேவைக் கம்பனியான ''எக்ஸ்போ எயார்''2002 ஜூன் மாதம் முதல் யாழ்ப்பாணத்திற்கு தினமும் இரண்டு விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்தி வருகின்றது. இது 2ஆவது சர்வதேச சரக்கு விமான சேவையை 1997இல் ஆரம்பித்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்பொழுது தினமும் உள்ளூர் விமானப் பயணிகள் அதிகரித்துக்கொண்டு போகின்றனர். அவர்களின் தேவையை நிறைவேற்றவும் அவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பினை வழங்கவும் எக்ஸ்போ எயார் முன்வந்துள்ளது.

இது நிகழ்த்தி வரும் சாதனைகள், வெற்றிகள் வரிசையில் விமானச் சிப்பந்திகளுக்கான இப்பயிற்சி நிலையம் மற்றுமொரு சாதனையை நிலைநாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

விமானத்தில் நெடுங்காலமாகச் சேவை புரிந்த நீண்ட அனுபமும் நல்ல திறமையும் வாய்ந்த குழாம் ஒன்று இப்பயிற்சி நிலையத்திற்கு பொறுப்பாக இருக்கும். இதில் இணையும் இளைஞர்கள் நன்கு பயிற்றப்படுவர். இதற்கு எக்ஸ்போ எயார் உத்தரவாதம் கொடுக்கின்றது என அவர் மேலும் தெறிவித்தார்.


Be an ambassador in the skies...

Cabin Crew Training Academy

The Training Programme includes:

- Aviation Introduction
- Aircraft Specific
- Safety & Emergency Procedures
- Live Fire Fighting Drill
- Aviation Medicine & First Aid
- Aviation Security
- Human Factors (CRM- Crew Resource Management)
- In-Flight Menus and Meal Services.





Cabin Crew are unique among airline personnel because they essentially have two different responsibilities on board the aircraft. The most important but least visible, responsibility of cabin crew is that which concerns the safety of passengers, the crew and the aircraft cabin. Any In-flight emergency will require them to immediately transform themselves from amicable ambassadors into assertive leaders responsible for the safety of every person on board the aircraft.

On successful completion of the Training Programme and Examinations, each participant will receive a Competency Certificate approved by the CIVIL AVIATION AUTHORITY of Sri Lanka.

ExpoAir
your friend in the skies...

For enrolment & further details:

Tel: 2632889, 2632890
Hotline: Yohan 0772262589
Seraj 0772228821

EXPO AVIATION (PVT) LTD,
Colombo Airport, Ratmalana
Fax: 2625699
Email: training@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில் நுட்பம், கல்வி சிறப்பிதழ்

## சிமோலின்ஸ்க் அரச மருத்துவ அக்கடமி

ரஷ்யாவில் முன்னணியில் திகழ்கின்ற பிரசித்தி பெற்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரச மருத்துவ அக்கடமி 'சிமலின்ஸ்' ஆகும். இந்த அக்கடமி மருத்துவத்துறைக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டதாகும்.

இங்கு பொது மருத்துவம், பல் மருத்துவம், குழந்தை மருத்துவம், மருந்தாளர், தாதியர் பயிற்சி நெறி என்பன போதிக்கப்படுகின்றன. தவிர சிறப்பு பட்டப்பின் படிப்பு கற்கையும் நடைபெறுகிறது.

திறமையின் அடிப்படையில் ரஷ்ய மாணவர்களை உள்வாங்குகின்ற அதே நேரத்தில், வெளிநாட்டு மாணவர்கள் கட்டணமுறையில் கற்பதற்கும் குறிப்பிட்ட அளவில் அனுமதிக்கிறது. இங்கு இலங்கை, இந்தியா, நேபாளம், அரபு, ஆபிரிக்கா போன்ற பல்வேறு நாடுகளின் மாணவர்களும் கற்கின்றனர்.

இது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமையால் எந்தவொரு நாட்டிலும் சென்று மேற்படிப்பை மேற்கொள்ளவோ, பணிபுரியவோ முடியும். தவிர இந்த மருத்துவ அக்கடமியானது




ரஷ்யாவில் வெளிநாட்டு மாணவர்கள் கற்கும் பல்கலைக்கழகங்களை விட முன்னணியில் உள்ளது. இதனை ரஷ்ய உயர்கல்வி இணையத்தளத்தில் பார்வையிடலாம். http://www. useic. rulrussian-education/rating/medical.htm

இங்கு ரஷ்ய, ஆங்கில மொழிகளில் மருத்துவம் போதிக்கப்படுகிறது. இந்திய, இலங்கை மாணவர்களுக்கு விசேடமாக ஆங்கிலத்தில் போதிக்கப்படுகிறது. இதுவரை 8 அணிகளைச்




சேர்ந்த சுமார் 120 இலங்கை மாணவர்கள் தமது கல்வியைப் பூர்த்தி செய்து இலங்கையிலும் பல்வேறு நாடுகளிலும் பணிபுரிகின்றனர்.

சிமோலின்ஸ்க் நட்புறவு மருத்துவக் கழகம் இலங்கை மாணவர்களின் மருத்துவ அக்கடமி அனுமதி நடைமுறைகள் பற்றிய தகவல்களை அறியவும், அக்கடமியில் மருத்துவத்துறையில் கல்வி கற்பதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளவும், ரஷ்ய விசா பெறுவதற்கான வழிகாட்டலையும் மேற்கொள்கின்றது.

ரஷ்யாவில் மற்றைய பல்கலைக்கழகங்களின் முகவர்கள் மூலமாக வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் மேலதிகமாகப் பணத்தை இழக்க நேரிடுகிறது.

இங்கு இம்மருத்துவக் கழகத்தில் கல்வி பயிலும் சிரேஷ்ட மாணவர்கள் மூலமாக புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதனால் இது தவிர்க்கப்படுவதுடன் சரியான, உண்மையான, தெளிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதற்காக அக்கடமி சிரேஷ்ட மாணவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கி வருகின்றது. ஆனால், ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்டளவு இலங்கை மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படுகின்றது. மருத்துவ அக்கடமியில் இம் மருத்துவ கழகத்தினூடாகமட்டுமேஇலங்கை மாணவர்கள் அனுமதியை பெற்றுக் கொள்ளலாம்.

கல்வி, விடுதி மற்றும் அன்றாடச் செலவுகளுடன் சராசரியாக ஒரு வருடத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபாவே செலவாகின்றது. கல்விக்கான கட்டணத்தையும் இரண்டு தவணை முறையில் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் இரண்டுமாத விடுமுறைகாலத்தில் மாணவர்கள் விசாவை பெறுவதன் மூலம் லண்டன், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வரக்கூடியதாகவுள்ளது.

இலங்கை மாணவர்களுக்கென விடுதியில் தனியான தளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களின் பாதுகாப்பு, குறிப்பாக பெண் மாணவிகளின், பிரத்தியேகம் பேணப்படும். எமது கலாசாரம் பேணல் என்பன உறுதிப்படுத்தப்படுகின்றன. இந்த விடயத்தில் மருத்துவக் கழகம் மிக கண்காணிப்புடன் உள்ளது.

இவ் அரிய வாய்ப்பு சிறுபான்மை மாணவர்களுக்குஓர் வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.


MEDICINE IN RUSSIA

SMOLENSK STATE MEDICAL ACADEMY

DOCTOR OF MEDICINE (MD)

IN ENGLISH (6 years)

Annually 1800 US $

*Internationally Recognized, Including British, Sri Lanka Medical Council and W.H.O*

A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கு குறைந்த கட்டணத்தில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

Admission, மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர் மூலம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

2004/2005 கல்வியாண்டு September இல் ஆரம்பம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

T.SAYANTHAN

SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE

0777 316273

XB 2/2/4, Housing Scheme Edmondon Road, KIRULAPONA,

"LUXMY COURT" NO.33, Rudra Mawatha WELLAWATHA

011-4512059 (Between 10am -7pm)

e.mail – smolenskmedical@hotmail.com

தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு

குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி



GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

(A unit of Sovereign Infotech India (Pvt) Ltd.)

INTERNATIONALY RECOGNIZED CERTIFICATES

Professional Computer Courses

ADVANCED MULTIMEDIA COURSES

KIDS COURSES

recognitions

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION INDIA

IMIS Institute for the Management of Information Systems

ICM Institute of Commercial Management

OUR STRENGTH

CORPORATE HEAD OFFICE

a: 116, Sea Street, Negombo
p: 031 2235955, 2238645
e: gvillage@sltnet.lk

REGIONAL OFFICE

a: 19/2, Farm Road, Mattakkuliya,
p: 011 4615202

FRANCHISEE CENTRES

a: 365, Trinco Road, Batticaloa
p: 065 2225899

a: 119, Point Pedro Road, Nallur, Jaffna
p: 0777 279034

a: 197 C2, Court Road, Trincomalee
p: 026 2223668

a: 37 Vairavarkovil Road, Vairavapuliyankulam, Vavuniya
p: 024 2220143

a: Main Street, Mannar
p: 023 2232383

a: 6 1/2, Hekitta Road, Wattala
p: 011 2945770

a: Boundary Road, Chenkaladi, Batticaloa
p: 065 2240834




very soon we are in KOTAHENA

http://www.globalvillage-lanka.com


## சர்வதேச அங்கீகாரம் பெற்ற கேம்பிரிஜ்சயர் பல்கலைக்கழகம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமெரிக்க கேம்பிரிஜ்சயர் பல்கலைக் கழகத்தினால் (Cambridge shire University) வழங்கப்பட்டு வரும் BBA (Bachelor of Business administration) பட்டப்படிப்பினை இலங்கையர்களும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை "எய்ம்ஸ்" (AIMS) நிறுவனம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இந் நிறுவனத்தின் தலைவர் கீர்த்சிறி மஞ்சநாயக்க கூறுகையில்: கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், உயர்தரப்பரீட்சை எழுதியவர்கள் CIMA (இறுதியாண்டு) ACCA, CIMA, SCIM, AD.Dip., AES, ABE(UK) ஆகிய தொழில்சார் பாடநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்கள் போன்றோர் BBA பாடநெறியைத் தொடரலாம்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் எழுதிய மாணவர்கள் Certificate, (தகுதிகாண் பரீட்சை) Diploma, Advance Diploma ஆகிய பாடநெறிகளை முடித்த பின்பும், உயர்தரம் எழுதிய மாணவர்கள் Diploma, Adivanced Diploma ஆகியவற்றை முடித்த பின்பும் தொழில்சார் பாடநெறியை முடித்த மாணவர்கள் நேரடியாகவும் BBA பாடநெறிக்குச் செல்ல முடியும்.

சாதாரணதரம் எழுதிய மாணவர்கள் 2 1/2 வருடங்களிலும், உயர்தரம் எழுதியவர்கள் 2 வருடங்களிலும் தொழில்சார் பாடநெறியை முடித்த மாணவர்கள் 7 மாதங்களிலும் இந்தப் பாடநெறியைப் பூர்த்தி செய்யலாம்.

BBA இறுதியாண்டு பாடநெறி ஏழு பிரதான பாடங்களைக் கொண்டிருக்கும் Small Business and Entreprenvership, Business ethics, Business Re-engineering, Business Serategy, Comparative corporate Environment, Internation Relationship, Project Management ஆகியனவே இந்த ஏழு பாடங்கள்.

இவை அனைத்தும் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்படும். ஒவ்வொரு பாடமும் ஒவ்வொரு மாதத்தில் கற்பித்து முடிக்கப்பட்டு 7 பாடங்களும் ஏழு மாதங்களில் முடிவடைந்து விடும். திறமையான உள்ளூர் ஆசிரியர்களினாலேயே விரிவுரைகள் நடத்தப்படும்.

ஒவ்வொரு மாதத்தின் வார இறுதி நாட்களில் மட்டுமே வகுப்புகள் இடம்பெறும். புள்ளிகளைப் பெற பரீட்சைகள் ஏதும் இடம்பெறாது.

பாடங்களுக்கு முறையாகச் சமுகம் கொடுத்தல், வீட்டு வேலைகள் (Home Works), வேலைத்திட்டங்கள் (Projects) போன்றவைகள் மூலமே புள்ளிகள் பெறப்படும்.

BBA பாடநெறியினை AIMS நிறுவனத்தில் பூர்த்திசெய்த மாணவர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள கேம்பிரிஞ்சயர் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு தமது பட்டங்களை பெற விரும்பின் AIMS நிறுவனம் அதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்கும்.


எதிர்காலத்துக்கோர் திறவுகோல்

உங்கள் தொழில்சார் துறைகேற்ற உலக பிரசித்தி பெற்ற தகைமை



BBA Degree

Bachelor of Business & Administration



Cambridgeshire University (USA) CSU

Entry Qualifications

- CIMA, ACCA, CIM (finalists) SLIM,
- Diploma in Business, Marketing, Commerce or Accounts.
- Higher National Diploma in a related subject
- Advanced Diploma - AES (UK)
- Advanced Diploma - ABE (UK)
- Advanced Diploma - IPMA (UK)
- இதற்கு நிகரான வேறு பல தகைமைகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

BBA கடைசி வருடத்தில் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் பட்டம் ஒன்றினைப் பெறுங்கள்

* * * * *

- அமெரிக்கா, பிரித்தானியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களிலும் மாணவர்கள் தமது பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும்.
- வகுப்புக்கள் வார இறுதியில் மாத்திரமே நடாத்தப்படும்.

BBA Qualifies you for MBA

முதல் 25 மாணவர்களுக்கு விசேட சலுகையுடன் கூடிய கட்டணம்

For further information & inquiries:

AIMS

AIMS Educational Services (Pvt) Ltd.

155, Dharmapala Mawatha, Colombo 07, Sri Lanka.

Tel: +94 (0) 11-2303625, 4710220 Fax: +94 (0) 11-4712755


E-mail: csu@aims.lk Website : www.csuedu.org

Blue Print Associates




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படம் சொல்லும் பழமொழி




அன்பான தம்பி, தங்கைகளே, மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன.

அவை என்ன பழமொழி என்று கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:

*'படங்கள் சொல்லும் பழமொழி', சுடர் ஒளி வாரமலர்,*
*85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## விஞ்ஞான கண்டுபிடிப்பு

1. புவியீர்ப்பு விசை :— நியூட்டன்
2. கூர்ப்புக் கொள்கை :— சார்ள்ஸ்டாவின்
3. பரம்பரை இயல்பு :— கிரகர் மெண்டல்
4. ஆவர்த்தன அட்டவணை :— மெண்டலீவ்
5. குருதிச் கூட்டங்களை வகுத்தவர் :— இலான்ஸ்ரைனர்
6. அணுக்கொள்கை :— தாற்றன்
7. குருதிச் சுற்றோட்டம் :— வில்லியம் ஹார்வே
8. இலத்திரன் :— தோம்சன்
9. புரோத்தன் :— இரதபோட்
10. நியூத்திரன் :— சட்விக்

*பெ.யூலியற் சாளினி*
*அந்தோனியார் கோவில்*
*கடற்கரை, பள்ளிக்குடா.*

## பொது அறிவு விடயம்

1. மெதடிஸ் திருச்சபையை தொடக்கியவர் யார்? ஜோன் வெஸ்லி
2. காவற்படை (பொலிஸ்)யை முதலில் அமைத்தவர் யார்? றொபேட் பீல்.
3. சுருக்கெழுத்து முறையை வகுத்தவர் யார்? சேர் ஐசாக் பிற்மன்
4. ஹோமியோபதி வைத்தியமுறையை தொடக்கியவர் யார்? டொக்டர் ஹனேமன்
5. சுயஸ் கால் வாயை வெட்டுவித்த கட்டடப் பேரசர் யார்? போடின்ட்டி லெசெபஸ்
6. ஆங்கிலக் கால்வாயை முதன் முதலாக நீந்திக் கடந்தவர் யார்? கப்டன் மத்கிறா வெப்

*கோ.றிறோ, பூவரசங்குளம்.*

## கணிதக் கேள்வியும் விடையும்

1. முக்கோணியின் அகக் கோணங்கள் மூன்றினதும் கூட்டுத்தொகை எவ்வளவு பாகை ஆகும்?
2. பக்கங்களை நீட்டுவதால் உண்டாகும் புறக்கோணங்கள் மூன்றினதும் கூட்டுத்தொகை எவ்வளவு பாகை ஆகும்?
3. ஒழுங்கான ஓர் பல்கோணி ஒன்றின் புறக்கோணம் ஒன்றின் பருமனை எச்சமன் பாட்டில் கணிக்கலாம்?
4. அறுகோணி ஒன்றின் அகக் கோணங்களின் கூட்டுத் தொகை எவ்வளவு பாகை ஆகும்?
5. சமபக்க முக்கோணி ஒன்றின் அகக் கோணம் ஒன்றின் பெறுமானம் எவ்வளவு பாகை ஆகும்?
6. முக்கோணி ஒன்றிற்கு பக்கங்கள், கோணங்கள், உச்சிகள் எத்தனை உண்டு?

**விடைகள்**

| | |
|---|---|
| 1) $180^\circ$ ஆகும் | 5) $60^\circ$ ஆகும் |
| 2) $360^\circ$ ஆகும் | 6) பக்கங்கள் — 3 |
| 3) $360/n$ இச் சமன்பாட்டில் | கோணங்கள் — 3 |
| 4) $720^\circ$ ஆகும் | உச்சிகள் — 3 |

*சி.யோகராஜ்*
*தரம் 9*
*மு/குரவில் தமிழ் வித்தியாலயம்.*

## இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள்

| அணி வீரர்கள் | டெஸ்ட் | வயது |
|---|---|---|
| ஹசான் திலகரட்ண (தலைவர்) | 77 | 36 |
| மாவன் அத்தப்பத்து | 65 | 33 |
| சனத் ஜயசூரிய | 80 | 34 |
| குமார் சங்ககார | 30 | 25 |
| மஹேல ஜயவர்த்தன | 51 | 26 |
| திலான் சமரவீர | 11 | 27 |
| குமார் தர்மசேன | 28 | 32 |
| உப்புல் சந்தன | 07 | 31 |
| சமிந்தவாஸ் | 68 | 29 |
| முத்தையா முரளிதரன் | 82 | 31 |
| திலகரத்ன டில்சான் | 10 | 27 |
| டி. பெர்னாண்டோ | 00 | 24 |
| ரமேஷ் களுவிதாரண | 44 | 34 |
| மைக்கல் வெண்டோட் | 02 | 23 |

*பொ.ஜீவேன், தரம் 9B,*
*யா/கலைமகள் வித்தியாலயம்.*

## நாயின் நேர்மை

கோழிப்பண்ணையை ஒரு நாய் காவல் காத்து வந்தது. கோழிகளைத் திருட நரி வந்தது. அதைப் பார்த்த நாய் பலமாகக் குரைத்தது. நாய்க்கு ஒரு எலும்புத்துண்டைக்கொடுத்தது நரி. ஆனால், அந்த எலும்புத் துண்டை நாய் தொடவில்லை. நரியின் மீது பாய்ந்து அதன் காலை நன்றாகக் கடித்துவிட்டது. கடிபட்ட நரி, நாயைப் பார்த்து, "நன்றி கெட்டவனே! உனக்குத் தான் எலும்புத் துண்டு கொடுத்தேன். என்னை ஏன் கடித்தாய்?" என்றது.

"நரியே! நீ இங்கே நுழையும் போது நல்லவனா, கெட்டவனா என்பது எனக்குத் தெரியாததால் குரைத்தேன். ஆனால் நீ எனக்கு ஒரு எலும்புத்துண்டை லஞ்சமாக வீசியவுடன் நீ மோசமான திருடன் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால்தான் கடித்தேன்" என்றது நாய். இதைக் கேட்டதும் அந்த இடத்தை விட்டு நரி தலைதெறிக்க ஓடியது.




## சிறார்களின் கைவண்ணம்




*கே. ரஜீவன்*
*வவுனியா*



*பி.நித்தியா*
*யாழ்ப்பாணம்*



*அ.ஜெயரூபன்*
*2006 கலைப்பிரிவு*
*மு/புதுக்குடியிருப்பு ம.வித்.*



*எஸ்.விவேக்சன்*
*தரம் 5*
*தலவாக்கலை*

*வி.பவித்திரன்*
*தரம்4*
*புதுக்குடியிருப்பு*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

*பொ.பன்னீர்முள்ளியவளை.*

**கேள்வி :–** பித்தா! நான் அண்மையில் முதல்முதலில்கொழும்புக்குவந்தேன். அங்கே பெண்கள் இப்படி அரை குறையாகத் திரிகிறார்கள். பார்க்கக் கண்றாவியாக இருக்கிறது. எனக்கு அவர்களைப் பார்த்ததும் ஏதோ கெட்ட கெட்ட எண்ணமெல்லாம் வந்தது.... எங்களால் ஒரு சில நாட்கள் கூடப் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருக்க முடியவில்லையே..... நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?



**பதில் :–** பார்த்தீரா.... நாங்கள் படும் அவஸ்தையை. நீங்கள் என்னடாவென்றால் உங்களுக்கென்ன கொழும்பிலே ஜாலியாக இருக்கிறீர்கள் என்று தெனாவெட்டாகச் சொல்கிறீர்கள். ஆனால் நாங்கள் இங்கே எத்தனை பாவச் சோதனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு இப்போது புரிகிறதா?

*செ.அஞ்சலி, இணுவில்.*

**கேள்வி:** பித்தா! நீர் கடையிலே விற்கும் போத்தல் தண்ணீர் குடிப்பவரா அல்லது எல்லா தண்ணீரும் குடிப்பீரா?

**பதில்:** நான் எல்லாத் தண்ணீரும் குடிக்கும்ரகம். தினமும் நாற்பது–ஐம்பது ரூபா செலவு செய்து போத்தல் தண்ணீர் (MINARAL WATER) குடித்து நீண்ட நாள் சுகதேகியாக இருப்பதும் சரி – கண்ட தண்ணீரையும் குடித்து விட்டு நோய் ஏதும் வந்தால் சிகிச்சை செய்து கொள்வதும் சரி. என்ன அதில் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் கரைகிறது. இதில் ஆஸ்பத்திரிக்கு மொத்தமாகக் கரைகிறது.. மொத்தத்தில் இரண்டுமே கைக் காசுக்கு ஆப்புதானே!

*கே.நிமல்ஸன்,வெள்ளவத்தை.*

**கேள்வி:** பித்தா! எனக்கு பெண்களைக் கண்டால் மயக்கமாக வருகிறது இதற்கு என்ன செய்யலாம்?



**பதில்:** அப்படியே அந்தப் பெண்களின் தோளில் சாய்ந்து மெதுவாக அவர்களை கட்டிப் பிடித்து அணைத்தபடி கொஞ்சநேரம் இருந்தால் – மயக்கம் மாறிவிடும். ஆனால், கவனம் செருப்பு பதம் பார்த்து விடாமல் கவனமாகக் கையாளவும்.

*க.மதிவதனன், மல்லாவி.*

**கேள்வி:** பித்தா! யாழில் கிராமத்துக் கோவில்களில் திருவிழாக்களுக்கு பணம் செலவழித்து பஜனை, பிரசங்கம் என்பன நடத்த பலர் போட்டிபோடுகின்றனர். ஆனால், கேட்க ஆட்கள் வருகிறார்கள் இல்லை.. என்ன செய்யலாம்?

**பதில்:** இதோ மகாபாரதமும் – ராமாயணமும் எத்தனை திரைப்படங்களாக வந்துவிட்டன. தொலைக்காட்சித் தொடர்களாகவும் வந்துவிட்டன. இதனைவிட காலாதி காலமாக பலர் அக்குவேறு, ஆணி வேறாகப் பிரித்து எடுத்து பஜனைகளும், பிரசங்கங்களும் பண்ணித்தள்ளிவிட்டார்கள். மக்களுக்கும் கேட்டு, பார்த்து புளித்து போய்விட்டது. இந்த லட்சணத்தில் மீண்டும் பஜனை, பிரசங்கம் என்றார் எஸ்கேப் ஆகத்தானே செய்வார்கள்.

*பொ.ராதிகா, மீசாலை.*

**கேள்வி:–** தமிழர்களின் தார்மீகப் போராட்டத்துக்கு எப்போது முழுமையான வெற்றி கிட்டும்?

**பதில்:–** நாளைக்கும் கிடைக்கலாம், அடுத்த வருடமும் கிடைக்கலாம் அல்லது இன்னுமொரு பத்து வருடங்கள் தள்ளியும் கிடைக்கலாம். ஆனால், நிச்சயம் கிடைக்கும் என்பது உறுதி. ஆனால், எப்போ என்பதுதான் கேள்விக் குறி....

*புவிதா, திருநெல்வேலி.*

**கேள்வி:–** பித்தா! அன்றைய பெண்களின் முகத்தை நிலாவுக்கு ஒப்பிட்டார்கள். ஆனால், இன்றைய பெண்களின் முகங்களை எதற்கு ஒப்பிடலாம்?

**பதில்:–** ஏன் இன்றைய பெண்களின் முகங்கள் எண்முக்கோணங்களாக மாறிவிட்டனவா? அதே வட்ட நிலவு முகம்தானே, என்ன அதிலே கொஞ்சம் ஐடெக்ஸ், லிப்ஸ்டிக், பச்சை, மஞ்சள் என்று ஏகப்பட்ட செயற்கைத் தனங்களால் பாதிப்புக்கள்தான். ஆனால், நிலவு மட்டும் என்ன ஒழுங்காகவா இருக்கிறது. எத்தனை விண்கலங்கள, செயற்கைக் கலங்கள் எல்லாம் இறங்கி ஏறி பாதிக்கப்பட்டுப் போயிருக்கிறது. எனவே அது இதற்குச் சமனாகிவிட்டது.



*பு.வாசன் –புத்தளம்*

**கேள்வி:–** பித்தா! பல இளம் பெண்கள் – கிழவர் மாருடன் ஜாலியாகத் திரிகிறார்களே... ஏன்?

**பதில்:–** கோழி குருடா இருந்தாலும்– குழம்பு ருசியாக இருக்கிறது போலும்...

*செ.மதிவதனி, பெரிய போறுதீவு.*

**கேள்வி:–** உம்மை மனைவி கொடுமை படுத்துவதாகச் சொல்கிறீர். அப்படியென்றால் அவரை விட்டுவிட்டு வாரும். உம்மை நான் திருமணம் செய்யத் தயாராக இருக்கிறேன்?

**பதில்:–** அம்மாடி... உங்கள் ஆதரவுக்கு நன்றி. ஆனால், கொதிக்கும் எண்ணெய் சட்டியிலிருந்து தப்பி அடுப்புக்குள்ளே விழ நான் தயாரில்லை.

*ஐ.மப்ரூப், கல்பிட்டி.*

**கேள்வி:–** பித்தா! குடிப்பதால் தீமைதான் கிடைக்கும் – நன்மை ஏதும் கிடைக்காதெல். கிறேன் நான். நீர் என்ன சொல்கிறீர்?

**பதில்:–** ஏன் நன்மை கிடைக்காது... உதாரணமாக விஜய், அஜித், மாதவன் என்று மூன்று பேரை எடுத்துக் கொள்வோம். மூவரும் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறார்கள். அந்த நிறுவனத்தின் அடுத்த முகாமையாளராக இந்த மூவரில் ஒருவர் தான் நியமிக்கப்படப் போகிறார் என்று பேச்சு அடிபட்டுக்கொண்டிருந்தது. நிறுவனம் மூவரில் முகாமையாளர் பதவிக்கு யார் சிறந்தவர் எனத் தெரிவு செய்வதற்காக மூவரையும்கண்காணித்துக்கொண்டிருந்தது. அதில் அஜித் குடிப்பழக்கம் உள்ளவர் என்பதால் அவருக்கு முகாமையாளர் பதவியை அந்த நிறுவனம் வழங்கவில்லை. அதே போல் மாதவனுக்கு குடிப்பது பழக்கமாக இல்லாவிட்டாலும் 'ஒருநாள் பார்ட்டி ஒன்றுக்கு' சென்றபோது நண்பர்கள் வற்புறுத்தியதால் கொஞ்சம் குடித்துவிட்டு ஏகப்பட்ட அட்டகாசம் பண்ணிவிட்டார். அதனால் அவரது முகாமையாளர் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. இறுதியாக விஜய்க்குதான் முகாமையாளர் பதவி கிடைக்கிறது. இப்படிப் பார்க்கும்போது குடியால் விஜய்க்குக் கிடைத்தது நன்மை தானே.

*விஜி, உடுவில்.*

**கேள்வி:–** பித்தா எங்கள்! பெண் விடுதலை என்று பெண்கள் போர்க்கொடி தூக்குகின்றார்களே. உண்மையில் ஆண்கள் அல்லவா பெண்களுக்கு எதிராக ஆண் விடுதலை வேண்டி போர்க்கொடி தூக்க வேண்டும்?



**பதில்:–** உண்மைதான், நியாயம் தான், நிச்சயமாகத் தூக்க வேண்டும்தான். ஆனால், கொடியை தூக்கி போராட்டம் நடத்திவிட்டு – வீட்டுக்கல்லவா போக வேண்டும். அந்த துணிச்சல் யாருக்கு வரும்.

*இ.வனிதா, வட்டகச்சி.*

**கேள்வி:–** பித்தா! காதல் இல்லாமல் வாழ்கக்கை இருக்கா?

**பதில்:–** காதல் இல்லாமல் வாழ்க்கை இல்லைதான். ஆனால், காதல் உள்ள வாழ்க்கையில் நிம்மதி இல்லை.

*ஜே.பித்துப்பிரியன், திரியாய்.*

**கேள்வி:–** பித்தா! இன்றைய சினிமாப் பாடல்களில் நல்ல கருத்துக்கள் சொல்லப்படுகின்றனவா?

**பதில்:** என்னத்தைச் சொல்கிறார்கள். ஒரு பாடல் கேட்டேன், 'சிறிய கல்லை கண் இமைக்கு முன் வைத்துப் பார். பெரிய மலையாய் தெரியும். பெரிய மலையை தூரத்தில் பார்த்தால் சிறிய கல் போல் தெரியும்'. அதேபோல், 'துன்பங்களை தூரவை... இன்பங்களை கண் இமைக்கு முன் வை', என்றொரு பாடல் வரி அடடா... என்ன வரிகள் என்று திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் போது இன்னொரு பாடல். 'கட்டு ராஜா.... இவளை கட்டு... இவள் கிடைக்க வில்லை என்றாள் – காத்திருந்து இவள் மகளைக் கட்டு, இந்தப் பாடலை கேட்டவுடன் அதிர்ந்து போனேன்.. சினிமா கவிஞர்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.. பாலையும் கொடுத்து – விஷத்தையும் கொடுக்கிறார்கள்.

*ஆ.வையாபுரி, அச்சுவேலி.*

**கேள்வி:–** இந்த வார ஜோக்கை எனது பேருக்குத் தர முடியுமா?

**பதில்:–** இது என்ன நிவாரணமா உமது பேருக்குத் தர.. சரி இதோ பிடியும்.

பாடசாலை ஒன்றுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

குரல்: கந்தசாமி மாஸ்டர் இருக்கிறாரா?

கந்தசாமி மாஸ்டர்: நான் கந்தசாமி மாஸ்டர் தான் பேசுகிறேன். என்ன விடயம் சொல்லுங்கள்.

குரல்: மாஸ்டர் – உங்கள் வகுப்பில் படிக்கும் முத்துவிற்கு உடம்பு சரியில்லை. ஆனபடியால் அவன் இன்று பாடசாலைக்கு வரமாட்டான்.

கந்தசாமி மாஸ்டர்: பரவாயில்லை.. நீங்கள் யார்பேசுகிறீர்கள்.

குரல்: என்னுடைய அப்பா பேசுகிறார் மாஸ்டர்.

*ஆ.நிமல், புதுக்குடியிருப்பு.*

**கேள்வி:–** பித்தா: அரைகுறை ஆடைகளுடன் வீதியால் செல்லும் பெண்களைப் பார்த்து, எனது நண்பன் அங்கே பார் தெரிகிறது என்று என்னைத் தட்டிக் காட்டுகிறான். நானோ அதனைப் பார்ப்பதில்லை என்று நினைக்கிறேன். ஆனால் பாாக்காமல் இருக்க முடியவில்லை. இதில் தப்பு பண்ணுவது யார்? அரைகுறை ஆடைப் பெண்களா? தட்டிக் காட்டிய நண்பனா?



**பதில்:–** உமக்கு கண் இருக்கிறது பார்த்தீர்– நண்பனுக்கு கை இருக்கிறது தட்டிக் காட்டினான். அவையெல்லாம் தப்பிலே சேர்த்தியில்லை. ஆனால், சொந்த உடம்பை Showcase ஆக்கி இளைஞர்களின் உள்ளங்களைச் சேறாக்கும் இந்த அரைகுறை அழகிகளின் பக்கம்தான் தப்பே.

அது சரி பார்த்தீரே ஏதாவது தெரிந்ததா? நானும்தான் இந்த அரைகுறைகளைத் தொங்கித் தொங்கி, குனிந்து நிமிர்ந்து எல்லாம் பார்க்கிறேனே, ம்ஹூம் எதுவுமே தெரியமாட்டேன் என்கிறதே.

*எம்.ஹரீதா அருஸா, திஹாரிய.*

**கேள்வி:–** வீட்டுவேலைகளில் தாய்க்கு உதவி செய்யாமல் இரவிலும், பகலிலும் டி.வி.பார்த்துக்கொண்டு பொழுதுபோக்கும் கன்னியருக்கு ஏதாவது புத்திமதி சொல்வீரா பித்தா?

**பதில்:–** கன்னியர்காள்! உங்கள் டி.வீ பெட்டியின் சத்தத்தைக் கொஞ்சம் குறைந்து விட்டு அடியேன் சொல்வதைக் கேளுங்கள்... நீங்களும் ஒரு காலத்தில் தாயாகவோ, மாமியாகவோ போகிறீர்கள். அப்போது உங்கள் பிள்ளைகளோ, மருமகள்களோ உங்களுக்கு உதவி எதுவும் செய்யாமல் ரீ.வீ. பார்த்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்... சிந்தித்துப்பாருங்கள் . . . . போதுமா அருஸா..... ஏதோ நீங்கள் கேட்டதுக்காக புத்திமதி சொல்லிவிட்டேன். இதெல்லாம் எங்கே... யாருக்கு உறைக்கப்போகிறது.

*ஐ.துவாரகன், இணுவில்.*

**கேள்வி:–** பித்தா! காதலித்த பெண்ணையே கல்யாணம் முடிப்பது நல்லதா? அல்லது காதலித்த பெண்ணை விட்டு விட்டு வேறு பெண்ணைக் கல்யாணம் முடிப்பது நல்லதா?

**பதில்:–** காதலித்த பெண்ணையே கல்யாணம் முடிப்பது என்பது கிணறு என்று தெரிந்தும் – அதிலே வீழ்வது போன்றது. இன்னொரு பெண்ணை கல்யாணம் முடிப்பது என்பது கிணறு என்று தெரியாமல் தவறி வீழ்வது போன்றது.

*பி.வாசுதேவன், நவாலி.*

**கேள்வி:–** பித்தா : உம்மை நினைத்தால் சீ.... தூ.... என்று துப்பவேண்டும் போல் இருக்கிறது. வேறென்ன மனைவியிடம் அடிவாங்குவது என்பது எவ்வளவு கேவலமான விடயம். அதை போய் பெரிய கெட்டித்தனமாக ஊர் முழுவதும் தம்பட்டம் போட்டு ஆண்களுக்கே அவமானச் சின்னமாக நடந்துகொள்கிறீரே?

**பதில்:–** நான் எனது சொந்தமனைவியிடம் அடிவாங்குகிறேன். தம்பட்டம் போட்டுக் காட்டுகிறேன். ஆனால் ஊரிலே, நாட்டிலே எத்தனை பேர் பக்கத்து வீட்டுக் காரனின் மனைவிமாரிடம் அடி வாங்கிவிட்டுத் தெனா எவட்டாகத் திரிகிறார்களே அவர்களை எல்லாம் விட்டுவிடும் என்னை மட்டும் அவமானச் சின்னம் என்று சொல்லும்.



*என்.குருபரன், கருநாட்டான்கேணி.*

**கேள்வி:–** அன்பின் பித்தா! ஆண்களின் கண்ணீரை விட, பெண்களின் கண்ணீருக்கு சக்தி அதிகமாமே ஏன் பித்தா?



**பதில்:–** ஆண்களின் கண்ணீரால் அடுத்து நடக்கப்போவது எதுவுமில்லை.. ஆனால், பெண்கள் கண்ணீர் விட்டால் வீட்டிலே பூகம்பமே வெடிக்கும்.... அடுப்பு எரியாது... அதற்கு அடுத்த... கில்பா... விடயங்கள் எதுக்கும் அனுமதி கிடைக்காது.. இவ்வாறு ஏகப்பட்ட ஸ்ரைக்குகளினால் குடும்பத்தில் வழமையான நிலை ஏகத்துக்குப் பாதிக்கப் படும். இதனால் அந்தக் கண்ணீருக்கு மரியாதை அதிகம், அதனால் சக்தியும் அதிகம்.

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை செப்டம்பர் 05 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:–** பிள்ளைகளின் காதலை பெற்றோர்கள் ஏற்காததற்கு காரணம் யாது?

**பதில்:–** தாம் செய்த தவறினை பிள்ளைகளும் செய்துவிடக் கூடாது என சில பெற்றோர் எண்ணுவதனால்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு– 14.

---

## பித்தனின் கேள்வி

**கேள்வி:–** ஜனாதிபதியின் கட்சிதலைவர் பதவி விலகலால் நாட்டிற்கு நன்மை ஏதும் கிடைக்குமா?

## வாசகர் பதில்கள்

*சங்கீதா, மட்டக்களப்பு.*

கட்சித்தலைமைப் பதவிலியிருந்துதான் விலகினாரே தவிர தந்திரோபாயத்தனத்திலிருந்து இன்னும் விலகாததால் நாட்டுக்கு நன்மை இல்லை என்பது உங்களுக்கு விளங்கவில்லையா?

*ரீ.அஞ்சலோ, கல்முனை.*

எந்தப் பதவியிலிருந்து விலகினால் என்ன, ஜனாதிபதிப் பதவியிலிருந்து இன்னும் விலகவில்லை ஆதலால் பாதகமானதுதான் பதில்.

*அபிராமி, கொழும்பு 13.*

கடந்தவாரம் குருமாற்றம் நடைபெற்றதனால் பதவி விலகியமை சிலவேளைகளில் சாதகமானதாய் அமைந்துவிடலாம் என்று நம்புகின்றேன்.

*டெரிக், கொட்டாஞ்சேனை.*

நம்நாட்டுக்கு நன்மை வரும் என்ற நம்பிக்கை உமது, மனதில் இருந்தால் சிந்தனையை மாற்றிக்கொள்ளும்.

*குருசாமி, யாழ்ப்பாணம்.*

எவர் எப்பதவியிலிருந்து விலகினால் என்ன? தேரர்களும், தாடிக் காரர்களும் இருக்கும் வரை சாதகம் சாத்தியம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சுதந்திரம் எதுவரை?

பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும். பெண் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கோஷமிட்டு பெண் சமுதாயம் முன்னேறப் பாடுபடும் பெண்கள் திடீரென்று பாதை மாறி அவர்களை ஆண்களோடு ஒப்பிட ஆரம்பித்தனர். அங்கே தான் ஆரம்பித்தது பெண்களுக்குப் பிரச்சினைகள்.

ஆண்களையும், பெண்களையும் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளவே இயற்கை படைத்திருக்கிறது. ஆண்களுக்குச் சமமானவர்கள் பெண்கள் என்பதை நிரூபிக்க நாம் ஏன் ஆண்களைப் போல் நடக்க வேண்டும்? பெண்களாக இருப்பதில் தவறு தான் என்ன?

''நீ பெண் என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஓர் ஆண் அளவுக்கு திறமைசாலி'', ''இவள் என் பெண் இல்லை. என் மகன் போல் அவ்வளவு உதவியாக இருக்கிறாள்.''

இப்படிப்பட்ட வாக்கியங்களை நாம் தினமும் கேட்கிறோம்.

அலுவலகத்தில் வேலை செய்தாலும், வீட்டு வேலைகளை நாம் தானே செய்ய வேண்டும்? பெண் பணமும் சம்பாதிக்கிறாள், அதே நேரம் வீட்டு வேலையையும் செய்து குழந்தையையும் சமாளிக்கிறாள். எதைத்தான் அவள் செய்யவில்லை?


பெண் விடுதலைப்போராட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் ஆண்களோ என்று கேட்கத் தோன்றுகின்றது. எவ்வளவுதான் செய்தாலும் பெண்களைச் சமமாக நடத்த மறுக்கிறார்கள் ஆண்கள். தமது சம்பளத்தை விட மனைவி அதிகம் வாங்கினால் அவர்களுக்கு உளரீதியான தாழ்வு மனப்பான்மை வந்துவிடுகிறது. சமுதாயக் கட்டுப்பாடு என்றும் பெண்களை அடக்கி வைக்கிறது.

வெட்கப்படுவதும், சேலை கட்டுவதும், இன்னும் பல மென்மையான உணர்வுகளின் பிரதிபலிப்பாக இருந்தவள் பெண். ஆனால் இப்போது பெண் பெண்ணாக இருக்கவே தயங்குகிறாள்.

ஆண்களுக்கு நிகராக உடை அணிந்து, அவர்களைப் போல் நடப்பதும், பேசுவதும் தான் பெண் முன்னேற்றமா?

இந்தியாவில் பெண் சிசுக்கொலை எவ்வளவோ குறைந்துவிட்டதே என்று பலர் சொல்லலாம். குறைந்ததற்குக் காரணம் பெண் முன்னேற்றம் இல்லை. கருவிலேயே பெண் என்று கண்டுபிடித்து அதை கொன்றுவிடுவதனால் தான்.

என்னதான் இருந்தாலும் விரும்பியோ, விரும்பாமலோ இன்றும் ஆண்களின் நிழலில் தான் பெண்கள் வாழ்கிறார்கள் என்பது தான் உண்மை.





**இவ்வார பொன்மொழி**

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதியில் வெற்றிக்கு உரியவர்கள்
ஜான்சன்

# குழந்தைப் பாக்கியம் தரும் மாதுளை

ஆதி மனிதனின் முதல் உணவான பழங்கள் எமக்குரிய உடல் வளர்ச்சியை அளித்து, உடல் உறுப்புகளைச் சீராக வைத்து, நாம் ஆரோக்கியத்துடன் வாழ வழி வகுக்கின்றன என்பது எல்லோரும் அறிந்தது தான் என்றாலும், மாதுளம்பழம் இதில் தனிச்சிறப்புப் பெற்றது என்பதை மறுக்க முடியாது. தினமும் மாதுளம் பழம் சாப்பிடுங்கள். அது உங்கள் குடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றும். உலகத்தில் பெருகும் வெறுப்பு, பகைமை போன்ற தீய குணங்களை வெளியேற்றி விடும் என்கிறார் நபிகள்.



மாதுளம் பழம் மட்டுமன்றி பழத்தின் தோல், விதைகள் மற்றும் மாதுளம் மரத்தின் வேர், இலைகள், பூக்கள் அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவை தான்.

மாதுளம் பழம் இரைப்பைக் கோளாறுகளை குணப்படுத்துவதுடன் இரத்தத்தையும் சுத்தப்படுத்துகிறது. வயிற்றுப்புண், ஆறாத காயம் ஆகியவற்றுக்கும் மாதுளம்பழம் சிறந்த மருந்தாகும். கல்லீரல், இதயம், சிறுநீரகம் சிறப்பாக வேலை செய்யவும் மாதுளம்பழச்சாறு பயன்படுகிறது. நெருப்புக் காய்ச்சல் தீவிரமாக இருந்தால் காய்ச்சல் குறைய மாதுளம்பழச்சாறு உதவுவதுடன், காசநோய் போன்ற தொற்றுநோய்க்கிருமிகள் உடலுக்குள் சென்றுவிடாமலும் தடுக்கிறது. காய்ச்சல் நேரத்தில் சிலருக்கு தாகமாக இருக்கும். மாதுளம்பழச்சாறு இதைத் தணிப்பதுடன் நோயாளிகளுக்கு பசியையும் தூண்டும்.

மலத்துடன் இரத்தம் வெளியேறினால் 50மில்லி லீட்டர் மாதுளம்பழச்சாறு அருந்தினால் போதும். உடனடியாகப் பலன் கிடைக்கும். மாதுளம்பழச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமடையும். இஞ்சிச்சாறு கலந்து சாப்பிட்டால் அஜீரணம், இருமல், சளி போன்ற வியாதிகள் குணமடையும்.

இது பெண்களுக்கு மலட்டுத்தன்மையைப் போக்கி குழந்தைப் பாக்கியம் அளிக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மாதுளம்பழச் சாற்றை பெண்கள் தொடர்ந்து பருகி வந்தால் கருப்பை பலப்படும். கருப்பைப் பலவீனத்தால் ஏற்படும் குறைப்பிரசவம் தவிர்க்கப்படும். கருப்பையில் சிஸ்ட் எனப்படும் மரு வராமல் தடுக்கும். மாதுளம்பழத்தின் தோல் கருப்பைச் சுவர்களைப் பலப்படுத்தும்.

மாதுளம் இலை பெண்களின் மாதவிலக்குப்பிரச்சினைகளுக்கு முடிவுகட்டும் அருமருந்தாகும். மாதுளை இலையை அரைத்து நெல்லிக்காய் அளவு மோரில் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். 3 வேளை சாப்பிட்டாலே பலன் தெரியும்.

எல்லாப் பழங்களையும் விட அதி விரைவில் ஜீரணமாவது மாதுளம்பழந்தான். இது தாகத்தைத் தணித்துக் களைப்பைப் போக்கி, புத்துணர்ச்சி அளிக்கும் என்பதுடன் எமது அறிவுத்திறனையும் அதிகரிக்கச் செய்யும். எனவே மாதுளம்பழத்தைத் தவறாமல் சேர்த்துக்கொள்ளுங்கள்.

# தொட்டுப் பேசினால் ஆரோக்கியம்!

நாம் எத்தனையோ இடங்களுக்குச் செல்கிறோம். அங்கு எத்தனையோ நபர்களைச் சந்திக்கிறோம். அதில் பலரைப் பலதடவை சந்தித்தாலும் கூட கூடிய நெருக்கம் ஏற்படுவதில்லை. ஆனால், சிலர் ஒருமுறை அறிமுகமானால் போதும். மறுமுறை பார்க்கும் போது மிகவும் நெருக்கமானவர்களாக மாறிவிடுவார்கள். அப்பொழுதெல்லாம் இயல்பாகவே கை குலுக்கல் போன்ற சம்பிரதாயமான பழக்க வழக்கங்கள் நிகழ்ந்துவிடும்.

இந்தத் தொடுதல் உணர்வானது சிறந்தது என்று கூறப்படுகிறது. யாரைப் பாராட்டினாலும் கைகளைப்பிடித்தோ, முதுகில் தட்டியோ அல்லது அணைத்தோ அன்பைப் பரிமாறுங்கள். இது பெண்களுக்குப் பெண்கள், ஆண்களுக்கு ஆண்கள் என்ற நிலையில் அமைவது சிறப்பானது.

இதனால் சம்பந்தப்பட்டவர்களின் உடலில் ஆக்ஸிடாக்ஸின் என்ற தன்மை அதிகரிக்கிறது. இதனால் அன்பு உணர்வாகப் பொங்கிப் பிரவாகிக்கிறது. எமக்கும் பக்க பலமாக ஆட்கள் இருக்கிறார்கள் என்ற மனத்திடம் புது உத்வேகத்தைத்தருகிறது.



இதனால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிப்பதாகக் கூறுகிறார்கள். இது மாதிரியான கூடுதல் ஸ்பரிசம், தொடுகிறவர்களுக்கும் உண்டு என்பதுதான் இதன் சிறப்பம்சம்.

மனச்சோர்வால் வாடியவர்களை இம்முறையால் குணப்படுத்தியிருப்பதாக மனோதத்துவ நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். உறவு முறையில் அரவணைத்து ஆறுதல் கூறும் பழக்கம் பல குடும்பங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இந்தத் தொடு பரிமாற்றத்தை கூடுதல் அன்புக்காக நாடுபவர்களிடமும், வலுக் கட்டாயமாக வெளிப்படுத்த முனைவோரிடமும் மட்டும் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

இந்த மாதிரியான தொடுதல் பரிமாற்றத்தால் இதயம் நன்கு துடிக்கிறது. மன அழுத்தம் குறைகிறது. அதுவரை வாழ்வில் நம்பிக்கையில்லாதவர்களுக்கும் கூட மறுமலர்ச்சி ஏற்படுத்துகிறது என்கிறார்கள் நிபுணர்கள்.

நல்ல விடயம் தான். நல்லதுக்கே பயன்பட வேண்டும் என்பது தான் இதில் முக்கியம்.




*பாதங்களைப் பராமரிக்க...*

வாய் அகன்ற பாத்திரத்தில் மிதமான சுடு நீரில் ஷாம்பு போட்டுக் கலக்கி அதில் பாதங்களைப் பத்து நிமிடம் ஊற வைக்க வேண்டும். பிறகு ஸ்கிராப்லர் போட்டு நன்றாகத் தேய்த்து வெடிப்புகளைச் சுத்தம் செய்ய வேண்டும். பின்பு நகத்தை வெட்டிச் சுத்தப்படுத்த வேண்டும்.

நாம் பிளீச்சிங், பேஷியல் செய்வதை விட பாதங்களைப் பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும். கடைசியாக அக்குபஞ்சர் முறையில் மசாஜ் செய்ய வேண்டும். இதனால் இரத்த ஓட்டம் நேராகும். தூக்கமின்மை குறைந்து பரபரப்பு விலகும். பாத பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும். இதே முறையில் கைகளுக்கு மெனிக்கியூர் செய்து கொள்ளலாம்.

*கண்களைப் பராமரிக்க...*

அதிக ஒளியையோ, பிரகாசத்தையோ நேரடியாகப் பார்க்காதீர்கள்.

தூசு மற்றும் மாசுக்களிலிருந்து கண்களைப் பாதுகாத்திடுங்கள்.

நீண்ட தூரப் பிரயாணம், அலைச்சல்களுக்குப்பிறகு குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள்.

கண்களை மேலும், கீழும், இடமும், வலமுமாகச் சுழற்றி கண் பயிற்சி செய்யுங்கள்.

பேர்பியூம் பயன்படுத்தாதவர்கள் சிறிது வாசனைப் பவுடரை சட்டையின் இரு அக்குள் பகுதிகளிலும் பூசிக் கொண்டால் சட்டையிலிருந்து வியர்வை நாற்றம் வராது.

முத்து நகைகளைப் பயன்படுத்தும் முன்பும், பின்பும் மிருதுவான துணியில் வைத்து அதற்குரிய பெட்டியில் பாதுகாப்பாக வையுங்கள். முத்து நகைகளை அணிந்திருக்கும் போது அசிட் போன்ற திரவங்களைப்பயன்படுத்தாதீர்கள். வண்ணத் துணிகள் அல்லது காகிதங்களைக் கொண்டு முத்துக்களைத் துடைக்காதீர்கள்.

# சமையல் குறிப்பு

## இறால் கொழுக்கட்டை



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| இறால் | 1கிலோ |
| வறுத்த அரிசி மா | 1/2 கிலோ |
| தேங்காய்த்துருவல் | 2தம்ளர் |
| பச்சை மிளகாய் | 3 |
| சீரகம் | 1/2 கரண்டி |
| மஞ்சள் தூள் | 3 சிட்டிகை |
| மிளகாய்த்தூள் | 1/4 தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம் | தேவையான அளவு |
| முட்டை | 1 |
| கறிவேப்பிலை | தேவையான அளவு |
| உப்பு | தேவையான அளவு |

**செய்முறை**

முதலில் சீரகத்தை அரைத்து எடுத்துக் கொள்ளவும். இறாலைச் சுத்தம் செய்து, தண்ணீர் இல்லாமல் பிழிந்துகொள்ளவும். இறாலில் மஞ்சள் தூள், நறுக்கிய வெங்காயம், சீரகம், மிளகாய்த்தூள், உப்பு, கறிவேப்பிலை கலந்து வேக விடவும். இறால் வெந்ததும் இறக்கி ஆற விடவும். ஆறியதும் கலவையை அரிசிமாவில் போட்டுப்புரட்டவும். தேங்காய்த் துருவலை பால் எடுத்து, சிறிது சிறிதாக அதில் தெளிக்கவும். அதன் பின் நறுக்கிய பச்சை மிளகாய், மீதி வெங்காயத்தில் முட்டையை அடித்து ஊற்றிக் கலக்கவும். அதை இறால் கலவையில் ஊற்றவும். கலவை பொலபொலவென்று இருக்கும். அதைக் கொழுக்கட்டையாகப்பிடிக்கவும்.

இட்லி தட்டில் இந்த இறால் கொழுக்கட்டைகளை அடுக்கி, ஆவியில் வேக வைத்து இறக்கவும். சூடான இறால் கொழுக்கட்டை தயார். இதைச் சுவைத்துப் பாருங்கள். அற்புதமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமல் போகும் கறுப்புத் தங்கம்

எண்ணிப் பார்க்கும் போது, எண்ணற்ற நாளாந்தப் பாவனைப் பெருட்களின் பின்னால் எண்ணெய் என்று ஒன்றிருப்பது எமக்கு திடமாகத் தெரிகின்றது. இன்றைய மனிதருக்கு அடிக்கடி தேவைப்படும் மருந்துப் பொருட்கள் ஆகட்டும் அல்லது எமது பயணங்களுக்கு பல ரூபங்களில் கைகொடுக்கும் விமானங்கள், ரயில்கள், மோட்டார் வாகனங்கள் போன்றவைகள் ஆகட்டும் அல்லது வீடுகளை நிறைக்கும் தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஆகட்டும் இவற்றின் உற்பத்தியின் பின்னணியில் எண்ணெய் என்று ஒரு முக்கிய பொருள் இருப்பது எமக்கு நன்றாகவே தெரிகின்றது. எம்மைச் சுற்றி நிறைந்து போயுள்ள போக்குவரத்து நெரிசலில், 90 சதவீதமானவை எண்ணெய் என்று ஒன்றை நம்பித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற தகவல் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்காது என்றே நம்புகின்றோம்.

இப்படி எண்ணெய் என்பது எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து விட்ட நிலையில் சேமிப்பில் இருக்கும் எண்ணெய் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து, நாம் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை வரப்போகின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

எண்ணெய் மீண்டும் தலைப்புச் செய்தியாக ஆரம்பித்திருக்கின்றது. கடந்த 13 வருட காலத்தில் என்றும் இல்லாதவாறு, மசகு எண்ணெயின் விலை, அதிகரித்து இருக்கின்றது.

OPEC எனப்படும் அமைப்பிலுள்ள எண்ணெய் உற்பத்தி நாடுகள், தமது நாளாந்த உற்பத்தியை ஏற்கனவே எடுத்த முடிவின்படி குறைத்துக்கொண்டிருக்கின்றன.

ஒப்பெக் என்பது 11 எண்ணெய் உற்பத்தி நாடுகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும். உலகின் 40 வீதமான எண்ணெய் உற்பத்தியை, இந்தப் 11 நாடுகளும் மேற்கொள்வதால், இந்த அமைப்பு எடுக்கும் முடிவு எப்பொழுதுமே எண்ணெய் விடயத்தில் உலக நாடுகளில் தாக்கம் ஏற்படுத்தத் தவறுவதில்லை.

நாளாந்தம் தம்வசம் உள்ள மோட்டார் வாகனங்களையே பயணத்துக்கு நம்பியிருக்கும் அமெரிக்கர்கள், விஷம் போல பெட்ரோல் விலை ஏறப்போவதை எதிர்பார்க்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதிக்கு இரத்த அழுத்தமும் அதிகரிக்கப் போகின்றது.

இங்கே ஒரு கேள்வி பிறக்கின்றது. உலக நாடுகளில் இருப்பிலுள்ள எண்ணெய் எவ்வளவு காலப் பாவனையைத் தாக்குப்பிடிக்கப் போகின்றது?

இதற்குப் பதில் காணுமுன்பு, தினமும் எவ்வளவு எண்ணெய் உலகெங்கும் உபயோகிக்கப்படுகின்றது என்று அறிவது அவசியமாகின்றது.

எண்ணெய் என்பது பீப்பாய்கள் மூலமே அளவெடுக்கப்படுகின்றது. 119 லீட்டர் அளவு திரவம் ஒரு பீப்பாய்க்குள் உள்ளடங்குவதுண்டு. தினமும் 75 மில்லியன் பீப்பாய் அளவு எண்ணெய் உலகெங்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. 2015 ஆம் ஆண்டளவில், இந்த அளவு 90 மில்லியன் பீப்பாய்களாக உயரும். இந்தப் பாவனை அளவு 2030 ஆம் ஆண்டளவில், 120 மில்லியனாக அதிகரிக்கும் என்று கருதப்படுகின்றது. இந்தத் தகவலை எமக்கு IEA எனப்படும் அமைப்பே அறியத் தருகின்றது.

சேமிப்பிலுள்ள எண்ணெய் அளவை நோக்கினால், அது இன்னும் 40 வருடங்களுக்குத் தாக்குப்பிடிக்கலாம் என்கிறார்கள். ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சி என்பது படுவேகமாக இருப்பதால் இன்னும் பத்து வருடங்களில் வளரும் தொழில் வட்டம், அதிக எண்ணெய்க் கிணறுகளைக் கண்டுபிடிக்க உதவலாம் என்கிறார் ஒரு அதிகாரி. இதற்கு உதாரணமாக, பல புதிய நாடுகள் இப்பொழுது எண்ணெய் அகழ்வை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதை உதாரணமாகக் கூறலாம். அஜர்பைஜான், ரஷ்யா, அங்கோலா போன்ற நாடுகளிலும் எண்ணெய் இருப்பது, முன்பு யாருமே அறிந்திராத விடயம். இதுபோல இன்னும் ஒரு தசாப்த காலத்தில், வளர்ந்து வரும் தொழில்நுட்பம், வேறு சில புதிய நாடுகளில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடிக்கக் கூடும் என்று சுட்டிக் காட்டுகிறார் இந்த அதிகாரி.

ஒரு துளி எண்ணெயை உருவாக்குவதற்கு, கோடிக்கணக்கான வருடங்கள் எடுத்திருக்கின்றன. ஆனால், அதே துளி எண்ணெய், இப்பொழுது ஒரு வினாடியில் உபயோகிக்கப்பட்டு விடுகின்றது. இந்த வேகத்தில் தொடரும்போது, எண்ணெய் முற்றாக அழிந்து விடப்போகின்றது என்பது திண்ணம்.

இதே சமயம், இந்த எண்ணெய்க்குப் பதிலாக எதையாவது அறிமுகப்படுத்துங்கள். சூழல் நாசமாகின்றது. என்று பல அமைப்புகள் கூப்பாடு போடுகின்றன. இதில் குறிப்பிடத்தக்கது 'கிறீன் பீஸ்' எனப்படும் உலகறிந்த அமைப்பாகும்.


## வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.





ஹங்ரி பிளஸ்

பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290


## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



சின்னத்துரை ரஜீபன்

சின்னத்துரை, ரதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரஜீபன் தனது 3 ஆவது பிறந்தநாளை 30.08.2004 திங்கட்கிழமை லண்டனில் அவரது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார் அவரை லண்டனிலிருந்து வாழ்த்துவோர் அப்பா, அம்மா, பெரியண்ணா ராஜீவ், சின்னண்ணா ஈஸ்வரன், பெரியக்கா ராஜிகா, சின்னக்கா ரஜிதா மற்றும் - சுந்தர் மாமா, சுஜீப் அண்ணா, பன்னீர் அண்ணா, கமல் அண்ணா, ரகு மாமா, கொழும்பிலிருக்கும் தயா அண்ணா ஆகியோர் ரஜீபனை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்
அப்பா K. சின்னத்துரை
லண்டன்


## PROFESSIONAL COMPUTER COURSES

- DIPLOMA IN MULTI MEDIA (With Video Mixing)
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE (Online)
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- DIPLOMA IN INTERNET TECHNOLOGY
- DIPLOMA IN AUTOCAD ( With New South Wales University Syllabus And Guide Books)

அனைத்து மாணவர்களுக்கும்
FREE HANDOUTS
FOPPY DISKETTE
SOFTWARE CD & FREE COMPUTER CONSULTING
இவை அனைத்தையும் ஒன்றாகப் பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்

eTouch COMPUTER SYSTEM
The right way to touch IT
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA
T.P :- 021 4 590222

## EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies...
வானில் உங்கள் நண்பன்...



யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் ரொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

## Hotel Swarkka & Restaurant

Comfortable A/C, Non A/C Rooms
Quality & Tasty Food
Take Away
Comfortable A/C Dining Rooms



#33, Soosaipillaiyarkulam Road, Vavuniya. Tel: 0242221291 Mobile: 0777563991 E.mail:hotelswarkka@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது.